Follow Us


# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 60- பிலவ வருடம், ஆடி மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (15.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 05 0115886187 பக்கங்கள் 20 + 8 விலை ரூ.40

## 'வெடி'மணியம்



"கெடுகுடி சொல் கேளாது" எண்டுவினம். எங்கட சனம் திருந்திற மாதிரி இல்லை.

தெற்கில இருந்து கொரோனாவை வடக்குக்கு பரப்புறாங்கள் எண்டு போன கிழமை நான் புலம்பின்னான் எண்டு நினைக்கிறன்.

பிழையா நினைச்சுப்போட்டன்.

கொரோனா எண்டால் சும்மா தடிமன் காய்ச்சல் மாதிரித்தான் நினைக்குதுகள் பேச்சனம் கொஞ்சம்.

இந்தியாவில் கண்ணுக்கு முன்னால எத்தினை ஆயிரம் சனம் ரோட்டு ரோட்டா செத்துக்கிடந்ததை பாத்த பிறகும்;

வீம்புக்கு எங்கட சனம் மோட்டுத்தனமாக சில காரியங்களை செய்யுதுகள்.

கோயில் வாற வருசமும் இருக்கும். கடவுளும் அதுக்குள்ள பத்திரமாக இருப்பார்.

07

## நக்கல் நமசிவாயம்







உள்ளே... சிறப்பு இணைப்பிதழ்
உள்ளே... பக்கம் 06
உள்ளே... பக்கம் 08
உள்ளே... பக்கம் 12

# இரவு நேரங்களில் ஊரடங்குச் சட்டம்!

## அரசு தீவிர ஆலோசனை; விரைவில் அமுலுக்கு வரும்

*•நமது விசேட செய்தியாளர்*

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுத்துவரும் அரசு, அதன் ஓர் அம்சமாக மாகாணங்களுக்கிடையில் பயணத்தடையை விதித்துள்ள நிலையில், இரவு நேர ஊரடங்குச் சட்டத்தையும் அமுல்படுத்த ஆராய்ந்துவருகிறது.

02



தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் கொரோனாவால் மரணிப்போரின் சடலங்களை வீடுகளுக்கு எடுத்துச்செல்ல முடியாது. இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சவச்சாலைக்கு பெட்டியொன்று முச்சக்கரவண்டியில் கொண்டுவரப்பட்டதை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)







## செஞ்சோலையில் அஞ்சலிசெலுத்த பெற்றோருக்கு அனுமதி மறுப்பு

### 15 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் இராணுவம், பொலிஸ் தடை

*•வன்னி செய்தியாளர்*

முல்லைத்தீவு செஞ்சோலைப் பகுதியில் 2006 ஆம் ஆண்டு இலங்கை விமானப்படையினரின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 54 மாணவிகள்...

02

## அரசியல் செல்வாக்கால் வீடுகளில் நோயாளர்கள்

### வவுனியாவில் 10 இற்கும் மேற்பட்டோர் பிடிவாதம்

*•வவுனியா நிருபர்*

வவுனியாவில் கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்படாத நிலையில், 10 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பிராந்திய சுகாதார...

02

## இந்தியாவிடமிருந்து ஒட்சிசன் கொள்வனவு செய்யத் தீர்மானம்

இந்தியாவிடமிருந்து வாராந்தம் ஒட்சிசனை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊடக நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுக்கும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

02

## உள்ளத்தால் வழிபடுங்கள்; நல்லூர் நிர்வாகம் கோரிக்கை

கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக நாடு நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளதால், நல்லூர்க் கந்தனின் திருவிழாவில் அடியார்கள் கலந்துகொள்ள முடியாமையால், உள்ளத்தால் இறைவனை வழிபடுமாறு ஆலய நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் ஆலய நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாம் இப்போது பெரும் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்கின்றோம் என்பதைத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றோம். மேலும் பெரும் அவலச்சூழல் எம்மைச் சூழ்ந்துள்ளது.

எக்காலத்திலும் இல்லாதவாறு இவ்வருடம் வேலவன் நல்லூர்க் கந்தனின் திருவிழா பெரும்...

02

## வைத்தியசாலை கட்டில்களில் 50 வீதம் கொரோனா நோயாளர்களுக்கு ஒதுக்கீடு

அனைத்து வைத்தியசாலைகளிலும் தற்போது காணப்படும் கட்டில்களின் அளவில் 50 வீதத்தை கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

02





மக்கள் வங்கியின் விசேட வைப்புக் கணக்கு (SDA)

| நாணயம் | USD | GBP | EUR | AUD | CAD | SGD | JPY | HKD |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதிர்ச்சியின்போது 6 மாத காலத்திற்கு வட்டி | 4.25% | 3.50% | 3.00% | 3.50% | 3.15% | 2.30% | 1.01% | 1.50% |
| முதிர்ச்சியின்போது 12 மாத காலத்திற்கு வட்டி | 6.75% | 4.75% | 4.25% | 4.75% | 4.25% | 3.50% | 2.01% | 3.00% |

| நாணயம் | NZD | CHF | SEK | DKK | NOK | CNY | LKR |
|---|---|---|---|---|---|---|---|
| முதிர்ச்சியின்போது 6 மாத காலத்திற்கு வட்டி | 4.00% | 1.75% | 1.25% | 1.01% | 1.25% | 3.25% | 6.00% |
| முதிர்ச்சியின்போது 12 மாத காலத்திற்கு வட்டி | 5.10% | 3.00% | 2.30% | 2.01% | 2.50% | 4.50% | 7.25% |

2022 ஏப்ரல் 7 ஆம் திகதி வரையில் அனுப்பி வைக்கப்படும் பணத்தை வைப்பில் இடுவதற்கு கணக்குகளை ஆரம்பிக்கலாம்.

உங்கள் வசதிக்கேற்றவாறு பரந்த அளவிலான விரிவான வலையமைப்பையும் விரிவான டிஜிட்டல் அணுகு முறையையும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:
நதீஷா : +94 70 175 0294
ரேணுகா: +94 71 666 3111
nadeeshadt@peoplesbank.lk

அரச வங்கியின் பாதுகாப்பு

*நிபந்தனைகளுக்குட்பட்டது

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK The Bank of the People

People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

Fun BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.

TRC/D/PRO/20/10

• நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்.

Dialog எதிர்காலம் இன்றே.



மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்பு பிரதான பஸ் நிலையம் நேற்று (14) வெறிச்சோடிக் காணப்பட்டது.

(படப்பிடிப்பு: லலித் பெரேரா)

# கோவிட் தொற்றுக்குள்ளான இருவர் வவுனியாவில் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கோவிட் தொற்றுக்குள்ளான இருவர் மரணமடைந்துள்ளதாக மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொவிட் தொற்று காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கொவிட் சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு குறித்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய பெண் ஒருவரும், அம்பலாங்கொடவல பகுதியைச் சேர்ந்த 88 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு மரணமடைந்தவர்களாவர்.

அவர்களது உடல்களை சுகாதார கட்டுப்பாடுகளுக்கமைய தகனம் செய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டனர்.

# கொடுமையாகிய கொரோனா; வைத்தியர் ஒருவரின் கண்ணீர் பதிவு

அவிசாவளை ஆதார வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் நோயாளர்கள் நுளம்புகளைப் போல் செத்துமடிவதாக அங்கு பணியாற்றும் வைத்தியர் நஜித் இந்திக என்பவர் சமூக வலைத்தளத்தில் உருக்கமான பதிவொன்றை தரவேற்றம்செய்துள்ளார்.

அந்தப் பதிவின் சுருக்கம் வருமாறு,

அவிசாவளை வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் அதில் நான் பணியாற்றி வருகிறேன். என்னோடு 12 வைத்தியர்கள் கடமைபுரிகிறார்கள்.

இப்போது அந்தப் பிரிவு நிரம்பி வழிகிறது. நாற்காலிகளிலும், நிலத்திலுமென நூற்றுக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சைபெறுகிறார்கள்.

தொழிலில் மனஅழுத்தம் என்ற விடயத்தை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது எத்தனை வேதனையானது என்பதை இப்போது உணர்கிறேன்.

இவ்வளவு காலமும் சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள், அவர்கள் சிரமப்படும் விதம், ஒட்சிசனின் தேவைப்பாடு, அனுமதிக்கப்படுவோரின் வேதனை ஆகியன ஒரு வாரத்துக்குள் பெரும் மாற்றத்துக்குள்ளாகியுள்ளன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. முன்னரெல்லாம் நோயாளர்களை அடையாளம் கண்டு அவர்களின் நோய்த் தன்மைக்கேற்ப அனுமதிப்போம். ஆனால், இப்போது 30 முதல் 40 வயதுடையோரும் பெரும் வேதனையடைவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தேவையானோருக்கு ஒட்சிசன் கொடுத்து, இயந்திரங்களின் உச்சபட்ச பயன்பாட்டை வழங்குகின்றபோதிலும், கண்ணெதிரே பலர் மரணிக்கிறார்கள்.

நாற்பது வயது மதிக்கத்தக்க தாயொருவர் தன்னுடைய மகள் கண்முன்னே சுவாசிக்க முடியாமல் மூச்சுத் திணறி உயிரிழப்பதை பார்க்கிறார். ஒத்தாசையாக ஒட்சிசன் இயந்திரத்தை பாசத்துடன் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் கணவனிடம் வாய்பேச முடியாமல் கண்களைப் பார்த்தவாறே விடைபெறுகிறாள் மனைவி.

எத்தனையோ கனவுகளுடன் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட மனைவியை, தாதியர் மிக வேகமாக, படபடப்புடன் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் செல்வதை 27 வயதான கணவன் கண்ணீருடன் பேச்சுமூச்சின்றி பார்த்து நிற்கிறான்.

இவை அனைத்தையும் ஒரே நாளில் பார்க்கும்போது இதயத்தில் பெருஞ்சுமை ஏற்படுகிறது. அது மிகக் கடினமானது. நான் தூக்கமின்றி கண் விழித்துப் பணியாற்றுவதை விட இந்த வலி கொடுமையானது.

அதனையும் விட நோயாளர்கள் திடீரென மயங்கி விழும்போது, சுவாசிக்க முடியாமல் சிரமப்படும்போது 'ஏதாவது செய்து காப்பாற்றுங்கள்' என கண்ணீருடன் எங்களைப் பார்த்துக் கொண்டிருப்போருக்கு முகங்கொடுப்பதுதான்.

முன்பு இரண்டு நாட்களுக்கொரு முறை தான் ஒரு மரணம் நிகழும். ஆனால், இப்போது நாளொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து பேர் உயிரிழக்கிறார்கள்.

இதேநிலைமை இரண்டு வாரங்களுக்கு நீடிக்குமானால், நோயாளர்கள் ஒட்சிசன் இல்லாமல் நாற்காலிகளில், தரையில், முற்றத்தில் இறந்துவிழும் சூழ்நிலை உருவாகும். இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு நான் வீட்டுக்கு வந்தபின்னர் செய்தியில் பார்த்தேன். "என்ன நடந்தாலும் நாட்டை முடக்கமாட்டோம். தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்போம். கடவுள் பார்த்துக்கொள்வார்" என ஒருவர் சொல்கிறார்.

இயலுமானவரை எல்லோரும் பாதுகாப்பாக இருங்கள். மக்கள் நுளம்புகளைப் போல் செத்துமடிகிறார்கள் - எனப் பதிவேற்றம் செய்துள்ளார்.

## செஞ்சோலையில்...

உட்பட 61 பேரின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (14) இடம்பெறவிருந்த நிலையில், அஞ்சலி செலுத்துவதற்காக படுகொலை இடம்பெற்ற செஞ்சோலை வளாகத்துக்குச் சென்ற மாணவிகளின் பெற்றோர் இராணுவம் மற்றும் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

செஞ்சோலை வளாகத்துக்குச் செல்லும் வள்ளிபுனம் இடைக்கட்டு வீதி முழுவதும் இராணுவம், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் பெருமளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், வழமையாக நினைவேந்தல் இடம்பெறும் பகுதிக்கு படுகொலை செய்யப்பட்ட தங்கள் பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்த சென்ற பெற்றோர், அஞ்சலி செலுத்த விடாமல் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பூக்கள், மாலைகளோடு அஞ்சலி செலுத்த வந்த பெற்றோர் ஏமாற்றத்துடன் திருப்பிச் சென்றுள்ளனர். மேலும், அந்த வீதியால் செல்பவர்கள் பொலிஸார், இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டனர்.

## உள்ளத்தால்...

இக்கட்டின் மத்தியில் வெகு அடக்கமாக அமைதியாக நடைபெறுகின்றது.வேலவர் கூட வெளியில் நடமாட முடியாமல் தனது வீட்டுள்ளேயே இருக்கவேண்டிய நிலையையும் எம்மால் உணர முடிகின்றது.

பக்தர்கள் கந்தசுவாமியாரைத் தரிசிக்க முடியாது தவியாகத் தவித்து வேதனை கொள்வதையும் எம்மால் உணரமுடிகின்றது. வேலவரும் வேதனைக்குள்ளாகியே இருப்பர். அதே நேரம் இந்த வேதனையும், ஆதங்கமும் எமக்கும் உங்களைப்போன்று உண்டு.

இவ்வாறாக முருகன் அடியவர்கள் தரிசனமின்றி வேலவர் திருவிழாக்கள் அமைதியாக நடைபெறவேண்டிய சூழல் தோன்றியதன் பின்னணியை நாம் தெளிவாக உணர்ந்து, உள்வாங்கி எமது நடத்தைகளைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

கண்ணுக்குக் காட்சி தராத மனித இனத்தின் எதிரி ஒன்று இன்று உலகையே உலுக்கி ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது.

அதற்குள் எமது பிரதேசமும் மக்களும் விலக்குப் பெறமுடியவில்லை. வேகமாக உட்சென்று அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் காலமிது. எத்தனை தொற்றுக்கள், எத்தனை உயிரிழப்புக்கள்.

குண்டுவீச்சு விமானங்களால் தோன்றாத மனப்பயம், தொடர் எறிகணை வீச்சுக்களுக்கு கலங்காத உள்ளங்கள் இன்று தவித்துக் கிலி கொள்கின்றன.

பக்தகோடிகள் மத்தியில் ஆனந்தமாக ஆடிமகிழும் அலங்காரக் கந்தன் இவ்வருடம் தனது மகிழ்ச்சியை தவிர்த்து, பக்தர்களைக் காத்தருள்வதே என் முதல் பணியென ஆலயத்துள் அமைதி கண்டமைக்கு வேறு காரணம் எதுவும் காண முடியுமோ?

தேவஸ்தானத்தரிடமும், சுகாதாரத்துறையினரிடமும், மாநகரசபையினரிடமும், பொலிஸ்துறையிடமும் பக்தர்கள் நலன்கருதி இறுக்க மனநிலையைப் பேண வைத்து அந்தக் கொடூரத் தொற்றிலிருந்து எமைக் காத்தருள எம்பெருமான் ஆற்றிய செயல் கண்டு உளம் உருகாதார் யாருளர்.

இவற்றை நன்குணர்ந்து பொறுப்புடன் நாம் செயற்படுவோம்.வீட்டில் அமைதியாக இருந்து எம்பெருமானை மனத்திருத்தி வழிபாடு செய்வோம்.

அமைதியாக மனதை ஒருமுகப்படுத்தி இரு கண்களையும் இறுக மூடி, ஆசாரமாக எம்பெருமானை நினைவில் கொள்வோமானால் அவர் அங்கே தோன்று வார். பச்சை வண்ண மயிலில் அவர் அழகாக அசைந்தாடி வரும் காட்சி அங்கே தெரியும்.

அதனை வணங்குவோம். எமக்காகவும் எமது சமூகத்துக்காகவும், எம்மை துன்புறுத்தும் இக்கொடிய அரக்கன் எனும் இத்தொற்று எம்மைவிட்டுத் தூர விலக வேண்டுமெனப் பிரார்த்திப்போம். மனக்கண்ணில் அழகனைக் கண்டு வணங்கும் செயல்முறை அளவிலா ஆனந்தத்தை அளிக்கவல்லது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவிடமிருந்து...

அதற்கமைய, வாராந்தம் 100 மெட்ரிக் தொன் ஒட்சிசனைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கூறினார்.

கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு பயன்படுத்துவதற்காகவே இந்தியாவிடமிருந்து ஒட்சிசன் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அடுத்த வாரம் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதுடன், தேவை பூர்த்தியாகும் வரை கொள்வனவு முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, நாளாந்தம் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், சுகாதார ஒழுங்கு விதிகளை சட்டமாக்குவதற்கான வர்த்தமானியை நாளை வெளியிடவுள்ளதாவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார்.

## இரவு நேரங்களில்...

இதன்படி இரவு 11 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும், அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அக்காலப்பகுதியில் விலக்களிக்கவும் அரச மேல்மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

அதேசமயம் மக்கள் கூடும் இடங்களில் 25 வீத பங்கேற்பு அனுமதியை மட்டும் வழங்குவதற்கும், சமய மற்றும் கலை நிகழ்வுகளுக்கு கடும் கட்டுப்பாடுகளை விதிக்கவும் ஆராயப்பட்டு வருகிறது. நாளை வெளிவரவுள்ள விசேட வர்த்தமானியில் மேலும் பல விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

இதேவேளை முகக்கவசம் அணியாதோரை கைதுசெய்வது தொடர்பில் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய பொது இடங்களில் முகக்கவசம் அணியாமல் நடமாடும் நபர்கள் பிடியாணையின்றி கைதுசெய்யப்படுவார்கள் என பொலிஸ் ஊடக பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கிடையில் பிறப்பிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வைத்தியசாலை...

வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார பணியாளர்கள் இயலுமானவரை தனிப்பட்ட ரீதியில் கொரோனா நோயாளர்களைக் கண்டறிந்து, தகவல்களை உறுதி செய்து, சிகிச்சை வழங்குவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவட்ட ரீதியில் ஒரு மத்திய நிலையத்தை ஸ்தாபித்து, அனைத்து கொரோனா நோயாளர்களையும் சோதனைக் குட்படுத்தியதன் பின்னர், தொற்றுக்குள்ளானோரை அனுப்பி வைக்கக்கூடிய சிகிச்சை நிலையங்கள் தொடர்பில் தீர்மானிப்பதற்கான திட்டமொன்றை முன்னெடுப்பது குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

தற்போது கொரோனா நோயாளர்களை வைத்தியசாலைகளில் அனுமதிப்பதற்கும், அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு அழைத்துச் செல்வதற்கும் அம்பியூலன்ஸ் வண்டிகள் போதுமானதாக இல்லை என்பதால், கொரோனா நோயாளர்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதற்கு போதுமானளவு அம்பியூலன்ஸ் வண்டிகளை ஈடுபடுத்துவது குறித்தும் கலந்துரையாடலின் போது யோசனைகள் முன்வைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாதாந்த சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு செல்லும் 60 வயதிற்கு மேற்பட் டோருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் 60 வயதிற்கு மேற்பட்டோர் அபாய நிலையில் உள்ளதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு விரைவாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான அனைத்து செயற்பாடுகளையும் அமுல்படுத்தி வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், கிராமங்களுக்குள் மக்கள் தேவையற்ற விதத்தில் நடமாடுவதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிராமங்கள் அல்லது நகரங்களை அண்மித்த பகுதிகளில் பெருமளவான நோயாளர்கள் அடையாளம் காணப்படும் போது இவ்வாறான விடயங்கள் தெரியவருவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டார். இதனால் உயிரைப் பாதுகாப்பதற்கு, தற்போதைய அபாயமான நிலையை கருத்திற்கொண்டு பொறுப்புணர்வுடன் அனைவரும் செயற்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

## அரசியல் செல்வாக்கால்...

சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகளின் செல்வாக்கால் வீடுகளிலேயே தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டவர்களில் சிலர் சுகாதார திணைக்களத்துடன் தொடர்புடைய விடுதிகளில் தங்கியுள்ளவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், பிரபல ஹோட்டல் உரிமையாளர் எனப் பலர் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்களை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்ப சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்த போதிலும், சிலர் தாம் அங்கு செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள மாவட்ட மட்ட உயர் அதிகாரியும் அதற்கு உடந்தையாக செயற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவ்வாறு 12 பேர் வரையில் கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்படாது வீடுகளிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, அறிகுறிகள் அற்ற கொவிட் நோயாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சையளிப்பதற்கு சுற்று நிருபம் வெளியாகிய போதிலும், அந்தச்சுற்று நிருபத்திற்கு அமைவாக வவுனியா சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் வாகன மற்றும் ஆளணி வசதிகள் இல்லாமையால் வவுனியாவில் குறித்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. இந்நிலையில், குறித்த நோயாளர்களை உயர்மட்ட அழுத்தம் காரணமாக கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பவில்லை என தெரியவருகிறது.

ஆகவே, சாதாரண பொதுமக்களுக்கு ஒரு சட்டமும், வசதி படைத்த மற்றும் செல்வாக்கானவர்களுக்கு ஒரு சட்டமுமா என பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் எம்.மகேந்திரனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, குறித்த சம்பவம் தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரியிடம் தொடர்பு கொள்ளுமாறும், எந்த மேல் மட்டம் அழுத்தம் கொடுப்பது என தமக்கு தெரியாது எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி யூட் பீரிஸைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, அனைவரையும் சிகிச்சை நிலையத்திற்கு ஏற்றும் நடவடிக்கை நடைபெறுவதாகவும், அவை கட்டம் கட்டமாக நடைபெறுகிறது எனவும் தெரிவித்தார்.







# அச்சமற்ற எதிர்காலத்தை பெற்றுத் தாருங்கள்

## யாழில் சீருடை விவகாரத்துடன் தொடர்புபட்டோர் அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை



யாழ். மாநகர சபையின் வரி மற்றும் தண்ட அறவீடு செய்வதற்கான அணி உருவாக்கத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையினால் அண்மையில் உருவாக்கப்பட்டு, சர்ச்சையை ஏற்படுத்திய வரி மற்றும் தண்ட அறவீடுகளுக்கான அணியுடன் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் 5 பேரும் கடந்த 12 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து உதவி கோரியிருந்தனர். இதுதொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். முதல்வர் மணிவண்ணனால் வரி மற்றும் தண்ட அறவீடு போன்றவற்றிற்காக உருவாக்கப்பட்ட குறித்த அணியுடன் சம்பந்தப்பட்ட ஐந்து இளைஞர்களும் தொடர்ச்சியாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும், எதிர்காலம் பற்றிய அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இவ்வாறான செயற்பாடுகளின் போது, கடந்த கால அனுபவங்களையும், தற்போதைய சூழலையும் நிதானமாக ஆராய்ந்து செயற்பட வேண்டும். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதால் பலன் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இதுதொடர்பாக கலந்துரையாடி பாதிக்கப்பட்டவர்களுக்கு கௌரவமான எதிர்காலம் உறுதிப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனால் உருவாக்கப்பட்ட வரி வசூலிப்பு மற்றும் வீதிகளில் குப்பை போடுவோர், உமிழ்நீர் துப்புவோருக்கு தண்டம் அறவிடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட அணியினருக்கு வழங்கப்பட்ட சீருடை, புலிகளின் காவல்துறையின் சீருடையை ஒத்தவகையில் இருந்தமை தென்னிலங்கையில் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனையடுத்து, யாழ். மாநகர முதல்வர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்தார். பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிலைமைகளை தெளிவுபடுத்திய நிலையில், நீதிமன்றின் ஊடாக யாழ். முதல்வர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனினும், குறித்த அணியின் உறுப்பினர்களாக உள்வாங்கப்பட்டிருந்த தங்களை பல்வேறு தரப்புகளும் விசாரணைக்கு அழைப்பதாகவும் மேலும் தாங்கள் தொடர்ச்சியாக அவதானிக்கப் பட்டு வருவது போன்று உணர்வதாகவும் தெரிவித்திருக்கும் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் ஐவரும், தமக்கு கௌரவமான, அச்சசூழல் அற்ற எதிர்காலத்தை உறுதிப்படுத்தி தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டத்தை மீறி நோர்வூட்டில் பூப்புனித நீராட்டு விழா

## 48 பேரை தனிமைப்படுத்தி அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை

(எம்.கிருஸ்ணா)

நோர்வூட்டில் எந்தவொரு அனுமதியும் பெறாமல் பூப்புனித நீராட்டு விழா நடத்திய குடும்பத்தவர்கள் உட்பட 48 பேர் நேற்று சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். நாட்டில் கொவிட் தொற்று மற்றும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதையடுத்து எந்தவொரு விழாவுக்கும், நிகழ்வுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்களே பங்கு பெற முடியும் என சுகாதாரப் பிரிவினரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நோர்வூட் பகுதியில் பூப்புனித நீராட்டு விழா விருந்தொன்று சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறாமலேயே நடத்தப் பட்டுள்ளது. இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, அவ்விடத்திற்கு சென்ற அதிகாரிகளால் அந்நிகழ்வில் குறிப்பிட்ட குடும்பத்தினர் உட்பட விழாவில் கலந்துகொண்டவர்கள் என 48 பேர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அவர்களது வீடுகளிலேயே சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்ததுடன், அதிகளவான உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் 76 பேருக்கு கொவிட் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 76 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்டோரிடையே நேற்று வெளியாகிய பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகளிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமயபுரம் பகுதியில் இருவருக்கும், மூன்றுமுறிப்பு இராணுவ முகாமில் ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம் பகுதியில் ஒருவருக்கும், தேக்கவத்தைப் பகுதியில் இருவருக்கும், வீரபுரம் பகுதியில் ஒருவருக்கும், சின்னசிப்பிக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், ஓமந்தைப் பகுதியில் 14 பேருக்கும், நெடுங்கேணி பகுதியில் இருவருக்கும், அரசடிக்குளம் பகுதியில் இருவருக்கும், நெடுங்குளம் பகுதியில் ஒருவருக்கும், பூந்தோட்டம் பகுதியில் மூன்று பேருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், பாரதிபுரம் பகுதியில் ஒருவருக்கும், சிறிராமபுரம் பகுதியில் ஒருவருக்கும், புகையிரத திணைக்கள விடுதியில் ஒருவருக்கும், நேரியகுளம் பகுதியில் 12 பேருக்கும், தோணிக்கல் பகுதியில் நான்கு பேருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், சண்முகபுரம் பகுதியில் ஒருவருக்கும், செக்கட்டிப்புலவு பகுதியில் ஒருவருக்கும், சூசைப்பிள்ளையார்குளம் பகுதியில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், இராசேந்திரங்குளம் பகுதியில் ஒருவருக்கும், சோயாலேன் பகுதியில் ஒருவருக்கும், வெளிக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், கோவில்புதுக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், தந்திரிமலை பகுதியில் ஒருவருக்கும், அம்பலாங்கொடை பகுதியில் ஒருவருக்கும், தரணிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், முதலியார்குளம் பகுதியில் ஒருவருக்கும், தம்பனைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாசிலாம்பலாங்கொடை பகுதியில் ஒருவருக்குமாக 76 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொவிட் தொற்றுக்குள்ளானவர்களை சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புகளை பேணியவர்களை சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கை மட்டக்களப்பில் சடுதியாக அதிகரிப்பு

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன் தெரிவிப்பு



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை 100க்கு உட்பட்டதாக இருந்த போதிலும் கடந்த 5 நாட்களில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நா.மயூரன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் அதிகம் ஒன்றுகூடும் போது புதிய கொத்தணி உருவாகும் வாய்ப்புகள் உள்ளதால் மரணச் சடங்கு மற்றும் திருமணச் சடங்குகளுக்கு 15 பேரை மட்டுமே அனுமதிக்க முடியும் எனவும், மீறினால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் 145 பேர் மரணமடைந்துள்ளதில் 20 வயதிற்கு குறைந்த யாரும் மரணிக்கவில்லை எனவும், 50 வயதிற்கு கூடிய 131 பேர் மரணித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மாவட்டத்துக்கு முதலாம் கட்டமாக இரண்டு இலட்சத்து 65 ஆயிரம் தடுப்பூசிகளும் இரண்டாம் கட்டமாக அறுபது ஆயிரம் தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன. 30 வயதிற்கு கூடிய 85 சதவீதமானோர் தடுப்பூசி பெற்றுள்ளனர். மக்கள் சமூக ஒன்றுகூடல்களை தவிர்ப்பதன் மூலம் கொத்தணிகள் உருவாவதை தவிர்க்க முடியும். அத்தோடு சுகாதார நடைமுறைகளையும், சமூக இடைவெளிகளையும் மிகவும் இறுக்கமாகப் பின்பற்றுவதன் மூலம் கொரோனாவை ஒழிக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கொரோனா தொற்றானது அதிகரித்துவரும் நிலையில், சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 31ஆம் திகதி வரை பொதுமக்களுக்கான மதஸ்தல அனுமதிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டு நாளாந்த பூஜைகளுக்கு மாத்திரம் அனுமதிக் கப்பட்டுள்ளது. மாவட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுமாறும் கேட்டுக்கொண்டார்.



தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# தேவை அரசின் பதில்

நாட்டில் கடந்த ஒகஸ்ட் 5 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை 5 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், 3 ஆயிரத்துக்கும் குறைவான நோயாளர்களின் எண்ணிக்கையே வெளியிடப்பட்டுள்ளதாக ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

அத்தோடு, 11 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 4 ஆயிரத்து 175 நோயாளர்களும், அன்ரிஜன் பரிசோதனையில் ஆயிரத்து 239 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, 11 ஆம் திகதி மாத்திரம் 5 ஆயிரத்து 414 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் 12 ஆயிரம் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும் தொற்று நோயியல் பிரிவினால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கு அமைய 3 ஆயிரம் நோயாளர்கள் என கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற கொவிட் கட்டுப்பாட்டுக் குழுவின் கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டது. யாருக்காக இவ்வாறான பொய்யான தரவுகளை வெளியிடுகின்றனர்? யாரை ஏமாற்றுவதற்கு இவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன? திட்டமிட்ட வகையில் உண்மையான தரவுகளை மறைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவா?

அதேபோன்று, கம்பஹாவில் 9 நாட்களில் அடையாளம் காணப்பட்ட 12 ஆயிரம் நோயாளர்களை 9 ஆல் பிரித்தால் நாளொன்றுக்கு ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்க வேண்டும். எனினும், தொற்று நோயியல் பிரிவில் ஒரு நாளும் ஆயிரத்தைத் தாண்டிய நோயாளர்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

அதேபோன்று, ஒகஸ்ட் 5 ஆம் திகதி 4 ஆயிரத்து 900 இற்கும் அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், 2 ஆயிரத்து 669 என்ற எண்ணிக்கையே வெளியிடப்பட்டது. 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை 5 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், 3 ஆயிரத்துக்கும் குறைவான நோயாளர்களே எண்ணிக்கையே வெளியிடப்பட்டுள்ளன.

என்னிடமுள்ள தகவலுக்கு அமைய 11 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 4 ஆயிரத்து 175 நோயாளர்களும், அன்ரிஜன் பரிசோதனையில் ஆயிரத்து 239 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, 11 ஆம் திகதி மாத்திரம் 5 ஆயிரத்து 414 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறாயின் குறிப்பிட்ட ஒரு தரப்பினரால் உண்மையான தரவுகள் மாற்றியமைக்கப்படுகின்றன. களநிலை மற்றும் ஆய்வுகளில் முன்னெடுக்கும் தரவுகள் என்பன குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கே அனுப்பிவைக்கப்படுகின்றன.

அவ்வாறாயின் யாரால் இந்த தவறான தகவல்கள் வெளியிடப்படுகின்றன? தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர்கள் இருவரே தகவல்களை மாற்றியமைப்பதாக எங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதேபோன்று, இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவரும் இந்த செயற்பாடுகளில் தொடர்புபட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளன. உரிய தகவல்களைக் கொண்டு முன்னோக்கிச் செல்வதை தடுப்பதே இவர்களின் நோக்கமாகவுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார் முஸம்மில் எம்.பி.

கொரோனா தரவுகள் குறித்தான சர்ச்சை இலங்கையில் கடந்த பல மாதங்களாகவே நிலவி வருவது பரகசியம். கொரோனா சிகிச்சை பெற்று வெளியேறுவோரின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் வைத்தியசாலைகள் அல்லது சிகிச்சை நிலையங்களில் இடநெருக்கடி ஏற்பட வாய்ப்பில்லை.

ஆனால், எல்லா வைத்தியசாலைகளிலும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து இடநெருக்கடி ஏற்பட்டுள்ளமைக்கு என்ன காரணம்? அதிகமானளவு நோயாளர்கள் தினசரி கண்டறியப்பட்டாலும், அவை தொடர்பிலான சரியான புள்ளிவிபரங்கள் இதுவரை வெளியிடப்படாமையே அதற்கான காரணமாகும்.

கொரோனா பாதிப்புகள் தொடர்பான சரியான விபரங்கள் வெளியிடப்படாவிட்டால் அது எதிர்காலத்தில் நோயின் சரியான விபரம் சேர்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதேசமயம் தேவையற்ற சர்ச்சைகளை அது ஏற்படுத்தக் கூடும். அப்படியாயின் இந்த தகவல்களை மாற்றியமைப்பவர்கள் யார், என்ன காரணத்திற்காக அவை மாற்றியமைக்கப்படவேண்டும், என்பவை குறித்து ஆராயப்படவேண்டும்.

இந்த விவகாரம் குறித்து எதிர்க்கட்சி தரப்பில் சொல்லப்பட்டிருந்தால் அதற்கு அரசியல் காரணங்கள் அரச தரப்பில் சொல்லப்பட்டிருக்கும். ஆனால், இது ஆளுங்கட்சி எம்.பி. ஒருவரால் கூறப்பட்ட விவகாரம். அரசு இதற்கு பதிலளித்தேயாக வேண்டும்.






# மனம் திறந்து பேசுங்கள்!

- ★ அரசு - கூட்டமைப்பு பேச்சுவார்த்தையின் தொடக்கப்புள்ளி எது?
- ★ பேச்சுவார்த்தை முன் நகர்வுக்கு சர்வதேச அழுத்தம் காரணமா?
- ★ பெசிலுடன் பேச்சுவார்த்தை நடத்துவது நிறைவேற்று அதிகாரத்துடன் நடத்துவதற்கு சமம்

பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்று, ஓராண்டு பூர்த்தியடைந்த நிலையில், தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான பூர்வாங்க முன்னெடுப்புகளில் இறங்கியுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் இதற்கான சமிக்ஞை காட்டப்பட்டிருக்கிறது. இதற்கான முதல் கட்டப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சுமந்திரனுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

மிக நீண்ட காலமாக இழுபறி நிலையில் இருந்து வரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இருவரும் பரஸ்பரம் பேசியிருக்கின்றனர். அரசாங்கத்தோடு பேசுவதாக இருந்தாலும் அரசியல் தீர்வை மையப்படுத்திய பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு தாங்கள் தயார் என்ற தொனியில் சுமந்திரன் கூறியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இனப்பிரச்சினைகான தீர்வு விடயத்தில் இந்தப் புதிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று தெரியாத நிலையில், நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக்குழு விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

ஜெனீவா மனித உரிமைப் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகும்போது, இலங்கை தொடர்பாகவும் விரிவாக ஆராய இருக்கின்ற நிலையில், இந்த பேச்சுவார்த்தைக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இனப் பிரச்சினை எனும்போது, 13ஆவது திருத்தமும், அதன்மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளும் அதிகாரங்களைப் பரவலாக்குவதற்காக உருவாக்கப்பட்டவை. இந்த மாகாண சபைகள் யாவும் அரசியல் செயற்பாடுகளை இழந்த நிலையில் செயலற்றுக் கிடக்கின்றன. குறிப்பாக சொன்னால், 9 மாகாண சபைகளும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகின்றன. ஆளுநர்களே மாகாணசபைகளின் ஆட்சியாளர்கள் என்ற நிலைதான் இப்போது தொடர்கிறது. மாகாணங்கள் ஒன்பதாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், வடக்கு,கிழக்கில் அதிகாரங்களைப் பகிர்வதற்கென விசேடமாக உருவாக்கப்பட்டதே இந்த மாகாண சபைகள்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதல் படிக்கல் இந்த மாகாண சபைகள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ''இருந்ததையும் இழந்தாய் போற்றி...'' என்ற நிலையில்தான், தமிழர் தரப்பு மீண்டும் பேச்சுவார்த்தையில் இறங்குவதற்கு முனைப்பு காட்டுகிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசுவதற்கு ஜனாதிபதி உடன்பட்டு திகதியும் குறித்த நிலையில், அந்த சந்திப்பு திடீரென ஒத்திவைக்கப்பட்டது. இதற்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் இது தொடர்பிலும், பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இந்த நிலையில், விரைவில் சந்திப்பதாகக் கூறிய ஜனாதிபதி, இன்னும் அதில் கூடிய ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை, சில நெருக்கடிகள் காரணமாக இருக்கக்கூடும்.

ஆனால், ஆளும் கட்சியின் தலைவரும், அமைச்சருமான பெசில் ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்க உயர்மட்டக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தயாராகி வருகிறது.

இதனை ஆரம்பிப்பதற்கு முன்னேற்பாடாக, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சுமந்திரன் எம்.பி.யை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். கொழும்பில் இரகசியமாக நடந்த இந்த சந்திப்பில், உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து இருவரும் பேசியுள்ளனர்.

இந்த நகர்வை பார்க்கின்றபோது, ஜனாதிபதியுடனான சந்திப்பு ஏற்கனவே, இரத்து செய்யப்பட்டிருப்பது, ஓர் இராஜதந்திர முயற்சியாகவே தெரிகிறது.

இந்த அரசாங்கத்தின் எந்தவொரு விடயத்திலும், தீர்மானம் எடுக்கும் சக்தியாக இருப்பவர் பசில் ராஜபக்ஷதான். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் சகோதரர் என்பதற்கு அப்பால், தான் பொறுப்பேற்கும் வேலைகளை கனகச்சிதமாக செய்து முடிக்கும் வல்லமை உள்ளவர் பெசில்.

இப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவர் இதனை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவராக செயற்பட்டு வரும் அவர், நிதி அமைச்சராகவும் பொறுப்பு ஏற்றிருப்பது அவருடைய செயல்திறனுக்கு மேலும் வலுச் சேர்த்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, பெசிலுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது நிறைவேற்று அதிகாரத்துடன் பேசுவதற்கு சமனானதாகவே பார்க்கமுடிகின்றது.

புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கி, அதனூடாகவே இனப்பிரச்சினைக்கு அல்லது சிறுபான்மையினர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக, பொதுஜன பெரமுன அரசு தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியிருந்தது. அதனடிப்படையில், அரசியலமைப்புக்கான உயர்மட்டக்குழு ஒன்றை நியமித்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால், உத்தேச புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழர்களின் அபிலாஷைகள் தீர்க்கப்படும் நிலை உருவாகுமா என்ற கேள்வியும், நியாயமான சந்தேகங்களும் சகலரிடமும் இருக்கின்றது.

காலங்காலமாக எதிர்ப்பு அரசியல் செய்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், நல்லாட்சி என்ற பெயரில் இயங்கி வந்த அரசாங்கத்தோடு சங்கமித்து செயற்பட்டது. அதாவது, எதிர்ப்பு அரசியலை கைவிட்டு ஆட்சிக்கு முழுமையாக தோள் கொடுத்தது.

இந்த நல்லாட்சியிலாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுடன் இருந்த தமிழர்களுக்குக் கிடைத்ததெல்லாம், ஏமாற்றம் மட்டுமே. அரசியல் கைதிகளைக் கூட விடுதலை செய்ய முடியாத மிக மோசமான நிலையிலேயே நல்லாட்சி செயற்பட்டது.

புதிய அரசியலமைப்பை உருவாக்கி, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் உறுதியுடன் செயற்பட்ட மைத்ரி - ரணில் கூட்டணி, இதற்காக அரசியலமைப்பு சபை ஒன்றையும் அமைத்து செயற்பாடுகளில் இறங்கியது. பாராளுமன்றமும் அரசியலமைப்பு பேரவையாக (Constitutional Assembly ) மாற்றப்பட்டு, ஆக்கபூர்வமான பணிகளில் இறங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அனைத்துமே கிடப்பில் போடப்பட்டு விட்டன.

ரணில் விக்கிரமசிங்க - மைத்ரிபால சிறிசேனவுக்கிடையில் ஏற்பட்ட நேரடி மோதலும், அதனால், நல்லாட்சி அரசாங்கத்துக்குள் ஏற்பட்ட நெருக்கடியும் ஒரு காரணமாக இருந்தாலும், அப்போது எதிர்க்கட்சி பீடத்திலிருந்த பொதுஜன பெரமுனவின் கடுமையான எதிர்ப்பும் மற்றொரு காரணமாக அமைந்தது.

இப்போது ஆட்சியிலிருக்கும் பொதுஜன பெரமுன, அப்போது நாடு முழுவதும் காட்டிய எதிர்ப்பு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. இதனால் நல்லாட்சி அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. “சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தி நாட்டை துண்டாடப் போகிறார்கள்'' என்ற பொதுஜன பெரமுனவின் பிரசாரம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதோடு, புதிய அரசியலமைப்பு முன்னெடுப்பை அடக்கி வாசிக்கும் நிலைக்கு நல்லாட்சி தள்ளப்பட்டது.

இதுதான் இலங்கையின் வரலாறு. இதில் புதுமை கொள்வதில் ஒன்றுமில்லை. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆட்சியில் உள்ளோர் முயலும்போது, எதிர்க்கட்சிகள் குழப்பிவிடும் மிக மோசமான நிலை 1956ஆம் ஆண்டிலிருந்து தொடர்கிறது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த கட்சிகள் எல்லாம் இதனையே வெற்றிச் சாதனையாக செய்திருக்கின்றன.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி பீடத்தில் இருக்கின்ற இந்த அரசாங்கமும் புதிய அரசியலமைப்பின் ஊடாக சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என்று கூறுகின்றது. ஆனால், இதுவும் கிடப்பில் போடப்படும் என்ற சந்தேகம் தமிழர்கள் மத்தியிலும், தமிழ் அரசியல் கட்சிகளிடமும் இருப்பதில் நியாயம் இல்லாமலில்லை.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் அரசாங்கம் முழு மனதுடன் அக்கறை எடுத்து செயல்படுகிறதென அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி.சுமந்திரனிடம் கூறியிருக்கிறார். பொறுப்பு வாய்ந்த அமைச்சர் மட்டுமல்ல, நாட்டில் தலைசிறந்த கல்விமானாகத் திகழும் அவருடைய கருத்துக்கு கௌரவம் கொடுத்தாலும், நாட்டின் எதிர்கால அரசியல் நிலைதான் இதனைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்பதை அமைச்சர் உட்பட சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதாக இருந்தால், எந்த அடிப்படையில் பேசுவது என்பதில் இருதரப்புக்கும் சங்கடமான நிலைமை இருக்கிறது. ஏனென்றால், இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து தமிழர் தரப்பை சந்தித்துப் பேசப் போவது இதுவே முதல் தடவையாக இருக்கப்போகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் முதலாவது சந்திப்பு என்று எதனையும் விட்டுவிடப் போவதில்லை. இனப்பிரச்சினைகான தீர்வை மையப்படுத்தியதாகவே அவர்களுடைய பேச்சுவார்த்தைகளுக்கான முன்னெடுப்பு இருக்கும்.

அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதாக இருந்தால் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் நிபந்தனைகளை முன்னிறுத்தி பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க கூடிய சாத்தியம் இருக்கிறது. தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், காணிகளை விடுவிப்பது தொடர்பான விடயங்கள் உட்பட பல்வேறு தமிழர் தரப்புப் பிரச்சினைகளை நிபந்தனைகளாக முன்னிறுத்தி பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழுத்தங்களைக் கொடுக்கலாம்.

இவை ஒருபுறமிருக்க, தமிழர் பிரச்சினைகளையும், மனித உரிமை மீறல்களையும் மையப்படுத்தி சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினால், சர்வதேச அழுத்தங்களை மென்மைப் படுத்துவதாக அமைந்துவிடும் என்ற ஒரு பார்வையும் இருக்கிறது.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் சர்வதேசத்தையும் கையில் வைத்துக்கொண்டு, இலங்கை அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது ''மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது'' என்ற நிலையை உருவாக்கும்.

ஆனால், அரச தரப்பு இதனை எவ்வாறு கையாளப் போகிறது என்பதுதான் இப்போதுள்ள எதிர்பார்ப்பாகும்.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை எட்டுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை ரீதியான நிலைப்பாடாகும். அதேநேரம், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுடனான தீர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலையில், அரசாங்கத் தரப்புதான் தங்களது நிலைப்பாட்டை சொல்ல வேண்டும் அல்லது தெளிவுபடுத்த வேண்டும் என்ற நிலை இருக்கிறது.

“சிறுபான்மையினர் என்பதை கணக்கில் எடுக்காத அரசாங்கம்” என்ற அவப்பெயர் தமிழ், முஸ்லிம் மக்களிடம் இந்த அரசாங்கத்தின் மீது படிந்திருக்கிறது.

ஆரம்பம் முதலே அரசின் செயற்பாடுகளும் அப்படியானதொரு பிம்பத்தை கொடுத்திருக்கிறது. ஆகவே, திறந்த மனதுடன் பேசுவதன் மூலமே அரசு தன் நிலையை (இனப்பிரச்சினை தொடர்பில்) மக்களுக்கு தெளிவுபடுத்துவதாக இருக்கும்.

உண்மையில், இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை விடயத்தில், எதிலிருந்து பிள்ளையார் சுழியிடுவது என்ற தெளிவு இன்னும் அரசாங்கத்துக்குள் இல்லை என்பது தெரிகிறது.

பேச்சுவார்த்தைக்கான பூர்வாங்க முன்னேற்பாட்டு சந்திப்பொன்றை கொழும்பில் சுமந்திரனுடன் நடத்திய அமைச்சர் பீரிஸ் ஒரு யோசனையை முன் வைத்திருக்கிறாரெனத் தெரிகிறது.

**-கே.குணராசா**

(தொடர்ச்சி... 07ஆம் பக்கம் பார்க்க)

# திருகோணமலை பொதுவைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை; கொரோனா தொற்றுக்குள்ளானோர் வெளிநோயாளர் பிரிவில் காத்திருப்பு

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கொரோனா நோயாளிகள் அதிகரித்து வரும் நிலையில் மேலதிக நோயாளிகளை அனுமதிக்க இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், தொற்று உறுதிசெய்யப்பட்ட பின்னர் பல மணிநேரம் வெளிநோயாளர் பிரிவு கதிரையில் அமர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டத்தில் தற்போது நோயாளர்களின் வீதம் அதிகரித்து வருவதால், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக செல்பவர்கள் நோயாளர்கள் அனுமதிக்கும் இடத்தில் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் தொற்று உறுதி செய்யப்பட்டால் கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட 09ஆம் மருத்துவ விடுதிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட விடுதி நிரம்பியுள்ளதால் நோயாளர்கள் அனுமதிக்கும் இடத்தில் தாமதம் ஏற்படுவதாகவும், இதனால் வேறு சிகிச்சைகளுக்காக வரும் நோயாளர்களுக்கு கொவிட் - 19 தொற்று ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. இதனால் திருகோணமலை பொது வைத்தியசாலை




நிர்வாகத்தினர் தொற்றாளர்களின் வீதம் அதிகரிக்கும் பட்சத்தில் இடப் பற்றாக்குறையை தீர்க்கும் விதத்தில் புதிய விடுதி மற்றும் கட்டில்களை அதிகரிக்க வேண்டும் எனவும் நோயாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இருந்தபோதிலும் திருமலை பொது வைத்தியசாலை நிர்வாகம் மிக விரைவாக செயற்பட்டு நோயாளர்களின் நலன் கருதி கொரோனா விடுதியின் கட்டில்களை அதிகரிப்பதுடன், குடிப்பதற்கு சுத்தமான நீரையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையை நம்பி வரும் நோயாளர்களை மனக்கசப்பின்றி அரவணைத்து தொற்று உறுதி செய்யப்பட்ட நோயாளர்களை உடனடியாக ஓ.பி.டி. பிரிவிலிருந்து கொரோனா பிரிவிற்கு தாமதமின்றி அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் கொரோனா நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழன் பத்திரிகை ஆசிரியரை பின்தொடர்ந்தவர்கள் யார்?

## உரிய விசாரணை நடத்துமாறு சுதந்திர ஊடக இயக்கம் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

'தமிழன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவராஜா ராமசாமியைப் பின்தொடரும் நபர்கள் தொடர்பாக உடன் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு, தகவல்களை வெளியிடுமாறு பொலிஸ்மா அதிபரிடம் சுதந்திர ஊடக இயக்கம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'தமிழன்' எனும் தமிழ்மொழி மூல பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஆர். சிவராஜா வசித்து வரும் கல்கிஸை பிரதேசத்தில் உள்ள தனியார் வீட்டுத் தொகுதிக்கு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு 'குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து' என தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு சந்தேகத்துக்கிடமான இருவர் வந்துள்ளதாக, அவர் உங்களுக்கு முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார். வீட்டுத் தொகுதியின் நுழைவாயிலைத் திறந்து, தமக்கு பிரதம ஆசிரியர் வசிக்கும் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்குமாறு குறித்த சந்தேகத்திற்கிடமானவர்கள் தொடர்ந்தும் கேட்டுக்கொண்டாலும், பாதுகாப்பு உத்தியோகத்தர் அதனை மறுத்துள்ளதாக சிவராஜா எமக்குத் தெரிவித்தார்.

இந்த சந்தேகத்துக்கிடமானவர்கள் யார், இவர்கள் ஏன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரை அவ்வாறான அதிகாலை வேளையில் சந்திக்க முயற்சி செய்தார்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக பரிசோதனை செய்து, விடயங்களை வெளிப்படுத்தி, உரியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்தோடு, பத்திரிகை ஆசிரியருக்கு உயிர் அச்சுறுத்தல்கள் ஏதும் இருப்பதாக தெரியவந்தால், உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக்கொள்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசின் குறைகளை சுட்டிக்காட்டுவதால் மாத்திரம் எதுவும் நடக்காது: நாமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## இராதா எம்.பி. தெரிவிப்பு

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டுவதை விட நாமனைவரும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்கி இந்த கொரோனாவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையானது அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு நிலையாகும். எனவே, நாம் அனைவரும் எமது கட்சி அரசியல் பேதங்களை மறந்து அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்கி இந்த நிலையிலிருந்து இந்நாட்டையும், மக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

வெறுமனே அரசாங்கத்தைக் குறை கூறுவதால் மாத்திரம் இந்தக் கொரோனா தொற்றிலிருந்து விடுபட முடியாது. இந்த விடயத்தில் அரசாங்கம் மாத்திரம் கவனம் செலுத்தினால் இதனைக் கட்டுப்படுத்த முடியாது.

எதிர்க்கட்சிகள் என்ற வகையில் எங்களுக்கும் பாரிய ஒரு பொறுப்பு இருக்கின்றது. எனவே, இதனை உணர்ந்து நாமனைவரும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும்.

அதே நேரத்தில் அரசாங்கமும் அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு முன்நோக்கி பயணிக்கத் தயாராக வேண்டும். வெறுமனே எதிர்க்கட்சிகளை ஒரு எதிர்ப்பு அரசியல் கட்சிகளாகப் பார்க்காமல் எங்களையும் இணைத்துக் கொண்டு சென்றால் மாத்திரமே இந்த நிலைமையிலிருந்து எங்களால் வெளியில் வர முடியும்.

இன்று உலக நாடுகளில் அநேக நாடுகள் இந்த நடைமுறையை கடைப்பிடிக்கின்றார்கள்



அதன் காரணமாக அவர்கள் கொரோனாவை வெற்றிகரமாக கட்டுப்படுத்தி பொருளாதாரத்திலும் பாதிப்பு ஏற்படாமல் அந்த நாடுகளை பாதுகாத்து கொள்கின்றார்கள். எனவே, இதனை நாங்களும் முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்றார்.

# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு

(வவுனியா நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2006 ஆவணி மாதம் 14ஆம் திகதி இலங்கை வான்படை கிபிர் விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் 15 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வருடந்தோறும் குறித்த படுகொலை நினைவேந்தல் நிகழ்வு வள்ளிபுனம் பகுதியில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட சிறுவர் இல்ல வளாகத்தில் அனுஷ்டிக்கப்படுவதோடு, நாட்டில்



பல்வேறு இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுவது வழமையாகும்.


இருப்பினும், இம்முறை குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிக்க பொலிஸாரும் இராணுவத்தின ரும் தடைவிதித்துள்ளனர். இந்நிலையில், வவுனியாவிலுள்ள பெரும்பாலான ஆலயங்களில் ஆத்ம சாந்தி விசேட வழிபாடுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலையக கல்விமான் மாரிமுத்து காலமானார்

(தலவாக்கலை நிருபர்)

நாவலப்பிட்டி கதிரேசன், புசல்லாவை சரஸ்வதி, நுவரெலியா பரிசுத்த திரித்துவ கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும், முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரியும், கல்விமானுமாகிய தி.வே.மாரிமுத்து உடல்நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கொட்டகலையில் காலமானார்.

இவர் மத்திய மாகாண தமிழ்க்கல்வி, இந்து கலாசார அமைச்சின் முன்னாள் இணைப்புச் செயலாளராகவும், நுவரெலியா பிரதேச சபை முன்னாள் தவிசாளராகவும் கடமையாற்றியுள்ளார். மேலும், இவர் மத்திய மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் முன்னாள் சிரேஷ்ட



உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகரை இறால் வளர்ப்புத் திட்டத்துக்கு அங்குள்ள பயனாளிகளுக்கு முன்னுரிமை

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்படும் இறால் வளர்ப்புத் திட்டத்துக்கு அந்தந்த பகுதிகளிலுள்ள பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டவான் மற்றும் பணிச்சங்கேனி ஆகிய பிரதேசங்களில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினூடாக நூறு ஏக்கர் நிலப்பரப்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் இறால் வளர்ப்பு தொடர்பான அபிவிருத்திப் பணிகளை கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றலில் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வாகரை பகுதியில் முன்னெடுக்கப்படும் இறால் வளர்ப்பு திட்டத்துக்கு மட்டகளப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் இராஜாங்க அமைச்சரிடம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர இணக்கம் தெரிவித்துள்ளார்.

# மறைந்த அமைச்சர் என்.எம்.பெரேராவின் 42ஆவது நினைவஞ்சலி இராஜகிரியவில்





(செ.நித்தியானந்தன்)

மறைந்த அமைச்சர் என்.எம். பெரேராவின் 42ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இராஜகிரியவில் அமைந்துள்ள அவரின் உருவச்சிலைக்கு எதிரில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்.

அவர் அங்கு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில்,

எமது நாடு பிரிட்டிஷாரின் ஆட்சியில் இருந்தபோது மறைந்த என்.எம். பெரேரா தலைமையில் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றபோது லங்கா சமசமாஜக் கட்சி தடை செய்யப்பட்டது. அதன்பின் என்.எம்.பெரேரா, பிலிப், கொல்வின் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

என்.எம்.பெரேரா, பிலிப், கொல்வின் ஆகியோர் சிறையிலிருந்து தப்பி இந்தியாவிற்கு சென்றனர். அதன் பின் அவர்கள் இந்தியாவில் நேரு, காந்தி ஆகியோருடன் இணைந்து இந்தியாவிற்கு சுதந்திரம் கோரிப் போராடினார்கள். அதன் பின்னர் அவர்கள் தலைமறைவாகியிருந்தபோது 1943இல் கைது செய்யப்பட்டு இந்தியாவில் சிறையில் அடைக்கப்பட்டனர். அதன்பின் உலக யுத்தத்திற்குப் பின்னர் அவர்கள் இந்தியாவிலிருந்து விடுதலையாகி இலங்கை வந்து அரசியலில் ஈடுபட்டனர். 1947ஆம் ஆண்டு முதன்முதலாக நாடாளுமன்ற உறுப்பினராக ருவான்வெல்ல தொகுதியில் இருந்து என்.எம்.பெரேரா தெரிவு செய்யப்பட்டார். 1920ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டாட்சியில் அவர் நிதியமைச்சராகப் பதவி வகித்தார். அவரது வரவு-செலவுத் திட்டத்தில் இந்த நாட்டில் பொருளாதாரத்தை முன்னெடுக்கும் வகையில் பல மாற்றங்களை மேற்கொண்டார்.

ஆசியாவில் அவருக்கு 'தங்கமூளைசாலி' என்ற புகழும் கிடைத்தது. 1956ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து சிங்கள மொழியை அரச கருமமொழியாக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருந்தன. அவர் அதற்கு எதிராக குரல் கொடுத்தார். அது மட்டுமல்ல, இந்நாட்டில் தமிழ்மொழியையும் அரசகரும மொழியாக கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

தற்போது எமது நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. அதிலிருந்து நாம் மீள வேண்டுமானால் 1970ஆம் ஆண்டு என்.எம்.பெரேரா நிதியமைச்சராக பதவி வகித்த காலத்தில் அவர் கடைப்பிடித்த பொருளாதாரத் திட்டங்களை இன்றைய அரசும் கடைப்பிடிக்குமானால் நாம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என்று தெரிவித்தார்.

# ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்ற செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல்





(முல்லைத்தீவு செய்தியாளர்)

செஞ்சோலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டோருக்கான நினைவேந்தல் நிகழ்வு நேற்று முல்லைத்தீவில் அமைந்துள்ள வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு-வள்ளிபுனம், செஞ்சோலை வளாகத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு, இலங்கை வான்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலால் அப்பாவி மாணவிகள் 61 பேர் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர்.

இம்மாணவிகளின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், முல்லைத்தீவு - கள்ளப்பாடு, வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவியருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, பூத்தூவி, சுடரேற்றி அஞ்சலி நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூச்சுத்திணறும் இலங்கை

**•யோ.தர்மராஜ்**

“மருத்துவமனைகள் எங்கும் நோயாளர்கள் நிரம்பி வழிகின்றனர். மூச்செடுக்க ஒட்சிசனுக்காக ஒரே கட்டிலில் மூவர் போராடிக்கொண்டிருக்கின்றனர். படுக்கவோர் இடமின்றி தரையிலும், மரத்தடியிலும் தவித்துக்கொண்டிருகின்றனர். மரணங்களின் அதிகரிப்பால் மயானங்களும் நிரம்பிவழிகின்றன.

எங்களின் சகோதர நாட்டில் ஏற்பட்ட நிலைமை எமக்கும் ஏற்படலாம் என பல முறை எச்சரித்த போதிலும், எதனையும் பொருட்படுத்தாததால் இன்று கால் வைத்து நடக்க முடியாதளவிற்கு கொரோனா நோயாளர்களால் மருத்துவமனைகள் நிரம்பிவழிகின்றன. சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் மணித்தியாலக் கணக்கில் கால்கடுக்க வரிசையில் போராடுகின்றன உறவுகள்.

எங்கு பார்த்தாலும் அழுகுரல், நாட்டில் என்ன நடக்கிறது என சற்றேனும் சிந்திக்க முடியாதளவிற்கு நாளுக்கு நாள் தன் உருவத்தை மாற்றிக்கொண்டு முழு உலகத்தை ஆளும் கொரோனாவின் தாக்கம் இலங்கையில் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது.

டெல்ட்டாவின் ஆபத்தை பல முறை எச்சரித்து “ஓர் ஆபத்து தனக்கு வரும் வரை அதன் பாதிப்பை மனிதன் உணர மறந்தால் எங்கள் உயிரையும் மறக்கும் ஆபத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம்’’ என்பதை விரும்பாவிட்டாலும் ஏற்றாக வேண்டும் நாங்கள்.

வீட்டிலிருந்து காலையில் பணிக்குச் சென்ற ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மரணித்தார். அவரது உடலைக்கூட பார்க்க முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

## உலக மற்றும் ஆசிய அளவில் இலங்கை

ஏப்ரல் மாதத்தில் இலங்கையானது உலக அளவில் 88 ஆவது இடத்திலிருந்தது. மே மாதம் 14 ஆம் திகதி 86 ஆவது இடத்திலிருந்த நிலையில், தற்போது 65 ஆவது இடத்திலுள்ளது. மே 15 ஆம் திகதி ஆசிய அளவில் 27 ஆவது இடத்திலிருந்தது. தற்போது 22 ஆவது இடத்திலுள்ளது.

## உயிரிழப்புகள் 10 மடங்காகும்

**ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுனேத் அகம்பொடி**

டெல்ட்டா தொற்று இன்னும் 4 அல்லது 5 வாரங்கள் செல்லும்போது அதன் உச்ச நிலையை அடையும். அப்போது, மரணங்கள் எந்தளவு அதிகரிக்கும் என்பதைத் தீர்மானிக்க முடியாது.

அதனாலேயே நாங்கள் இந்தியாவை விட இலங்கையில் 10 மடங்கு உயிரிழப்புகள் ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கின்றோம்.

வொஷிங்டன் பல்கலக்கழகத்தில் வெளியிடப்படும் அறிக்கைகளை உலகளவில் அனைவரும் ஏற்றுக்கொள்ளகின்றனர். மே மாத காலப்பகுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கையில் நாளொன்றுக்கு 200 – 300 மரணங்கள் வரை ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டது.

அதன்படி, உரிய நடவடிக்கைகள் எடுக்காத பட்சத்தில் மரணங்களின் எண்ணிக்கை 150 ஐத் தாண்டுமாக இருந்தால் எங்களால் எதுவும் செய்ய முடியமல் போகும்.

இலங்கையில் கடந்த காலத்தில் தினமும் 40 முதல் 50 மரணங்கள் நிகழும் என நாம் கூறியதைப் போன்று மரணங்கள் பதிவாகின. எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாவிட்டால் நாளொன்றுக்கு 600 மரணங்கள் வரை பதிவாகலாம். மக்களின் செயற்பாடுகளும், அரசின் முடிவுகளும் மாற்றமடைந்தால் 600 மரணங்கள் வரை செல்லாது. எனினும், நாங்கள் எவ்வித முடிவுகளையும் எடுக்காதிருந்தால் குறைந்தது 300 மரணங்கள் பதிவாகுவதைத் தடுக்க முடியாது. உரிய நடவடிக்கை எடுத்தால் குறைந்தது 150 – 200 மரணங்களுக்குள் கட்டுப்படுத்த முடியும்.

நாங்கள் கூறுவது நடக்காது என சிலர் கூறுகின்றனர்.

எனினும், கடந்த வாரத்தில் நாங்கள் கூறியதைக் கொண்டு தற்போது நடப்பதைப் பார்த்து எங்களுடைய கருத்துகளை ஏற்றுக்கொள்வதா, இல்லையா, என்பதைத் தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

நாளுக்கு நாள் நாட்டை முடக்குவதை ஒத்திவைக்கும் பட்சத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை அதிகரிக்கும்.

ஒரு நாளுக்கு 100 என்றால் மறுநாள் 600, அடுத்த நாள் 800 என்ற ரீதியிலேயே அதிகரிக்கும். 30 – 60 வயதுடையவர்களின் இறப்புகளைவிட 70 வயதிற்கு மேற்பட்டோரின் இறப்பு 30 மடங்கும், 60 – 70 வயதிற்குட்பட்டவர்களின் இறப்பு 20 – 30 மடங்கும் அதிகமாகும். வைத்தியசாலைகளின் கொள்ளளவு மீறுமாக இருந்தால் 10 கொரோனா நோயாளர்கள் இறக்கும் போது, 20 – 30 நோயாளர்களையும் இழக்க நேரிடும்.



தொற்று நோயியல் நிபுணர்கள் நாட்டின் தரவுகளைக் கொண்டு இந்த எண்ணிக்கையிலான மரணங்கள் நிகழலாம் எனக் கூறும் போது, அவ்வாறு நிகழ்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் 1200 என்ற நான் கூறிய உயிரிழப்புகளை படுகொலையாகவே கருத முடியும்.

## ஒருவருக்கு தொற்றினால் முழுக் குடும்பமும் நோய்க்குள்ளாகும்



**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி, ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் சந்திம ஜவந்திர**

உலகத்தை அச்சுறுத்திய பிரதான நான்கு திரிபுகளில் அல்பா மற்றும் டெல்ட்டா ஆகிய இரு முக்கிய திரிபுகள் இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறின. இலங்கையில் முதன்முதலில் அல்பா திரிபு ஜனவரியில் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து கண்டறியப்பட்டது. ஏப்ரல் காலப்பகுதியில் சமூகத்திலிருந்து கண்டறியப்பட்டது.

ஜூலை முதல் வாரத்தில் 18 வீதமாகக் காணப்பட்ட டெல்ட்டா திரிபின் பரவல் ஜூலை மாத இறுதி வாரத்தில் 98 வீதமாக தீவிரமடைந்துள்ளது.

அல்பா மற்றும் டெல்ட்டா திரிபுகள் இரண்டும் ஒரு மாவட்டத்திலேயே அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன. தொற்று நாட்டில், சமூகத்தில் கண்டறியப்பட்டு 6 வாரங்களுக்குப் பின்னரே தீவிரமாக பரவக் கூடும். தற்போது, டெல்ட்டாவின் பாதிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது மாத்திரமே தவிர இதன் ஆபத்தை எதிர்வரும் வாரங்களிலேயே உணர முடியும். எதிர்வரும் 2 – 3 வாரங்கள் மிக மிக முக்கியமானவை. ஒருவருக்கு தொற்றிருக்குமாக இருந்தால் அவர் அருகில் இருக்கும் அனைவருக்கும் தொற்று பரவும் ஆபத்து காணப்படுகின்றது.

நாங்கள் எவ்வளவு பாதுகாப்பாக இருந்தாலும் இந்த டெல்ட்டா தொற்று மிகவும் ஆபத்தானது என்பதால் 5 வினாடிகள் முகக்கவசத்தை அகற்றினாலும் நாங்கள் தொற்றுக்குள்ளாகுவோம். டெல்ட்டா தொற்று பரவிய அனைத்து நாடுகளும் மிக மோசமான பாதிப்புகளை சந்தித்தன. நாங்கள் டெல்ட்டா தொற்று ஆபத்தின் ஆரம்பத்தில் இருப்பதால் சில கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஒரு தடுப்பூசி பெற்றுக்கொண்டாலும் டெல்ட்டாவிடமிருந்து எவ்வித பாதுகாப்பும் கிடைக்காது. இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டு இரு வாரங்கள் கழிந்த பின்னரே பாதுகாப்பு கிடைக்கும்.

இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டாலும் இறப்பிலிருந்து பாதுகாப்பு கிடைக்குமே தவிர கொரோனா தொற்று பரவும் ஆபத்து காணப்படுகின்றது. இரு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டாலும் சுகாதார விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்

டெல்ட்டா ஒருவருக்கு தொற்றினால் அந்த வீட்டில் அனைவருக்கும் தொற்று பரவும். இலங்கையில் டெல்ட்டா தொற்று பரவும் போது புதிய திரிபுகள் உருவாகும் ஆபத்தான நிலையிலேயே இருக்கின்றோம். தரவுகளில் வெளியிடப்படும் நோயாளர்களை விட 10 மடங்காளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும்.

ஜூன் மாத ஆரம்பத்தின் சுற்று நிருபங்களுக்கு அமைய தற்போது செயற்பட்டால் ஓகஸ்ட் மாதத்தில் நாங்கள் பாரிய ஆபத்துக்கு முகம் கொடுப்போம். கொரோனா தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்படும் வரை சந்தேகத்துக்குரிய கொரோனா நோயாளர்களாகவே பார்க்கப்பட வேண்டும்.

தற்போது வைத்தியசாலைகள் அதியுச்ச செயல்திறனை தாண்டியுள்ளன. இதனால் எதிர்வரும் நாட்களில் உண்ண உணவின்றி இறப்பதா அல்லது ஒட்சிசன் இன்றி இறப்பதா என்பதே பிரச்சினையாக மாறும். ஒருவருக்கு உண்ண உணவில்லை என்றால் மற்றொருவர் உணவு கொடுக்க முடியும் என்பதால் உண்ண உணவின்றி இறக்க மாட்டார்கள். ஒட்சிசன் இல்லை என்றால் நாங்கள் உயிரோடிருக்க முடியாது.

## வீதியில் வைத்து சிகிச்சையளிக்கும் நிலை

**கொழும்புப் பல்கலைக்கழக வைத்தியப் பிரிவின் குடும்பநல மருத்துவத்துறையின் பிரதானி ருவாய்ஸ் ஹனிஃபா**

வைத்தியசாலைகள் நிரம்பியுள்ளதுடன், நாங்கள் சேவையாற்றும் வைத்தியசாலைகளில் நோயாளர்கள் இருப்பதற்கு இடமில்லாதுள்ளனர். இனிவரும் நோயாளர்களுக்கு எங்கு, எவ்வாறு, சிகிச்சையளிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளோம்.

அடையாளம் காணப்படும் நோயாளர்களில் 15 வீதமானவர்களுக்கு கட்டாயம் வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்க வேண்டும். 5 வீதமானவர்களுக்கு அதிதீவிர சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் வைத்தியர்களால் தற்போதைய வேலைப்பளுவிற்கு மத்தியில் வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கும் முறைமையை நடைமுறைப்படுத்துவது பெரும் சிரமமாகும். இலங்கையிலுள்ள வைத்தியர்கள் சுய விருப்பத்துடன் வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கும் முறைமையில் இணைய விரும்புகின்றனர்.

குடும்பத்தில் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டால் அவரை எங்கு சிகிச்சைக்கு அனுப்புவது என்பதை சுகாதார அதிகாரிகள் தீர்மானிக்க வேண்டுமே தவிர, அந்தக் குடும்பத்தாரும், நோயாளியும் தீர்மானிக்க முடியாது.

எனக்கு சிறு நோய் அறிகுறிகளே இருக்கின்றன. ஆகவே, நான் வீட்டில் இருக்கின்றேன் என நோயாளிகள் தீர்மானிக்க வேண்டாம்.


வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு, வீட்டிலிருந்து பணியிடத்துக்கு, பணியிடத்திலிருந்து வீதியில் சிகிச்சையளிக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.


வீதிகளில் யாரேனும் வீழ்ந்துகிடந்தால் மனிதத் தன்மையுடன் சென்று அவர்களுக்கு உதவுங்கள்.

கொரோனாவிலிருந்து உங்களையும் பாதுகாத்துக்கொண்டு ஏனையோரையும்



பாதுகாப்பது மனிதத் தன்மையாகும். குறிப்பாக, உரிய அதிகாரிக்கு அழைத்து அவருக்கு உதவுங்கள்.



# ‘வெடி‘ மணியம்

(தொடர்ச்சி)

திருவிழாவும், கும்பாபிஷேகமும், தீர்த்தமும் இப்ப இருக்கிற இந்த ஆபத்தான சூழ்நிலையில் தேவையா எண்டு கேக்குறதுதான் உண்மையில கடவுள் பக்தி இருக்கிறவன் செய்வான்.

ஆனால்;

வீம்புக்கு கும்பல் கும்பலாக கூடி கூத்தடிக்கிறதும், அரோகரா போடுறதும் ஆறு அறிவுள்ள சீவனுகள் செய்யாது.

போர்க்காலத்தில் எத்தனை மாதங்களாக கோயில்கள் பூட்டியிருந்தன?

இடப்பெயர்வின்போது எத்தனை ஆண்டுகளாக கோயில்கள் பூட்டிக்கிடந்தன?

அப்பயெல்லாம் அதுக்குள்ள இருந்த கடவுள்கள் எழும்பி எங்கையாவது போனவையோ? இல்லைதானே!

பிறகென்ன சீலம்பாய்க்கு இப்ப குறுக்கால மறுக்கால ஓடித்திரியிறியள்?

ஒரு பொறுப்பான அரசாங்கமா இருந்தால் முதலாவது இந்த விடயங்களில் முதல்ல தலையிட்டு கட்டுப்பாடுகளை இறுக்கமாக விதிக்கவேணும்.

கலியாண வீடு, செத்த வீடுகளுக்கு கட்டுப்பாடுகளை விதிச்சதுபோல் எல்லா மத வழிபாட்டு இடங்களுக்கும் ஓர் இறுக்கமான கட்டுப்பாட்டை விதிக்கவேணும்.

இது கொரோனாவைக் கட்டுப்படுத்த உலகத்திலுள்ள மற்ற நாடுகளில் நடைமுறையில் இருக்கிற விடயம்.

இந்த விடயத்தை எங்கட நாட்டில் நடைமுறைக்கு அரசாங்கம் கொண்டுவராது எண்டால்;

எங்களை நாங்கள் பாதுகாக்க, நாங்களாகத்தான் சில கட்டுப்பாடுகளையும், சுய ஒழுக்கத்தையும் பின்பற்றவேணும்.

ஆராவது "கொரோனாவை" அரசியல் சுயலாபங்களுக்காகக் பயன்படுத்தினால்;

நிச்சயம் அது எதிர்வினையாக அவர்களையே அழிக்கும்.

சிறிலங்காவை பொறுத்தவரை மக்கள் தாங்களாக உணர்ந்து இறுக்கமான கட்டுப்பாடுகளை பின்பற்றினாலேயொழிய;

கொரோனா உயிரழிவில் இருந்து அவர்களை யாராலும் காப்பாற்ற முடியாது.

வாய் பேசாமல் அடக்கி அடக்கி இருந்த பல மருத்துவர்கள் நிலைமை மோசமாகிக்கொண்டு போவதைப்பார்த்து;

பொதுவெளியில் மனம் திறந்து பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

கொரோனா கட்டுக்கடங்காமல் போகப்போகிறது என்று அவர்கள் பொறுப்புணர்வோடு நாட்டு மக்களையும் அரசாங்கத்தையும் எச்சரித்தார்கள்.

ஆனால், ஒருத்தரும் அவர்களின் சொல்பேச்சைக் கேட்கவில்லை.

இண்டைக்கு;

வைத்தியசாலைகள் முழுவதும் அழுகுரல்களும், பிணங்களுமாக காட்சியளிக்கின்றன!

இதற்கு யார் பொறுப்பு கூறுவது?

அரசாங்கமா?
மக்களா?

அதிகரித்த கொரோனா தொற்றாளர்களாலும், கொரோனா மரணங்களாலும், வைத்தியர்களும், சுகாதார உத்தியோகத்தர்களும் மனஉளைச்சலுக்கு உள்ளாகிவருகிறார்கள்.

இது மிக மிக ஆபத்தானது!

இது ஒரு நாட்டின் சுகாதார கட்டமைப்பை ஆட்டம் காண வைத்துவிடும்.

சொல்பேச்சுக் கேளாத அரசாங்கத்தின் கதையை விட்டுப்போட்டு;

மருத்துவர்களினதும், சுகாதார அதிகாரிகளினதும் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி கட்டுப்பாடுகளுடன் இருந்தால் மட்டுமே எங்கட சனத்தை பேரழிவில் இருந்து காப்பாற்றலாம்.

தடுப்பூசிகளை போடுங்கோ எண்டு ஒருசிலரும், போடாதீங்கோ எண்டு இன்னொரு தரப்பும் பிரசாரம் செய்கிறார்கள்.

எது சரி, எது பிழை, எண்டதை மற்ற நாடுகளிலுள்ள நிலையை கருத்தில் கொண்டு முடிவெடுங்கோ.

புலம்பெயர்ந்த வளர்ந்த நாடுகளில் உங்கள் உறவினர்கள் இருந்தால்;
அவையோட இதைப்பற்றி கதையுங்கோ!

தடுப்பூசி பற்றி மருத்துவர்களின் பரிந்துரைகளை சீரியஸாக கவனத்தில எடுங்கோ.

தடுப்பூசிகள் பற்றிய "வதந்திகளை" நம்பாதீர்கள். முக்கியமாக "வதந்திகளை" பரப்பாதீர்கள்!

ஆளாளுக்கு "டொக்டர்களாக" மாறி கொரோனாவுக்கு மருத்துவம் பாக்குற பேவேலையை விட்டுப்போட்டு;

கொரோனா அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவ உதவிகளை நாடுங்கோ!

ஏன் இதைச்சொல்லுறன் எண்டால்;

தெற்கில பல ஆயிரம் பேருக்கு "கொரோனாப் பாணி" வித்தவரும் அண்மையில் தடுப்பூசி போட்டதாக அண்மையில் ஒரு பத்திரிகையில் செய்தி படிச்சன்.

பின்ன பாருங்கோவன் புதினத்தை!

★★★

நாடு கிடக்கிற நிலையில் சிறிலங்காவை எந்த நாடும் சிம்பிளா விலைக்கு வாங்கிடலாம் எண்டு சனம் புறுபுறுக்குது.

சிறிலங்காவை துண்டு துண்டாப்பிரிச்சு அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும், இந்தியாவுக்கும் குடுக்கப்போறாங்கள் எண்டு சனம் குழம்புது.

சீனா ஒரு பக்கத்தால அரிக்க, மறுபக்கத்தால அமெரிக்கா அரிக்கிறதா தகவல் வருகுது.

இன்னொரு பக்கத்தால இந்தியா அரிக்கிறது.

சிறிலங்காவில் அமெரிக்கா தன் பிடியை ஒரு போதும் இழக்காது.

அதற்கான காய்நகர்த்தலை அமெரிக்கா செய்துகொண்டேயிருக்கிறது.

சிறிலங்காவை வெருட்டி பணியவைக்க பல கைங்கரியங்களை அமெரிக்கா செய்துபார்த்தது.

"வடக்கு-கிழக்கு தமிழர் பூர்வீக நிலம்" எண்ட அமெரிக்க காங்கிரஸின் தீர்மானம் தொடக்கம் ஜி.எஸ்.பி.வரிச்சலுகை இரத்து வரை அமெரிக்கா பல வெருட்டல்களை சிறிலங்காவுக்கு எதிராக செய்தது!

ஆனால்;

சிறிலங்கா எதுக்கும் மசியுற மாதிரி இல்லை.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் அமெரிக்கா தமிழர் பிரதிநிதிகளை வெளிப்படையாகக் கூப்பிட்டு பேசியது.

அதுக்கும் சிறிலங்கா ஒரு எதிர்ப்பும் காட்டவில்லை.

பெசிலைக் கூப்பிட்டு "டீலை" பேசி அலுவலை முடிப்பம் எண்டு பாத்தால் அதுகும் அமெரிக்கா நினைச்ச அளவுக்கு பலனை அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

கடைசியாக அமெரிக்கா சிறிலங்காவை "தடவி" ஏதாவது சாதிக்கலாம் எண்டு முடிவெடுத்திருக்கினம் எண்டு கதை உலாவுது.

இலங்கையின் அமெரிக்கத் தூதுவர் எங்கட கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரனை கைத்துணைக்குக் கூட்டிக்கொண்டு போய்;

ஜீ.எல்.பீரிஸை சந்திச்சு ஏதோ கதைச்சவை எண்டு சுமந்திரன் வாய் தவறி ஒரு பேட்டியில சொல்லிப்போட்டார்.

இது நடந்து கனநாள் ஆச்சு!

இதுவரைக்கும் இந்த விடயம் பற்றி தமிழ்த்தேசியகூட்டமைப்பின் மற்றக்கட்சிகளோ தமிழரசுக்கட்சியோ வாயே திறக்கவில்லை!

ஒண்டில்;
ஒருத்தருக்கும் தெரியாமல் அமெரிக்கத் தூதுவரோடை சுமந்திரன் போயிருக்கவேணும்.

அல்லது;
எல்லாரும் சேர்ந்து சனத்துக்கு ஒளிச்சிருக்கவேணும்.

இதில என்ன நடந்தது எண்டு இன்னும் கொஞ்ச நாளில வெளியில வரும்.

"அமெரிக்காவோட போய் சிறிலங்காவை சந்திக்கிறதும் பிழையில்லை.பேசுறதும் பிழையில்லை"

போகமுதல் போறம் எண்டு சனத்திட்ட சொல்லிப்போட்டு போகவேணும்.

கடந்தகாலங்களில் களவா போய்ப்போய் கதைச்சு என்ன கிழிச்சனியள் எண்டு எல்லாருக்கும் தெரியும்.

சுமந்திரனை நம்பி அமெரிக்கத் தூதுவரோட தனியா அனுப்பினது ஆர் எண்டு முதல்ல சனத்துக்கு தெரியவேணும்!

தமிழரசுக்கட்சியின் தனிப்பட்ட முடிவு எண்டால்;

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருக்கும் மற்றக்கட்சிகளுக்கு தமிழரசுக்கட்சி பதில் சொல்லவேணும்.

சுமந்திரன்ர தனிப்பட்ட முடிவில அமெரிக்க தூதுவரோட கூடப்போனவர் எண்டால்;
சுமந்திரன் தமிழரசுக்கட்சிக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் பதில் சொல்லவேணும்.

திரும்பத் திரும்ப பிழைகளை விட்டுக்கொண்டே போனால்;

ஒரு காலத்தில் அரசியலில் அசைக்கமுடியாத அரியணையில் இருந்த ரணில், சந்திரிகா போன்றோர் பூச்சியமாகி ஆண்டிகளானது போல்;
சுமந்திரனும் தமிழரசுக்கட்சியும் நடுரோட்டில் நிக்கவேண்டிய நிலை வரும்.

வாக்குப்போட்ட சனத்துக்கும், மனச்சாட்சிக்கும் நேர்மையாக நடப்பது முக்கியம்.

இனிமேல் எதைச்செய்தாலும் சனத்துக்கு சொல்லிப்போட்டு செய்யுங்கோ. அதுதான் யதார்த்தமான அரசியல். அதைத்தான் எங்கட சனமும் எதிர்பார்க்கிறார்கள்.

திரும்ப திரும்ப சனத்தை பேக்காட்டிக்கொண்டே காலத்தை கடத்திடலாம் எண்ட விளையாட்டு கனகாலத்துக்கு சரிவராது. அது வரலாறு.

# மனம் திறந்து பேசுங்கள்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன. இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வை வழங்குவதற்கான தீர்வுப்பொதி ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற சபா மண்டபத்தினுள்ளேயே அதனைத் தீயிட்டு கொளுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அந்தத் தீர்வுப் பொதிக்கு ஆதரவு வழங்காமல் நழுவிக் கொண்டது. விடுதலைப்புலிகள் இயக்கம் கொடுத்த அச்சுறுத்தலே அதற்கு காரணமென பின்னர் கூறப்பட்டது. தீர்வுப்பொதியை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முதல் நாள் இரவு ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்த கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், “தீர்வுப் பொதிக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கும்’’ என உறுதியளித்திருந்த நிலையில், அடுத்த நாள் காலையில் சம்பந்தன் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார் என்று ஜனாதிபதி சந்திரிகா உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

சந்திரிகா அம்மையாரின் தீர்வுப்பொதி தயாரிப்பில், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சட்ட மேதை கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் முக்கியமானவர்கள். இருவரினதும் சிருஷ்டிப்பே இந்தப்பொதி என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையை வைத்து அந்தத் தீர்வு நகல் வரையப்பட்டிருந்தது. இதனைத் தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்திருந்தனர். அதேநேரம், இந்த தீர்வுப்பொதியின் முக்கிய வரைஞர் களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம், கொழும்பில் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அதனோடு, அந்த பொதியும் கிடப்பில் போடப்பட்டது. இனப்பிரச்சினைக்கான தீர்வும் கைவிடப்பட்டது.

இந்த நிலையில், தானும் நீலனும் தயாரித்த பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வுப் பொதியில், நடைமுறைச் சாத்தியமான விடயங்களை மையப்படுத்தி, இருதரப்பும் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது பொருத்தமாக இருக்குமென அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சுமந்திரனிடம் யோசனை கூறியதாகத் தெரிகிறது. எதுவென்றாலும், பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும். கொரோனா நெருக்கடியைக் காரணம் காட்டி, இந்த முன்னெடுப்புகளை தள்ளிப் போடுவது ஆரோக்கியமல்ல. பேச்சுவார்த்தை எந்தப் புள்ளியிலிருந்தாவது ஆரம்பிக்கட்டும். ஆனால்,மேசையில் இருதரப்பும் திறந்த மனதுடன் பேசினால் மட்டுமே, இறுக்கநிலை தளர்ந்து சுமுகநிலை உருவாகும். மனம் திறப்பதனால் எதுவும் குறைந்துவிடப் போவதில்லை. குழப்பவாதிகளையும், குழப்பப் போகின்றவர்களையும் புறந்தள்ளி முன்னோக்கிச் செல்லுங்கள். இதுவே, இதுவே புதிய அரசியல் கலாசாரத்துக்கு வழிவகுக்கும்.


தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 12 21 51 58
திகதி: 13.08.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0565

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 4 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 70 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 161 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3892 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2603 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 63942 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12206 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,839,340.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 82,878

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 80,902,994.00

ஜாதிக லொத்தர் சபை / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk



கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம்: 2830 சீட்டிழுப்பு திகதி: 13.08.2021
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 12 23 24 25

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து மற்றும் 4 இலக்கங்கள் பொருந்துமாயின் | 64,843,772.40 | 0 |
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 129 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 295 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7562 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5053 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 123886 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 22693 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 159,623
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 4,942,900.00
ரூ. 65,219,552.40

ஜாதிக லொத்தர் சபை / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk



உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா சம்பத
NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு திகதி: 13.08.2021 சீட்டிழுப்பு இலக்கம்: 1611
சுப்பர் இலக்கம்: 07
வெற்றி இலக்கங்கள்: 06 25 30 60

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 0 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 7 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 101 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 290 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4022 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 3506 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 49435 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 11932 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 2,138,900.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,613,276.80

ஜாதிக லொத்தர் சபை / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk



Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 0883
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 13.08.2021
NLB NATIONAL LOTTERIES

ஆங்கில எழுத்து: T
சுப்பர் இலக்கம்: 16
வெற்றி இலக்கங்கள்: 07 30 40 48

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 87 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 169 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4208 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2658 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 68552 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12538 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ.143,054,131.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ.2,620,420.00

ஜாதிக லொத்தர் சபை / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD
N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk



சீட்டிழுப்பு இலக்கம்: 4535
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES
மஹஜன சம்பத
திகதி:13.08.2021
வெற்றி எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 0 3 8 9 4 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியீட்டியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ 0 3 8 9 4 7 | ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ ■ 3 8 9 4 7 | ரூபா 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 8 9 4 7 | ரூபா 10,000/- | 97 |
| 4ஆம் பரிசு | ■ ■ ■ ■ 9 4 7 | ரூபா 1,000/- | 949 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 4 7 | ரூபா 100/- | 9367 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 7 | ரூபா 20/- | 93098 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியீட்டியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 0 3 8 9 4 ■ | ரூபா 10,000/- | 8 |
| 8ஆம் பரிசு | ■ 0 3 8 9 ■ ■ | ரூபா 1,000/- | 92 |
| 9ஆம் பரிசு | ■ 0 3 8 ■ ■ ■ | ரூபா 100/- | 939 |
| 10ஆம் பரிசு | ■ 0 3 ■ ■ ■ ■ | ரூபா 50/- | 9254 |
| 11ஆம் பரிசு | F ■ ■ ■ ■ ■ ■ | ரூபா 20/- | 37162 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,189,500.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.22,673,166.20
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
www.nlb.lk



# நாம் கூறுவதை அரசாங்கம் செவிமடுப்பதில்லை

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சொல்கிறார்

**நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்தில் நாங்கள் கூறும் விடயங்களையும், ஆலோசனைகளையும் அரசாங்கம் செவிமடுப்பதாக இல்லையென ஒன்றிணைந்த பொதுச்சேவை தாதியர் சங்கத்தின் தலைவரும் நாரஹேன்பிட்டி அபயராம விகாரையின் விகாராதிபதியுமான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் “தமிழன்” வார இதழுக்கு தெரிவித்தார்.**

**அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,**

**கேள்வி: நாடு அசமந்தப் போக்கில் சென்று கொண்டிருப்பதாகவும், ஆட்சி மாற்றமொன்று அவசியமென்றும் அறிவித்தே நல்லாட்சி அரசாங்கத்துக்கு பதிலாக பொதுஜன பெரமுன தலைமையிலான தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏற்றப்பட்டது. சமயத் தலைவர்களின் பங்களிப்புடன் நியமிக்கப்பட்ட இந்த அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது என கருதுகிறீர்களா?**

உண்மையாகக் கூறுவதானால், நாங்கள் எதிர்பார்த்த எந்த பிரதிபலன்களும் நிறைவேறாத நிலையே தற்போது உருவாகியுள்ளது. எங்களின் எதிர்பார்ப்புகளும், எங்களின் இலக்குகளும் முழுமையடைந்துள்ளன என்று கூற முடியாது.

தனிப்பட்ட ரீதியில் எங்களிடம் எந்த எதிர்பார்ப்புகளும் இல்லை. நீண்ட நாட்களாக நாட்டிலிருந்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமென்றே இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

**கேள்வி: எதிர்பார்ப்புகள் எதுவும் நிறைவேறவில்லை என்று கூறுவதற்கான காரணம் என்ன?**

> **சுகாதார துறையிலுள்ள குறைபாடுகள் சகல நிர்வாக பிரிவுகளையும் பாதித்துள்ளன**

> **சிறந்த பரிந்துரைகளை முன் வைப்பதற்கான ஆலோசகர்கள் அரசாங்கத்துக்கு இல்லை**

இதுதொடர்பில் அரசாங்கத்திடம் கேட்டால் ஒரு வருடத்தில் எதனையும் செய்ய முடியாது என்று கூறுவார்கள். ஒரு வருடத்தில் சகலவற்றையும் செய்ய முடியாது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகவும் உள்ளது.

எது எவ்வாறாயினும் மக்கள் மத்தியில் பல்வேறு எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இந்நிலையில், மக்கள் பெரும் அதிருப்தியுடனேயே செயற்படுகிறார்கள். அரிசி விலை அதிகரிப்பு, அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களின் விலை, போக்குவரத்து நடவடிக்கைகள் என சகல பக்கங்களிலும் மோசமான நிலைமையே ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களின் விலையைக் குறைப்பதாகவும், நிவாரணங்கள் வழங்கப்படுமென அறிவித்ததுமே தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடமேறியது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பருப்பு, சீனி என்பன நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அன்று அறிவித்ததை விட மூன்று மடங்கு அதிக விலையில் அத்தியாவசியப் பொருட்கள் விற்கப்படுகின்றன.

ஆகவே, எந்தவொரு வழியிலும் மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதாக இல்லை. நிவாரணங்கள் முறையாக வழங்கப்படாதவொரு இக்கட்டான சூழ்நிலையில் கொரோனா தொற்றுப்பரவலின் காரணமாக மக்கள் மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது.

சுருக்கமாகக் கூறுவதானால், நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் இடம்பெற்ற அநியாயங்கள், அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற ஊழல்கள், களவுகள் என அனைத்தையும் இல்லாதொழித்து புதிய ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதாக அறிவித்தே தற்போதைய அரசாங்கத்தினர் பொறுப்பேற்றுக் கொண்டனர். இவர்களின் கொள்கைக்கு ஆதரவளித்தே மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொடுத்தார்கள்.

பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொடுத்ததற்கான மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. திருட்டுகள் இதுவரையில் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. மோசடிகளும் இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. ஊழல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. மறுபுறம், அத்தியாவசியப் பொருட்களின் விலை முன்னர் இருந்ததை விட அதிகரித்துள்ளதே தவிர குறைவடையவில்லை. போக்குவரத்து வசதிகள், வீட்டு வசதிகள் தொடர்பில் சிந்தித்துப் பார்க்க முடியாதவொரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நாட்டிலுள்ள தற்போதைய நிலைமை தொடர்பில் எங்களின் நிலைப்பாடு இதுவாகும்.

**கேள்வி: ஒன்றிணைந்த பொதுச்சேவை தாதியர் சங்கத்தின் தலைவராக செயற்பட்டு வருகிறீர்கள். சங்கத்தின் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவா?**

தாதியரின் பிரச்சினைகள் தொடர்பில் ஏழு கோரிக்கைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முன்வைத்திருந்தோம். அந்த கோரிக்கைகளுக்கு சாதகமான முடிவுகளும் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், அமைச்சுக்கு தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்தே அந்தப் பிரச்சினைகளை அவர்களின் கவனத்துக்கு கொண்டுவந்தோம். அதன் பிரதிபலனாகவே ஏழு கோரிக்கைகளுக்கு வெற்றி கிடைத்தது.

மறுபுறம், கொரோனா கட்டுப்பாட்டு விடயம் தொடர்பில் கூறுவதற்கு ஒன்றும் இல்லை. தற்போது நாளுக்கு நாள் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இருப்பதற்கான இடமில்லாத நிலையில் வீடுகளிலேயே தங்கியிருக்குமாறு வலியுறுத்துகிறார்கள்.

கிளிநொச்சியில், தாதியருக்கு இருப்பதற்கு இடமோ, வீடுகளுக்கு செல்வதற்கான வாகனமோ இல்லாத நிலை உருவாகியுள்ளது. அங்குள்ளவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்கிறார்கள். கொரோனா கட்டுப்பாட்டு விடயத்தில் பெருமளவு குறைபாடுகள் இருக்கின்றன.

**கேள்வி : நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் அரசாங்கத்தின் கொரோனா கட்டுப்பாட்டு செயற்பாடுகள் திருப்தியளிப்பதாக உள்ளனவா?**

அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களில் ஒரு விடயத்தை மாத்திரம் சுட்டிக்காட்ட முடியும். தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை இராணுவத்தினர் பொறுப்பேற்று அதனை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் இராணுவத்தினரால் நடைமுறைப்படுத்தப்படுவதால் முறையான விதிமுறைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் அந்த திட்டத்தில் ஒரு ஒழுக்க ரீதியிலான செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. அர்ப்பணிப்புடன் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இராணுவத் தளபதியினால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டங்கள் வரவேற்கத்தக்கவை. நாடு முழுவதும் மக்களை தேடிச் சென்று தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு முன்னரே இந்த நடவடிக்கைகள் சுகாதாரத்துறையினரால் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தற்போதும் சுகாதாரத்துறை அதனை முறையாக முன்னெடுப்பதாக தெரியவில்லை. சுகாதாரத்துறையில் காணப்படும் குறைபாடுகள் சகல நிர்வாகப் பிரிவுகளையும் பாதித்துள்ளன.

**கேள்வி: கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுவது பொருத்தமில்லாத செயற்பாடு என்பது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றனவே?**

விமர்சனங்கள் முன்வைக்கப்படாமல் என்ன இருக்கிறது. சகல விடயங்களுக்கும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. 24 மணிநேரமும் மக்கள் ஏதாவதொரு வழியில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. நல்ல வேலைத்திட்டங்களை வரவேற்க வேண்டியது அவசியமாகும். இந்த வேலைத்திட்டம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுவதாலேயே பெருந்தொகை மக்கள் இன்று தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக்கொண்டுள்ளனர். தடுப்பூசிகள் வழங்கப்படுவதை நாம் அவதானிப்பதால், இதுபோன்ற சிறந்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியாது.

**கேள்வி: தற்போதைய சூழ்நிலையில் தாதியர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளீர்களா?**

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணமுடியாத பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொண்டுள்ளோம். ஆனால், தற்போது கொரோனா தொற்றினால் தாதியர் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறார்கள். இந்தப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டாய தேவையுள்ளது.

தாதியருக்கு தங்குமிட வசதிகளில் பாரியளவு பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான விதிமுறைகள் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. அவசர நிலைமைகளில் தாதியர் தங்குவதற்கு வைத்தியசாலைகளிலோ அல்லது ஹோட்டல்களிலோ தங்குமிட வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

தற்போது சேவையிலிருக்கும் தாதியரின் எண்ணிக்கையில் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. இதனால் தமது சேவையினை தாதியர் முறையாக முன்னெடுத்துச் செல்ல முடியாதவொரு நிலைமையே இருந்து வருகின்றது. இந்தப் பிரச்சினையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

**கேள்வி: மீண்டும் தாதியர் தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்வதற்கான யோசனைகள் இருக்கின்றனவா?**

எல்லாவற்றுக்கும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதால் எந்தப் பயனுமில்லை. முயற்சிகள் எடுக்கப்பட்டு தீர்வு கிடைக்காத சந்தர்ப்பத்தில் கையாளப்படும் பிரதான ஆயுதமாகவே தொழிற்சங்க நடவடிக்கைகள் அமைகின்றன.

ஆனால், இறுதி முயற்சியை ஆரம்பக் கட்டத்திலேயே முன்னெடுக்க ஒரு சில தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. இதுவே, இன்றைய நிலை. முயற்சிகளின் பின்னர் இறுதியிலேயே தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும்.

**கேள்வி: நாட்டை நிச்சயமாக முடக்கவேண்டிய நிலை ஏற்படுமாக இருந்தால் இந்த பிரச்சினைகளுக்கு எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்?**

நாட்டை முடக்கினால் என்ற பேச்சுக்கே இடமில்லை. குறைந்தது, இரண்டு வாரங்களுக்காவது நாட்டை முடக்க வேண்டும். ஆனால், மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்திசெய்ய வேண்டுமென்றால் தற்போதுள்ள நிலைமையில் நாட்டை முழுமையாக முடக்குவதற்கான வாய்ப்பில்லை.

ஆனால், தற்போது உணவு, அத்தியாவசிய தேவைகளுக்கு மாறாக கொரோனா தொற்றுப் பரவலிலிருந்து மக்கள் பாதுகாப்புப் பெறவேண்டியதே முக்கியமாகும்.

நாங்கள் விசேட நிபுணர்கள் இல்லாவிட்டாலும், நாட்டை உடனடியாக முடக்குமாறு விசேட வைத்திய நிபுணர்கள் கோருகிறார்கள். எனவே, அரசாங்கம் என்றால் அவ்வாறான பரிந்துரைகளையும், கோரிக்கைகளையும் செவிமடுத்து புரிந்து செயற்படவேண்டும்.

**கேள்வி : நாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை என்றல்லவா அரசாங்கம் கூறுகிறது?**

நிர்வாகத்தை முறையாக எடுத்துச் செல்வதற்கு தேவையான சிறந்த பரிந்துரைகளை வழங்குவதற்கான ஆலோசகர்கள் இல்லை என்பதே பிரதான பிரச்சினையாகும்.

**கேள்வி: நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளீர்களா?**

அவ்வாறான பேச்சுக்கு இடமில்லை. அரசாங்கம் நாம் கூறுவதை செவிமடுப்பதாக இல்லை.

**கேள்வி: தேசிய நல்லிணக்கம் தொடர்பில் இந்த அரசாங்கம் ஏதாவது மாற்றுத் தீர்வுகளை வழங்கியுள்ளதாக கருதுகிறீர்களா?**

கடந்த காலங்களை போன்று இன்று இல்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்கள் என சகல தரப்பினரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எமது கடந்த கால எதிர்பார்ப்பாக இருந்தது. அந்த எதிர்பார்ப்புக்கமைய தற்போது இதற்கு முன்னர் இருந்ததை விட மக்கள் மத்தியில் சமத்துவமும், நல்லிணக்கமும் இருக்கிறது என்பது தெளிவாக தெரிகின்றது. கடந்த காலங்களை விட நல்லிணக்கம் நாட்டுக்குள் உருவாகியுள்ளது என்பதே எனது நிலைப்பாடாகும்.

இந்த நிலைமை மேலும் வலுவடைய வேண்டும். அதனை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இந்த பிரச்சினையில், அரசியலை பயன்படுத்தாமல் கட்சி பேதமின்றி நாட்டைப் பற்றி சிந்தித்து அரசியல்வாதிகள் ஒற்றுமையாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும். அவ்வாறாயின் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்படும் யோசனைகளையும் அரசாங்கம் செவிமடுக்க வேண்டும்.

**கேள்வி: இந்த விடயங்களுக்கப்பால் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை, உரப் பிரச்சினை போன்று இதுவரையில் தீர்வு கிடைக்காத பிரச்சினைகளும் இருக்கின்றன அல்லவா?**

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை இன்று, நேற்று வந்தது இல்லை. நீண்டகாலம் இருந்துவரும் தீர்க்கப்படாதவொரு பிரச்சினையாகவுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு ஒரே நேரத்தில் தீர்வுகாண முடியாது. ஆனால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கான முறையொன்றைத் தயாரிக்க முடியும்.

அவ்வாறு தீர்வை வழங்கக்கூடிய முறையொன்றைத் தயாரித்து அதனை அரசாங்கம் ஆசிரியர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடுகிறார்கள். அதன் பின்னர் குழுக்களை நியமிக்கிறார்கள். இவ்வாறு குழுக்களை மாத்திரம் நியமித்து ஒரே பிரச்சினையை மீண்டும், மீண்டும் ஆராய்வதால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.

ஆசிரியர்கள் முட்டாள்கள் இல்லை. அவர்களை வீதிக்கு வரவழைக்காமல் அவர்களின் பிரச்சினைகளைத் தேடிப் பார்த்து சரியான ஆலோசனைகளைத் தருமாறே கோருகின்றோம்.

தற்போது சமையல் எரிவாயு பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இந்நிலை நீடிக்குமாக இருந்தால் மக்களின் கடுமையான எதிர்ப்புகளையே சந்திக்க நேரிடும்.

**கேள்வி: இந்தப் பிரச்சினைகளுக்கு யார் பொறுப்புக்கூற வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?**

இந்த பிரச்சினைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சுகளில் தகுதிவாய்ந்த அதிகாரிகள் இல்லை. ஆலோசனைகளையும் கோரிக்கைகளையும் செவிமடுக்க கூடிய அதிகாரிகளும் இல்லை. ஆகவே, தொடக்கத்திலிருந்து திருத்தங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையே தற்போதுள்ளது.

**கேள்வி: அவ்வாறாயின் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்று கூறுகிறீர்களா?**

அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்று கூற முடியாது. இந்த அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்டு குறுகிய காலமே ஆகிறது. இருந்தபோதிலும், மக்கள் மத்தியிலுள்ள அதிருப்தி நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் இந்த அரசாங்கத்தை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லமுடியும்.

**கேள்வி: தற்போதைய நிலைமையில் அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கை என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

பொதுமக்களின் பிரச்சினைகளை செவிமடுத்து நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். மக்களின் பிரச்சினைகளில் பாரபட்சம் காட்டக்கூடாது. மக்களின் பிரச்சினைகளை தேடிப்பார்க்கும் செயற்பாடுகள் குறைந்துள்ளன.

மக்கள் பிரதிநிதிகள் மேடைகளிலும், ஊடகவியலாளர் மாநாட்டிலும் பேசுவதால் எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை. சகல அமைச்சரவை அமைச்சர்களும் செய்தியாளர் மாநாட்டை நடத்துவதிலேயே காலத்தை கடத்துகிறார்கள்.

ஆகவே, உடனடியான தற்போதுள்ள குறைகள் தொடர்பில் முறையாக தேடிப்பார்த்து தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நூற்றுக்கு நூறுவீதம் தீர்வு வழங்க முடியும் என்று கூறவில்லை. முறையாக செயற்படுவதனூடாக 70 - 50 சதவீதமாவது தீர்வுகளை வழங்க முடியும். அதனையாவது செய்வதாக தெரியவில்லை.

மக்கள் தொடர்பில் சிந்தித்து அவர்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் சிறந்தவொரு ஆட்சியை முன்னெடுக்க முடியும் என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்துகிறோம்.

**கேள்வி: இந்த நிலைமைகள் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் எதிர்பார்ப்பு உள்ளதா?**

அவசியம் ஏற்பட்டால் பேச்சுவார்த்தைக்குச் செல்லத் தயாராகவே இருக்கிறோம். குறைபாடுகளை சுட்டிக்காட்டவும் தயாராகவுள்ளோம். எங்களின் எதிர்பார்ப்பும் அதுவாகும். பேச்சுவார்த்தைக்கான சரியான சந்தர்ப்பம் இதுவரையில் எங்களுக்கு கிடைக்கவில்லை.

**உரையாடல் : நா.தினுஷா**

# குத்தூசி



– நிர்ஷன் இராமானுஜம்

# ஆதலால் மாற்றம் செய்வோம்!

சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம், அவர்களை வேலைக்கு அமர்த்துதல் குறித்து அண்மைக்காலமாக பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட சிறுமி உயிரிழந்த விவகாரத்திலும் பல்வேறு தரப்பினர் வெவ்வேறு விதமாகப் பேசி வருகின்றனர்.

இந்த விடயத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையும் இடம்பெறுகின்றது.

ஆயினும், அந்தச் சிறுமிக்கு நீதிவேண்டிய போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

உண்மையில் நாம் மனசாட்சியுடன் வெளிப்படையாக இங்கே பேசுவோம்.

சிறுமியை வீட்டு வேலைக்காக அனுப்பியது யாருடைய குற்றம்? அவ்வாறு அனுப்பினாலும் தன் பிள்ளைக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி ஆராயாமல் பெற்றோர் ஏன் இருந்தனர்? ரிஷாட் பதியுதீனின் கூற்றுப்படி சுமார் ஏழரை இலட்சம் ரூபா பணத்தை சிறுமியின் குடும்பத்தார் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அப்படியானால் அந்தப் பெற்றோருக்கு பணம் மட்டும்தானே நோக்கமாக இருந்துள்ளது?

ஒரு குற்றம் நடந்தபிறகு மிக இலகுவாக மற்றையவர் மீது கைகாட்டிவிடலாம். ஆனால், தீர விசாரிப்பதுதானே முறைமை?

எட்டு மாத காலப்பகுதியில் ஏழரை இலட்சம் ரூபா பணம் பெற்றுக்கொண்டுள்ளதை சிறுமியின் பெற்றோர் மறுக்கவில்லை. சிறுமி இருக்கும்போது அக்கறையெடுத்துக்கொள்ளாமல் இல்லாதபோது வேதனைப்படுவதில் உள்ள நியாயம்தான் என்ன?

எனக்குத் தெரிந்த காலம்முதல் மலையகத்தில் சிறுவர்களை வீட்டு வேலைக்கு அழைத்துச்செல்லும் தரகர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் அநேகமாக வீட்டு உரிமையாளர்களின் தொடர்பு இலக்கங்களை இரகசியமாகவே பேணுவார்கள்.

அறியாமையின் காரணமாக பெற்றோரும் அடிமைபோல மாதாந்தம் தரகர் வீட்டுக்குச் சென்று பிள்ளைகளின் சம்பளப்பணத்துக்காக காத்திருப்பார்கள்.

இவ்வாறான தரகர்களை நம் சமூகத்துக்குக் கிடைத்த சாபம் என்றே சொல்லலாம். பெற்றோரின் இயலாமையை தங்களது சுயலாபத்துக்கான பலமாகப் பயன்படுத்திக்கொள்ளும் தரகர்கள் மிக இலகுவாக ஏமாற்றிவிடுகிறார்கள். டயகம சிறுமியின் மரணத்துக்குப் பிறகு இவ்வாறான தரகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் ஆராயும் கூட்டம் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது. தரகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. எனினும், இது முதல்கட்ட பேச்சுவார்த்தை மட்டும்தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது நாட்டில் 45 ஆயிரம்சிறுவர்தொழிலாளர்கள் இருப்பதாக ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. அப்படியானால் பெற்றோரின் அனுமதியுடன் அவர்களுடைய பணத்தேவைக் காகத்தானே அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார்கள்?

ஒரு குற்றம் நிகழ்ந்துவிட்டால் அந்தக் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துகள் கிடையாது. ஆனாலும், இனியொரு சம்பவம் இவ்வாறு இடம்பெறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லையல்லவா?

அவ்வாறாயின் அடிப்படையில் மாற்றங்கள் நிகழ வேண்டும். அந்த மாற்றம் என்னிலிருந்து, உங்களிலிருந்து, நம் வீடுகளிலிருந்து உருவம் பெற வேண்டும்.

குற்றங்களைக் கண்டு அதற்கெதிராக போராட்டம் செய்வது ஒருவகையான எதிர்ப்பும் தீர்வுக்கான அழுத்தமுமாகும். அதைவிட எமக்கென ஒரு கடப்பாடு உண்டு. இளைஞர்கள் இணைந்து இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம்.

01. நமது அயலவர்கள் யாராவது தங்கள் பிள்ளைகளை தொழிலுக்கு அனுப்பியிருந்தால் அது குறித்து பெற்றோருடன் கலந்துரையாடி அவ்வாறானவர்களை மீள அழைத்து கல்விக்கான உதவியை செய்தல்.

02. கிராமங்களில், தோட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

03. பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் குறித்த தகவல்களை திரட்டுதல்.

04. தரகர்களைக் கண்டறிந்து அவர்களின் வருமானத்துக்குப் பொருத்தமான வேறு தொழில்களை முன்மொழிதல்.

ஆகியவற்றை முதற்கட்டமாக செயற்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும், தோட்டங்களிலும் சிறுவர் விபரங்களைக் கண்டறியக் கூடியதாக இருக்கும்.

நமது சமூகத்தின் பாதுகாப்புக்காக அரசியல்வாதிகளையும், அதிகார வர்க்கத்தையும் நம்பியிருப்பதில் எந்தப் பயனும் கிடையாது. அவர்கள் தீர்வைப் பெற்றுத்தருவார்கள் எனக் காத்திருக்கவும் முடியாது. ஆதலால் மாற்றம் செய்வோம்.

# சேதன உர உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு



(நூருல் ஹுதா உமர், அக்கரைப்பற்று நிருபர்)

ஆரோக்கியம் மற்றும் வினைத்திறன் மிக்க பிரஜைகளை உருவாக்குவதற்கு நச்சுத் தன்மையற்ற உணவுக்கான உரிமைகள் எனும் அம்சம் ''சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக விவசாயத்துறைக்குள் சேதனப்பசளை பாவனையை கொண்டுவருவது அரசாங்கத்தின் நோக்கமாகும். அதனடிப்படையில், ''சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பசுமையான சமூக பொருளாதார கருத்திட்டத்திற்கமைவாக சேதன உரத்தைப் பயன்படுத்தும் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலான விசேட கலந்துரையாடல், நேற்று முன்தினம் (13) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம் தலைமையில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட சேதனப்பசளை உற்பத்தியாளர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கி உள்ளூரிலேயே சேதன உர உற்பத்தியை அதிகரித்தலுக்கான ஏற்பாடுகளை செய்வதே இக்கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும்.

இக்கலந்துரையாடலில் அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி, அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. ராஸிக், அக்கரைப்பற்று கமநல சேவை மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ.எல்.ஹமீத், ஆலிம் நகர் விவசாய விரிவாக்கல் மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.ஜீ.எம்.பிர்னாஸ், கமநல சேவை உத்தியோகத்தர்கள், கிராம நிர்வாக சேவை அதிகாரிகள், கமநல போதனா ஆசிரியர்கள், விவசாய தொழில்நுட்பவியலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மதுரை ஆதீனம் அருணகிரிநாதரின் இழப்பு

## சமூக ஒற்றுமைக்கான பேரிழப்பாகும்: மீஸான் ஸ்ரீலங்கா இரங்கல்



மதுரை ஆதீனம் காலமானார் எனும் செய்தி கவலையப்பதாக உள்ளது. சுவாசக் கோளாறால் மதுரை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் (வயது 77) உடல்நலக்குறைவு காரணமாக கடந்த இரு தினங்களுக்கு முன்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டதால் வென்டிலேட்டர் பொருத்தப்பட்டது.

அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சையளித்து வந்தனர் எனும் செய்தி வெளிவந்த போது பலரும் அவருக்காக பிரார்த்தனை செய்தார்கள். எனினும், சிகிச்சை பெற்று வந்த நிலையில் மதுரை ஆதீனத்தின் உயிர் பிரிந்தது எனும் செய்தி கவலையளிக்கிறது என அல்- மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்து மக்களுக்கு மட்டுமின்றி இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் ஏனைய இன மக்களுக்கும் விருப்பத்துக்குரியவராக மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் திகழ்ந்தார். ஏனைய சமூக மக்களையும் புரிந்துகொண்டு அவர்களுடன் எப்போதும் நல்ல உறவை பேணிவந்த அன்னாரின் இழப்பை சமூக ஒற்றுமைக்கான இழப்பாகவே நோக்க வேண்டியுள்ளது. மதுரை ஆதீனத்தின் 292ஆவது குருமகா சந்திதானமாக அருணகிரிநாதர் இருந்து வந்தார். தமிழகத்திலுள்ள தொன்மையான சைவ மடங்களில் மதுரை ஆதீனமும் ஒன்றாகும். இந்த நிலையிலிருந்து ஏனைய இன மக்களுடன் சகோதரத்துவத்தை கட்டிக்காத்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியாவில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு

(கிண்ணியா)

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் கடந்த சில தினங்களாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதாகவும், இந்நிலை கிண்ணியா சுகாதாரப் பிரிவிலும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதை அன்ரிஜன் பரிசோதனை முடிவுகள் நிரூபிப்பதாகவும் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேசத்தின் தற்போதைய கொரோனா நிலவரம் குறித்து ஊடகங்களுக்கு நேற்று (14) கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட சில பிரதேசங்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு, 16 பேர் அன்ரிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் எட்டு பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவில் 4 பேரும், பெரியாற்று முனை கிராமசேவகர் பிரிவில் 2 பேரும், பைசல் நகர் கிராம சேவகர் பிரிவில் 2 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர்.



இவர்களோடு கடந்த ஜூலை 21 தொடக்கம் ஒகஸ்ட் 23 வரை இந்தப் பிரதேசத்தில் 19 பேர் கொரோனா நோயாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது ஆபத்தான நிலையின் ஆரம்பகட்டமாகும். இந்த மாதம் மாத்திரம் 25 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

கொரோனா தாக்கத்தையும், பரவல் வேகத்தையும் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் அச்சமின்றி தடுப்பூசியை பெற்றுக் கொள்வதும், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடப்பதும் அவசியம் என அவர் கேட்டுக் கொண்டார்.

# செஞ்சோலைப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்

## தடைகளையும் மீறி சிவாஜிலிங்கம் அஞ்சலி





செஞ்சோலைப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு படுகொலையானவர்களுக்கு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். வல்வெட்டித் துறையிலுள்ள தனது அலுவலகத்தின் எதிரில் நேற்றுக் காலை சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

குறித்த அஞ்சலி நிகழ்வுக்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்திய போதிலும், அவற்றினையும் மீறி படுகொலை யானோருக்கு அஞ்சலி செலுத்தினார்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியிலிருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14ஆம் திகதி விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் 54 மாணவிகளும்,7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 150க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர்.

# ஹிஷாலினியின் சடலம் இரண்டாவது முறையாக டயகமவில் நல்லடக்கம்









(க.கிஷாந்தன்)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய டயகம சிறுமி ஜூட்குமார் ஹிஷாலினியின் சடலம் இரண்டாவது முறையாக மீண்டும் நேற்று முன்தினம் (13) மாலை 6.57 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய நுவரெலியா நீதிமன்ற நீதவான் திருமதி லுசாக்காகுமாரி முன்னிலையில் மூன்று சிரேஷ்ட சட்டவைத்தியர்களினூடாக ஹிஷாலினியின் உடலை ஜூலை மாதம் 30ஆம் திகதி இரண்டாவது முறையாக பரிசோதனைக்குட்படுத்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், சடலம் தோண்டியெடுக்கப்பட்டு பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சிறுமியின் பெற்றோர் தமது மகளின் உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதென சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அதிகார சபைக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் முறையிட்டிருந்தனர். இதற்கமைய கொழும்பு மேலதிக நீதவான் ரவீந்திர ஜயசூரிய முன்னிலையில் சிறுமி ஹிஷாலினியின் மரணம் குறித்த விசாரணைகள் இடம்பெற்றன.

சிறுமியின் தரப்பில் சட்டமா அதிபர் திணைக்கள சொலிசிட்டர் ஜெனரல் ஆஜராகி அடக்கம் செய்யப்பட்டுள்ள சிறுமியின் சடலத்தைத் தோண்டி மீண்டும் இரண்டாவது பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என நீதிமன்ற உத்தரவைக் கேட்டிருந்தார். இதற்கமைய சிறுமியின் சடலத்தைத் தோண்டி மீண்டும் பரிசோதனைக்குட்படுத்த வேண்டும் என கொழும்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

பேராதனை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுமியின் உடலுக்கு ஒன்பது மணிநேரமாக இரண்டாவது பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு அதன் பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பிரேத பரிசோதனைகள் முடிவுற்ற நிலையில் சிறுமியின் உடல் மீண்டும் 15 நாட்களுக்குப் பின் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தோட்ட மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.


**டயலொக் ஆசிஆட்டா குழு ஆனது ISO 14001:2015 தரச்சான்றிதழ் பெற்ற தெற்காசியாவின் முதலாவது குவாட் ப்ளே தொலைத்தொடர்பு நிறுவனம் என்ற பெயரை பெறுகிறது**

**உலகளாவிய ரீதியில் இணங்காணப்பட்ட அங்கீகாரத்துடன் தனது நிலைத்தன்மையை உறுதிப்படுத்துகிறது.**

சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மைக்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ISO 14001:2015 தரச்சான்றிதழ் பெற்ற தெற்காசியாவின் முதலாவது குவாட் ப்ளே தொலைத்தொடர்பு (மொபைல், நிலையான, ஊடகம் மற்றும் புரோட்பாண்ட்) நிறுவனம் என்ற பெயரை பெறுகிறது. ISO 14001 தரத்துடன் இணங்குதல் என்பது நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஒரு பயனுள்ள சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பை (EMS) உருவாக்கி பேணுகின்ற அர்த்தமுள்ள சுற்றுச்சூழல் கொள்கைகளைக் கொண்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஒரு தன்னார்வ சர்வதேச சான்றிதழ் ஆகும். தலைப்பில் கடுமையான கவனம் செலுத்துவதற்காக இது ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்பட்டு தணிக்கை செய்யப்படுகிறது. மற்ற ISO தரங்களைப் போலவே, இந்த தரமும் ஒரு சர்வதேச நிபுணர் குழுவால் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும். நிலைத்தன்மை என்பது டயலொக்கின் கூட்டுத்தாபன நெறிமுறைகளில் ஒரு ஒருங்கிணைந்த உறுப்பு ஆகும். பல ஆண்டுகளாக, டயலொக் எனும் வர்த்தக நாமம் இலங்கையர்களின் உள்ளங்களில் ஏற்படுத்தியிருக்கும் ஆழமான எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில், மிகவும் அபிமானம் பெற்ற தொலைதொடர்பு வர்த்தக நாமம்" ஆன இது, அதன் வணிகங்களில் மதிப்பு உருவாக்கத்தை அதிகப்படுத்தியது, அதன் செயல்பாடுகளின் எதிர்மறையான தாக்கங்களைத் தணித்தல் அல்லது நீக்குவதன் மூலம் பசுமையான எதிர்காலத்தை சாத்தியமாக்கியுள்ளது. டயலொக்கின் இந்த முயற்சிகள் United Nations Global Compact இன் உள்நாட்டு பிரிவான இலங்கையின் Global Compact Network மற்றும் நாட்டின் வளமான பல்லுயிர் பாதுகாப்பைப் பாதுகாக்க உறுதியளித்த




இலங்கை வணிகங்களின் வலையமைப்பான Biodiversity Sri Lanka ஆகியவற்றின் ஸ்தாபக பாத்திரங்களுடன் ஒத்துப்போகின்றன. டயலொக் அதன் EMS இன் சுயாதீன மதிப்பீட்டை வெற்றிகரமாக நிறைவுசெய்தது மற்றும் DNVGL தரத்திற்கு சான்றிதழ் பெற்றது மற்றும் RvA நெதர்லாந்தால் அங்கீகாரம் பெற்றது. டயலொக் 2021 ஜூன் 7 அன்று சான்றிதழ் பெற்றது மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான இணக்கத்தை சரிபார்க்க அவ்வப்போது நடத்தப்பட்ட கண்காணிப்பு தணிக்கைகளுடன் சான்றிதழ் 3 வருட காலத்திற்கு செல்லுபடியாகும். இந்த சான்றிதழ் டயலொக் இப்போது ஒரு வலுவான சுற்றுச்சூழல் நிர்வாக பொறிமுறையை கொண்டுள்ளது என்பதைக் குறிக்கிறது, அதன் நிலையான பயணத்தை மேலும் மேம்படுத்துகிறது. தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை மறுசீரமைத்தல் - கழிவு மேலாண்மை முதல் சுற்றுச்சூழல் நோக்கங்களை அமைத்தல், மதிப்புச் சங்கிலி முழுவதும் மாற்று சூழல் நட்பு செயல்முறைகளை செயல்படுத்துதல், அதன் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பெரிய அளவிலான விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் நிலைத்தன்மை சார்ந்த பணியிட கலாச்சாரத்தை நோக்கி நகர்தல் ஆகியவை இதில் அடங்கும்.

Dialog
எதிர்காலம் இன்றே.




# இந்திய உயர் ஸ்தானிகரின் சுதந்திர தினச் செய்தி




**கௌரவ ராம் நாத் கோவிந்த்**
**இந்திய ஜனாதிபதி**

இந்தியா தனது மேன்மைக்குரிய 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் நிலையில், இலங்கையிலுள்ள சக இந்தியர்கள் மற்றும் இலங்கை மக்கள் அனைவருக்கும் நான் எனது இதயபூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன். உலகளாவிய ரீதியில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும் கொவிட் 19 சவால்கள், எமது இரு நாடுகளிலுமுள்ள வலுவான தலைமைத்துவங்களின் வழிகாட்டுதல்கள் மூலமாக வெற்றிகொள்ளப்பட்டு இந்திய - இலங்கை இரு தரப்பு உறவு ஸ்திரமாக முன்னேற்றமடைந்துள்ளது. எமது இரு பிரதமர்களிடையில் 2020 செப்டெம்பரில் இடம்பெற்ற முதலாவது மெய்நிகர் மாநாடு, இவ்வருடம் இந்திய வெளியுறவு அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலாவது வெளிநாட்டு விஜயமான இலங்கைக்கான விஜயம், 2020 நவம்பரில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் இலங்கை விஜயம் ஆகியவை பரஸ்பர நலன்கள் அடிப்படையிலான சகல துறைகளிலுமான ஒத்துழைப்புக்குரிய திட்டங்களை ஒழுங்கமைத்திருந்தன.

அத்துடன், மக்களை அடிப்படையாக கொண்டு இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டங்கள் இந்நாட்டில் வாழும் சாதாரண மக்களின் வாழ்க்கையில் அர்த்தம் நிறைந்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. 2017இல் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை மூலமாக கிடைக்கப்பெற்ற மிக முக்கியமான பெறுபேறுகளில் ஒன்றான சுவசெரிய 1990 அம்புலன்ஸ் சேவை கொவிட் நிலைமையில் இலங்கை மக்களுக்காக பாரிய சேவையினை வழங்கியுள்ளது, இச்சேவை உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் முதல் ஆளுமை விருத்தி செயற்பாடுகள் வரையிலான பல்வேறு உதாரணங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட முடியும்.

கடந்தவருடம், கொவிட் 19க்கு எதிரான இலங்கையின் போராட்டத்தில் இந்தியா முக்கிய பங்காளராக இருக்கும் அதேநேரம், புதிய முயற்சிகளில் நீண்டகால மற்றும் நம்பகமான பங்காளராகவும் இந்தியா உள்ளது. எம் டி நியூ டைமன்ட் கப்பல் மற்றும் எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஆகியவற்றில் ஏற்பட்டிருந்த தீயினை கட்டுப்படுத்தும் முயற்சியில் பங்களிப்பு வழங்கியமை, அதேபோல் இவ்வருடம் ஜனவரியில் இலங்கை தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக கொவிஷீல்ட் தடுப்பூசியினை வழங்கியமை மூலம் இந்தியா முதலில் பதிலளித்து செயற்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையில் அக்கறை செலுத்தி வரும் நிலையில், அத்திட்டத்திற்கு மேலும்



**கௌரவ நரேந்திர மோடி**
**இந்திய பிரதமர்**

வலுவூட்டும் விதமாக இலங்கையில் சூரியகல மின்சக்தி திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகை அடிப்படையிலான கடன் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இரு நாடுகளினதும் மக்களின் பொதுவான செழிப்புக்காக சிறந்த பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் உட்கட்டமைப்பு, சக்தி துறை, தொடர்பாடல், சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய துறைகளிலும் இதேபோன்ற திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியா உறுதியுடன் உள்ளது.

கொவிட்19 இரு நாடுகளிலும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையிலும் திருமலை திருப்பதி தேவஸ்தானம், அத்துடன் சரநாத்திலுள்ள முல்கந்தகுடி விகாரை உள்ளடங்கலாக இரு நாடுகளிலும் பல்வேறு இடங்களில் இரு நாட்டு மக்களினதும் நலன்களை வேண்டி சிறப்பு பிரார்த்தனைகள் வழிபாடுகள் நடைபெற்றிருந்தன. இலங்கை விமானப்படையின் எழுபதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் இலங்கையில் முன்னொருபோதும் இடம்பெற்றிருக்காத வகையில் நடைபெற்ற வான் சாகச கண்காட்சியில் இந்தியாவும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை இருநாடுகளினதும் ஒத்துழைப்பு, இருதரப்பு ஆயுதப் படைகள் இடையிலான தோழமை மற்றும் நட்புறவினைக் காண்பிக்கின்றது.

கொவிட் சவால்களின் நிழல்களுக்கு மத்தியில் அதிகரித்துவரும் முதலீடுகள் மற்றும் ஏற்றுமதித்துறையின் துரித வளர்ச்சி ஆகியவற்றுடன்



**கௌரவ கோபால் பாக்லே**
**இலங்கைக்கான**
**இந்தியத் தூதுவர்**

ஆத்மநிர்பார் பாரத் (சுயசார்பு இந்தியா) நிலைபேறான முன்னேற்றத்தைக் கண்டுவருகிறது, சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் மீதான விசேட கவனத்துடன் எதிர்காலத்தில் இலங்கை - இந்தியா இடையிலான பழைமையானதும் மிகவும் நெருக்கமானதுமான நாகரீக உறவினை எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் வலுவாக்குவதில் நானும் உயர் ஸ்தானிகராலயத்திலுள்ள எனது சகபாடிகளும் அர்ப்பணிப்புடன் உள்ளோம். ■





**அதி மேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 நவம்பரில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது.**





**இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர்.எஸ். ஜெய்சங்கர் 2021 ஜனவரியில் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டபோது.**




**வெளிவிவகார அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள் 2020 ஜனவரியில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டபோது.**





**2020 செப்டெம்பரில் இடம்பெற்ற மெய்நிகர் இருதரப்பு மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரைக் காணலாம்.**




**டோக்கியோவிலிருந்து தெற்காசியாவுக்கு ஒலிம்பிக்கில் சுவட்டு மற்றும் கள போட்டிகளில் பிராந்தியத்தில் முதலில் தங்கம் வென்ற வீரரான நீரஜ் சொப்ரா**




**இரு தேசங்கள் ஓர் உணர்வு; 3 ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் 3 T20 போட்டிகளுக்காக இந்திய அணி இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டது.**



**இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் 2020 நவம்பரில் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டபோது.**




# மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதான அபிவிருத்தி பங்குடைமை



இலங்கையுடனான இந்தியாவின் அபிவிருத்திப்பங்குடமையானது இலங்கை அரசாங்கத்தினதும் அதன் மக்களினதும் விருப்புக்கிணங்க முன்னெடுக்கப்படுகிறது. மொத்தமாக 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமாக இந்தியாவானது பாரிய உள்ளக கட்டமைப்பு திட்டங்களுடன் மக்களின் வாழ்க்கைக்கு தேவையான அம்சங்களான சுகாதாரம்,கல்வி ,வீடமைப்பு ,கைத்தொழில் அபிவிருத்தி உள்ளடக்கும் விதத்தில் அபிவிருத்தி திட்டங்களைமுன்னெடுத்து வருகிறது. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவது உள்ளூர் பொருளாதாரத்திற்கு பெரிதும் பங்களிக்கிறது. ஏனெனில். அவை பெரும்பாலும் இலங்கை ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தொழிலாளர்களை நம்பியுள்ளதன் காரணமாக ஆகும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் 5 கடன் சலுகையுடனான திட்டங்கள் பாதுகாப்பு, புகையிரதம்,உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி, தொடர்பாடல் மற்றும் சோலார் ஆகிய பகுதிகளை உள்ளடக்குகிறது. கொவிட் –19 தொற்று நோய் சவால்களை சமாளித்து இத்திட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன. இவற்றில் 2020 ஜூன் மாதத்தில் 42.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 10 டீசலால் இயங்கும் புகையிரத விநியோகம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் 40 புகையிரதப்பயணிகள் வண்டிகள் விநியோகம் என்பன பூர்த்தி செய்யப்பட்டமையும் உள்ளடங்குகின்றன.

சூரிய சக்தித் திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்துக்கும் இந்தியாவின் எக்ஸிம் வங்கிக்கும் இடையே100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒப்பந்தமொன்று 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதுடன், இது இரண்டு அரசாங்கங்களினதும் தூய்மை மற்றும் பசுமை சக்திக்கான செயல்திறனை கோடிட்டு காட்டியதுடன் அத்துடன்2030ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்சக்தியில் 707 ஆனது புத்தாக்க சக்தியின் ஊடாக பெறப்படுவதை உறுதிப்படுத்தும் இலங்கை ஜனாதிபதியின் இலக்கினை பிரதிபலிப்பதாகவும் இருந்தது.இந்த ஒப்பந்தமானது குடும்பங்கள் மற்றும் அரசாங்க கட்டிடங்கள் மற்றும் நாடாளுமன்ற கட்டிடத்துக்கான மிதக்கும் சூரிய ஆலை,ஆகியவற்றுக்கான வேதியியல் இயக்கத்துக்கான மேற்கூரை முறைமை போன்ற பல திட்டங்களுக்கு நிதியினை வழங்குகிறது.



நாடளாவிய வீடமைப்பு திட்டங்களின் கீழ் இந்தியாவானது ஏற்கனவே சுமார் 50000 வீடுகளை நிர்மாணித்துள்ளதுடன், இது சொந்த வீடுகளில் வசிக்கும் பலரது கனவுகளை நனவாக்கியுள்ளது.சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் 1990 சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இக்கால கொரோனா பரிசோதனைகளில் பங்களிப்பினை வழங்குவதாக உள்ளது. ருஹுணு பல்கலைக்கழகத்தில் கலைநேர்த்தியாக அமைக்கப்பட்ட ரவீந்திரநாத் தாகூர் கேட்போர் கூடமானது தென் மாகாணத்தில் பாரிய வசதிகளில் ஒன்றாக திகழ்கிறது.



இந்தியாவானது இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் உள்ள பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய 80 க்கும் மேற்பட்ட மக்கள் சார்ந்த திட்டங்களுடன் தொடர்புடையதாக திகழ்கிறது.தம்புள்ளையில் நிர்மாணிக்கப்படும் 5000 மெட்ரிக் தொன் வெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகசாலையானது விரைவில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது விவசாயிகள் தமது உற்பத்திகளை நீண்ட காலத்துக்கு சேமித்து வைத்துக்கொள்ள உதவும்.ஒரு தனித்துவமான ஏற்பாட்டில், இந்திய மற்றும் இலங்கை நிறுவனங்கள் ஒன்றிணைந்து, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒரு கூட்டு முயற்சியை உருவாக்கின. புதிய மாதிரிகள் மற்றும் யோசனைகள் தோன்றினாலும், இருதரப்பு உறவின் முக்கிய தூணின் மையமாக மனித மூலங்களே இருக்கும்.








# வர்த்தகம் மற்றும் முதலீடுகளில் பங்குடைமை



பொருளாதார மற்றும் வர்த்தகத் துறைகளில் இந்திய –இலங்கை பங்குடமையானது பன்முகத்தன்மை கொண்டதாகவும், விசாலமானதாகவும் திகழ்கிறது.இந்த நெருங்கிய தொடர்பானது வலுவான வர்த்தக உறவுகள் ,முதலீடு,மின் மற்றும் சக்தித்துறைகளில் கூட்டாக செயற்படுதல்,தொடர்பாடல் மேம்பாட்டில் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.2020ஆம் ஆண்டில் இந்தியாவும், இலங்கையும் தொற்றுநோய் சம்பந்தமான சவால்களுக்கு மத்தியிலும் பரஸ்பர வர்த்தக மற்றும் பொருளாதார பங்குடமையை நிலைநிறுத்தக்கூடியதாக இருந்தது.

## வர்த்தகம்

★2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த விற்பனைப்பொருள் வர்த்தகம் 3.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

★இந்தியாவானது இலங்கையின் 2 ஆவது பாரிய வர்த்தக பங்காளராகும்.

★1998 ஆம் ஆண்டில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையானது பரஸ்பர வர்த்தகத்தில் சீரான வளர்ச்சிக்கு வழிவகுத்ததுடன் 64% இலங்கை ஏற்றுமதிகள் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் உள்ளடங்குவதுடன் இலங்கைக்கான 5% ஏற்றுமதிகள் மட்டுமே சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் விருப்பு வழியை பின்பற்றுகின்றன.

## இலங்கையில் இந்திய முதலீடுகள்

★இந்தியாவானது இலங்கையின் பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு பங்காளராகும்.

★தற்போது இலங்கையில் பாரிய எண்ணிக்கையிலான முன்னணி இந்திய நிறுவனங்கள் காணப்படுகின்றன.

★இலங்கை முதலீட்டுச் சபையானது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவில் இருந்தான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பீடு செய்துள்ளது.



★இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்கு உற்பத்தி வசதிகளை செய்து கொடுத்தல்,உள்நாட்டு இலங்கையர்களுக்கு தொழில் வசதிகளை உருவாக்குதல்,புதிய தொழில்நுட்ப உத்திகளை அறிமுகப்படுத்தல்,திறன் அபிவிருத்திமற்றும் அறிவு பகிர்வு ஆகியவற்றின் மூலம் பங்களிப்பு செய்துள்ளது.

★2020 ஆம் ஆண்டு கொழும்பில் HCL தொழில்நுட்பங்களுக்கான அபிவிருத்தி நிலையம் அமைக்கப்பட்டது. இந்நிலையத்தின் மூலம் அடுத்த 3 தொடக்கம் 5 வருடங்களில் 5000க்கு மேற்பட்டோருக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★லங்கா ஐ.ஓ.சீ [LIOC],ஆனது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கடந்த இரு தசாப்த காலமாக இலங்கையின் சக்தி தேவையை நிறைவு செய்து வருவதுடன் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கேற்ப இலங்கையின் முதலாவது கிரீஸ் உற்பத்தி ஆலையை திருகோணமலையில் அமைப்பதற்கு முன்மொழிந்துள்ளது.

★மஹிந்திரா,லங்கா அசோக் லேலண்ட் மற்றும் டாடா என்பன இலங்கையில் வாகன வர்த்தகத்தை தொடர்கின்றன.

## பயண சேவை

இரு நாடுகளுக்கும் இடையே பாரிய பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக காரைக்கால் –காங்கேசன்துறை படகுப்பயண சேவை ஆரம்பித்தல், யாழ்ப்பாணம்–சென்னை விமான சேவையினை மீள ஆரம்பித்தல் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

## எதிர்கால செயற்பாடுகள்

★கெரவலப்பிட்டியவில் LNG யை அடிப்படையாகக் கொண்ட சக்தி ஆலை

★சாம்பூரில் சூரிய சக்தி ஆலை

★குறுக்கு எல்லை கட்டம் இடையேயான இணைப்பு திட்டம் மற்றும் பல





## கொவிட்-19 சவால்களை வாய்ப்புகளாக மாற்றுதல்

★இரு நட்புறவு நாடுகளும் ஒன்றிணைந்து தொற்று நோய்க்கெதிராக போராடுகின்றன.

★இந்தியாவானது 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாணய பரிமாற்று வணிகத்தை வழங்கியது.

★2020 ஏப்ரல் –மே மாதத்தில் 26 தொன்கள் மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துகளை விநியோகித்தது.

★2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி இலங்கைக்கு 500,000 தடுப்பூசி மருந்துகளை அன்பளிப்பாக வழங்கியது.

# ஸ்டாலினின் நடவடிக்கையால் அதிர்ச்சியடைந்த

## அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்




**ரமணி**








தமிழக அரசியலில் அரங்கேறிய இரண்டு சம்பவங்களால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். தமிழக அரசின் நிதியமைச்சர் வெளியிட்ட வெள்ளையறிக்கை, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மீதான வழக்குப் பதிவு என்பனவற்றால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழத் தலைவர்கள் தம்மைப் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெளியிட்ட வெள்ளை அறிக்கையால் தமிழகத்தின் நிதி நிலைமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், கஜானா காலியாகிவிட்டது எனச் சொல்வது வழமை முதலமைச்சர் ஸ்டாலின் அப்படிச் சொல்ல விரும்பவில்லை. வெள்ளையறிக்கையின் மூலம் கஜானா காலியாகிவிட்டதென்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளார்.

வெள்ளையறிக்கை என்பது அரசின் வரவு-செலவுகள் குறித்து வெளியிடப்படும் வெளிப்படையான அறிக்கை. உள்ளாட்சி, பொதுப்பணி, மின்சாரம், போக்குவரத்து என ஒவ்வொரு துறை சார்ந்து தனித்தனியாகவோ, அனைத்துத்துறை சார்ந்து ஒட்டுமொத்தமாகவோ இந்த வெள்ளையறிக்கை வெளியிடப்படும். அதேபோல இந்த வெள்ளையறிக்கை ஆண்டுக்கு ஒன்றோ, ஒவ்வொரு ஆட்சிக் காலம் முடிந்த பின்போ வெளியிடப்படும். ஆனால், கடந்த 21 ஆண்டுகளாகப் பல காரணங்களுக்காக இந்த வெள்ளையறிக்கையை தமிழ்நாடு அரசு வெளியிடாமலிருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தின் நிதிநிலை குறித்து அப்போதைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் நிதியமைச்சர் பொன்னையன் வெளியிட்டதுதான் கடைசி வெள்ளையறிக்கை

போக்குவரத்து, மின்சாரம் ஆகிய துறைகளில் ஊழல், மோசடி நடைபெற்றுள்ளது. அரசுக்குச் சேர வேண்டிய பணம் எங்கே போனது? அதைத் தேடிக் கண்டுபிடித்து மீட்க வேண்டும் என தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். நிதியமைச்சரின் வெள்ளையறிக்கை பற்றிய விவாதம், விமர்சனம் என்பன விவாதப்பொருளாக மாறி சூடு பிடிப்பதற்கிடையில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் வீடு, அலுவலகம் ஆகிய இடங்களில் தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை அதிரடி சோதனை நடத்தியது.

வேலுமணியின் சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவருடன் தொடர்புடைய ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரின் வீடுகள், அலுவலகங்கள் என்பனவும் சோதனைக்குத் தப்பவில்லை. சென்னை, கோவை உள்ளிட்ட சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை செய்தனர். முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டில் இலஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை செய்தபோது, முதலில் தன்னைத் தேடி வருவார்கள் என நினைத்ததாகத் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடனேயே இப்படி ஒரு சம்பவம் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. கொரோனா தொற்றினால் தமிழகம் அல்லல்பட்ட வேளையில் முதலமைச்சர் ஸ்டாலின் மக்கள் சேவையே முக்கியம் எனக் கருதினார். அதனால், அதிரடி நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை

தேர்தல் பிரசாரத்தின்போது ஊழல் செய்த அன்றைய அமைச்சர்கள் மீது ஸ்டாலின் சரமாரியாக குற்றம் சாட்டினார். அவர்களின் ஊழல் பட்டியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தே ஸ்டாலின் பிரசாரம் செய்தார். வேலுமணியை 'ஊழல்மணி' என அழைத்தார். இது ஸ்டாலினின் அரசியல் பழிவாங்கல் என அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தெரிவித்தனர். தமிழக பாரதீய ஜனதா தலைவர்களும் ஸ்டாலினுக்கு எதிராகக் கருத்துச் சொல்லியுள்ளனர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, ஊழல் ஆட்சி என அமித் ஷா முன்னர் தெரிவித்திருந்ததை அவர்கள் மறந்து விட்டார்கள். ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்கள் வாயைத் திறக்காமல் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

ஸ்டாலின் முதலமைச்சராவதற்கு முன்னரே வேலுமணி மீது ஊழல் புகார் தெரிவிக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் பாரதியும், அறப்போர் இயக்கமும் கொடுத்த புகாரின் அடிப்படையில் இலஞ்ச ஒழிப்புத்துறை எஸ்.பி.வேலுமணி மீது வழக்குப் பதிவு செய்திருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியும் வேலுமணிக்கு எதிராக நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்துள்ளது. இப்போது அண்ணா திராவிட முன்னாற்றக் கழகத்தின் தோழமைக் கட்சியாக பாட்டாளி மக்கள் கட்சி இருக்கிறது.

வேலுமணிக்கு எதிரான ஊழல் புகாரை 2017 ஆம் ஆண்டு ஆளுநரிடம் ஓ.பன்னீர்ச்செல்வம் கையளித்தார். இன்றா வேலுமணிக்கு ஆதரவாக ஓ.பன்னீர்ச்செல்வம் குரல் கொடுக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின்போது வேலுமணியின் ஊழல்களை ஆதாரத்துடன் பட்டியலிட்ட ஸ்டாலின் அதனைத் தமிழக ஆளுநரிடம் கையளித்தார். அப்போது வேலுமணியை விசாரணை செய்வதற்குப் போதிய ஆதாரம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் வீட்டில் இதேபோல் சோதனை நடைபெற்ற போது எதுவித சலசலப்பும் ஏற்படவில்லை. வேலுமணியின் வீட்டின் எதிரில் குவிந்த தொண்டர்கள் பொலிஸாருடன் மல்லுக் கட்டினர். அவர்களுக்கு வேண்டிய உணவு, குளிர்பானம் என்பன வழங்கப்பட்டன.

வேலுமணிக்கு எதிரான வழக்கை எதிர்கொள்வதற்காக வழக்கறிஞர் குழுவை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துள்ளது. விஜயபாஸ்கரை விட வேலுமணி முக்கியமானவர் எனபதை இது எடுத்துக் காட்டுகிறது. இதேபோன்ற சோதனைகள் தொடரும் என்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உணர்ந்துள்ளது.

எஸ்.பி.வேலுமணி அமைச்சராக இருந்தபோது தனது பதவியைப் பயன்படுத்தி உறவினர்கள் மற்றும் நெருக்கமானவர்களுக்கு ஒப்பந்தங்களை அளித்தமை தொடர்பான புகார் எழுந்ததையடுத்து இலஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வழக்குப் பதிவுசெய்துள்ளனர். இது குறித்து எஸ்.பி.வேலுமணியிடம் விசாரணையும் நடத்தினர். முதல் தகவலறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு தமிழகத்தின் உள்ளாட்சித்துறை அமைச்சராக எஸ்.பி.வேலுமணி பொறுப்பேற்றார். இவரது நிர்வாகத்தின் கீழ் தான் சென்னைப் பெருநகர மாநகராட்சி மற்றும் கோவை மாநகராட்சி ஆகியவை இருந்தன. எஸ்.பி. வேலுமணி 2014 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கான ஒப்பந்தங்களை தனக்கு நெருக்கமானவர்களுக்கு முறைகேடாகத் தர அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளார். கோவை மாநகராட்சிக்கான அரசு ஒப்பந்தங்களையும் நெருக்கமானவர்களுக்குத் தருவதற்காக அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தியுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை 464.02 கோடி ரூபா அளவிற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்தங்களும், 346.81 கோடி ரூபா மதிப்பிலான கோவை மாநகராட்சி ஒப்பந்தங்களும், தனக்கு நெருக்கமானவர்களின் நிறுவனங்களுக்கு முறைகேடாக வழங்கியுள்ளார் என்பதே வேலுமணி மீதான குற்றச்சாட்டாகும்.

விஜயபாஸ்கரின் வீடு, அலுவலகம் என்பனவற்றில் நடைபெற்ற அதிரடிச் சோதனை ஆரம்பம்தான். அடுத்து கே.டி.ராஜேந்திர பாலாஜி, சி.விஜயபாஸ்கர் - பி.தங்கமணி ஆகியோரின் பெயர்கள் இருப்பதாகத் தகவல் கசிந்தது. ஆனால், யாருமே எதிர்பாராத வகையில் வேலுமணி குறிவைக்கப்பட்டார்.



# தேவதை...

மாலைப்பொழுது வானத்துக்கு மஞ்சள் கலந்த இளஞ்சிவப்பு நிறத்தைக் கொடுத்து திரும்ப வாங்கியவண்ணம் கதிரவன் மேற்குத் தொடர்ச்சி மலைக்குள் புகுந்துகொண்டிருக்கிறது.

ஆறாம் வகுப்பு படிக்கும் கணேஷ் பாடசாலையிலிருந்து வந்தவுடன் புத்தகப்பையை இறக்கிவிட்டு அடுப்படியில் கண்ணாடி டப்பாவில் போட்டு வைத்திருந்த பொரிகடலையை இரண்டு வாய் அள்ளிப்போட்டுக்கொண்டு தெருவின் முற்றத்தில் விளையாடப் போய்விட்டான்.

இருள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது.

“ஏய் கணேஷ்! விளையாடியது போதும், வந்து படிடா” என்று அம்மா கூவ, ஓடிவந்தான்.

“போய் கை, கால் அலம்பிட்டு மாடி மேலே போயி படி.”

கணேஷ் நெடுநேரம் மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்தான்.

“கணேஷ் நேரமாயிடுச்சு. சாப்பிட்டு தாத்தா கூடப் போய்ப் படு. காலையில் படிக்கலாம்” என்றாள் அம்மா.

சாப்பிட்டுவிட்டு தாத்தாவுடன் படுத்தான். தூக்கம் வரவில்லை. “தாத்தா ஒரு கதை சொல்லுங்க தாத்தா” என்றான்.

பேரக்குழந்தை கேட்கிறதே என்று தாத்தாவும் கதை கூற ஆரம்பித்தார்.

ஓர் ஊர்ல ஒரு ராஜா. அவரு ஆட்சியில மாதம் மும்மாரி பொழிந்தது. அந்த ராஜாவுக்கு மீனான்னு ஒரு ராஜகுமாரி. தேவதை போல கொள்ளை அழகு. குருகுலத்துல நல்லா பாடம் படிச்சும் வீர, தீர வித்தைகளை கத்துகிட்டும் இருந்தா. அழகும் அறிவும் இணைந்த பொக்கிஷம் என்று நாட்டு மக்கள் இளவரசியைப் புகழ்ந்தார்கள்.

மீனாவுக்காகவே வனம் போன்ற அழகுடன் அரண்மனைக்குப் பக்கத்தில் நந்தவனம் அமைத்துக் கொடுத்தார் ராஜா. மாதம் ஒரு தடவை அரண்மனையை விட்டு வெளியே வரும் மீனா, நந்தவனம் வந்து உலவிவிட்டுப் போவாள்.

அந்த ஊர் மக்கள் எல்லாம் மகிழ்ச்சியா இருக்கிற நேரத்துல அந்த ஊருக்குள்ள ஒரு வேதாளம் புகுந்தது. அந்த வேதாளம் ராத்திரி நேரம் ஊருக்குள் வந்து கல்யாணம் ஆகாத பொண்ணுங்க யாரு வந்தாலும் அடிச்சி இரத்தம் குடிச்சு கொன்னு போட்டுடும். கல்யாணம் ஆகாத பெண்களை விட்டுட்டு வேற யாரையும் தொடுறதும் இல்லை. கண்ணுக்குத் தட்டுப்படறதும் இல்லை.

இந்த விஷயம் ராஜாவுக்குத் தெரிஞ்சி, வேதாளத்தைக் கொல்ல ஆட்களை அனுப்பினார். ஆனாலும் அதைக் கொல்ல முடியவில்லை. ராஜா குழம்பிப்போய் சோர்வாக இருந்தார்.

ராஜாவின் மனக்கவலையை மீனா அறிந்தாள்.

ஒரு நாள் ராஜகுமாரி ரொம்ப தைரியமாக ராத்திரி நேரம் அரண்மனைப் பின்பக்க வாசல் வழியா வேதாளத்தைப் பார்க்க கிளம்பினாள். கொஞ்சதூரம் போயி ஊரைக் கடந்ததும் வெள்ளிக்கொலுசை மாட்டி “ஜலக் ஜலக்” -னு சத்தம் வர்ற மாதிரி நடக்க ஆரம்பிச்சா.

உடனே பக்கத்துல இருக்குற ஒரு மரத்துல இருந்த அந்த வேதாளம் பாய்ந்து வந்து நின்றது. ராஜகுமாரி மீனாவுக்கு அதைப் பார்த்ததும் பயமாகிவிட்டது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வேதாளத்தைப் பார்க்காத மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

அந்த நேரம் ராஜகுமாரியின் கண்ணைப் பார்த்த வேதாளம் மின்னல் தாக்கின மாதிரி தடுமாறியது. அதேவேளையில் ராஜகுமாரி சுதாரித்தபடி, தனது இடுப்பிலிருந்த கத்தியைத் தூக்கி வேதாளத்தின் நெஞ்சில் எறிந்தாள். வேதாளத்தின் நெஞ்சு பிளந்து இரத்தம் பீறிட்டது.

வேதாளம் சாகப்போற நேரத்துல ராஜகுமாரியை கூப்பிட்டுச் சொன்னது, “தேவியாரே! நான் வேதாளம் இல்லை. பக்கத்து நாட்டு அரக்க வம்சத்தவன். உங்கள் ஊரில் செல்வச் செழிப்போடு மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதை சீர்குலைக்க எங்கள் ராஜாவால் வேதாளம் வேஷம் போட்டு அனுப்பப்பட்டவன் நான்” என்று சொன்னான். இதைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவன் உயிர் பிரிந்தது.

நாடே ராஜகுமாரியைப் புகழ்ந்தது. வீரத்திருமகள்னு அவளை முடிசூட்டி இளவரசி ஆக்கினார்கள்.

“என்னடா பேரப்புள்ள அந்த ராஜகுமாரி மாதிரி நீயும் நல்லா படிச்சி வீரமா, நல்ல தைரியத்தோடு, எதுக்கும் பயப்படாம இருக்கணும் என்ன!” என்று தாத்தா கேட்க, “கொர்கொர்” என்ற குறட்டையுடன் கணேஷ் தூங்கிக்கொண்டிருந்தான்.


விடியற்காலை ஐந்து மணிக்கு படிப்பதற்காக கணேஷை எழுப்பிவிட்டார். கணேஷும் எழுந்து முகம் கழுவிவிட்டு வந்து புத்தகத்தை எடுத்தவாறு தாத்தாவிடம் கேட்டான்:

“என்ன தாத்தா! ராத்திரி நீங்க ஏதோ ராஜா, ராஜகுமாரி, வேதாளம்னு சொன்னீங்க. ஆனா எனக்கு முழுக்கதையும் ஏன் சொல்லலை?” என்று கேட்டான்.

தாத்தா கலகலவென்று சிரித்து விட்டார்.



## வாரம் ஒரு சாதனையாளர்



## பீத்தோவன்

இசை உலகின் பிதாமகனாய் கருதப்பட்டவர் பீத்தோவன். மிகச்சிறந்த பியானோ இசைக்கலைஞரான இவர், மேற்கத்திய இசையின் பரிணாமத்திற்கு பெரும் பாலமாய் விளங்கியவர். இவர் முதன்முதலில் இசைக் கச்சேரி நடத்துகையில் இவருக்கு வயது 8. தனது 26ஆவது வயதில் கேட்கும் திறனை முழுமையாக இழந்தார் பீத்தோவன். ஆனால், இவர் அசரவில்லை. இசையிலேயே மூழ்கினார். இசையில் பல முத்துக்களை அள்ளினார். அவற்றுள் நைன்த் சிம்பனி, வயலின் கான்செர்டோ போன்றவை குறிப்பிடத்தக்கவை. பைபோலார் நோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார் இந்த இசை மேதை.

தமிழன் சிறுவர் உலா

## குதிரைவால் அருவி

குதிரைவால் அருவி அல்லது குதிரைவால் நீர்வீழ்ச்சி (Horsetail Fall, ஹோஸ்டெயில் அருவி) என்பது கலிபோர்னியாவிலுள்ள இயோசோமிட்டி தேசிய பூங்காவில் அமைந்துள்ள, குளிர்கால மற்றும் முன் வசந்தகால அருவியாகும். பெப்ரவரியில் காலநிலை நன்றாக இருக்கும் பட்சத்தில் இவ்வருவி பாயும்போது, சூரிய ஒளியால் செம்மஞ்சள், சிவப்பு நிறங்கள் ஒளிரும். இந்த இயற்கையான நிகழ்வு “நெருப்பு வீழ்ச்சி” என அழைக்கப்படும். இதன் உயரம் 650 மீற்றர்கள் (2,130 ft).



## ஒப்பாரிப்பாடல்

தமிழ் நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்று ஒப்பாரிப்பாடல். கிராமத்து மக்கள் வாழ்க்கையில் இசையானது பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. தாய், தந்தை, கணவன், பிள்ளை, உற்றார், உறவினர் எவரேனும் இறந்துவிட்டால் ஒருவருடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வை வெளிக்காட்ட ஒப்பாரி பாடப்படுகிறது. இறந்தவர்களின் வரலாறு பற்றித் தெரியாதவர்கள் அப்பாடல் மூலம் வரலாற்றை அறிய முடியும். ஒப்பாரி பாடல்களின் இசை, விளம்பமும் மத்யமும் கலந்த ஒரு லய அமைப்பில் முகாரி, ஆகிரி முதலான இராகச் சாயலுடன் விளங்குகின்றது.



## குட்டை குட்டை கத்தரிக்காய்

குட்டை குட்டை கத்தரிக்காய்
குண்டு குண்டாய் சுண்டங்காய்
நெட்டை நெட்டை முருங்கைக்காய்
நீண்டு தொங்கும் புடலங்காய்
சட்டிப்பானை போலவே
தடித்திருக்கும் பரங்கிக்காய்
பட்டை போட்ட வேப்பங்காய்
பச்சை நிற பாகற்காய்
செட்டையில்லா சுரைக்காய்
செக்கும் நல்ல தக்காளி
கொடியில் தொங்கும் அவரக்காய்
கௌவை நிற மிளகாய்
வாட்ட சாட்ட வாழைக்காய்
வந்து பார் என் தோட்டத்தில்
வந்து பார் என் தோட்டத்தில்

## உயரத்திலிருந்து கீழே விழுந்தால் எறும்புகள் உயிரிழக்குமா?



பொதுவாக ஒரு பொருள் கீழே விழுந்தவுடன் அது உடைய வேண்டுமானால், அது குறிப்பிட்ட அளவு எடை இருக்க வேண்டும்.

அது எவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தாலும் சரி.

ஆனால், எறும்புகளின் உடலின் சிறப்பம்சம் அதன் எடை அந்த குறிப்பிட்ட அளவை விட மிக மிகக் குறைவாக இருப்பதால் அவை எவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தாலும் அவற்றுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை.

மேலும் உடல் எடையின்மையால் காற்றின் உதவியுடன் சுலபமாக தரையிறங்கவும் முடியும். எனவே, எவ்வளவு உயரத்திலிருந்து எறும்புகள் கீழே விழுந்தாலும் அவை உயிரிழப்பதில்லை.

## ரஷ்யாவின் ரோயல் பெல்



இது ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகையில் அமைந்துள்ளது. உலகிலேயே வெண்கலத்தால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய மணி இது.

ஆங்கிலத்தில் ரோயல் பெல் என்ற பெயரும் ரஷ்ய மொழியில் ஜார் கொலோகோல் என்ற பெயரும் இதற்கு உண்டு.

நெப்போலியன் போனாபர்ட் இதை பிரான்ஸுக்கு எடுத்துச் செல்ல முயற்சித்தார். ஆனால், இதன் அதீத எடை காரணமாக முடிவைக் கைவிட்டார்.

**கட்டுமானம்**


ராணி அண்ணா ஈவ்னோ என்பவர்தான் 1735இல் இந்தப் பணியை நிறுவினார்.

இதனை ஐவான் மெட்டோரின் மற்றும் அவர் மகன் மிகேயில் ஆகியோர் வடிவமைத்தனர்.

1737இல் ஏற்பட்ட க்ரெம்லினில் பரவிய தீ விபத்தில் 24 பெரிய ராட்சஸ சட்டங்களில் தொங்கவிடப்பட்டிருந்த இந்த மணி தீப்பிடித்து எரிந்தது.


இதைப் பாதுகாக்க ஊற்றிய குளிர்ந்த நீரினால் இதன் ஒரு பகுதி உடைந்தது. உடைந்த பகுதி மட்டும் 11500 கிலோ எடை கொண்டது.

கீழே கிடந்த மணி 1836இல் பிரெஞ்சு கட்டடக்கலை நிபுணர் அகஸ்டி என்பவரால் பெரிய மேடை மீது நிறுத்திவைக்கப்பட்டது.




இதைப்பற்றிய ஒரு பொய்யான கதையும் பரவுகிறது. அதாவது, ஒருசமயம் இளவரசன் ஐவான் கிரெம்ளின் கோட்டைக்கு வருகை புரிந்தார். வருகையை சிறப்பிக்க இந்த மணியை அடித்துப் பேரொலி எழுப்பச் செய்தார் மதகுரு. சத்தத்தில் பீதியாகி மயங்கி விழுந்துவிட்டான். செய்தி அரசனின் காதுக்கு எட்டியது கடுங்கோபம் கொண்ட அவர் மதகுருவின் தலையை துண்டிக்க செய்தார்.

அத்தோடு கூட இந்த மணியை உடைக்கச் சொன்னார். கொடுங்கோண்மையின் சாட்சியாக உடைந்த மணி உள்ளது என்கின்றனர். (வலுவான ஆதாரம் இல்லை.)



## செய்க்கான் சுரங்கம்

செய்க்கான் சுரங்கம் நிப்பானிலுள்ள ஒரு தொடர்வண்டிச் சுரங்கம். 53.85 கிலோமீற்றர் நீளமுள்ள இச்சுரங்கம் 23.3 கிலோமீற்றர் அளவுக்கு கடலுக்கடியில் உள்ளது. இதுவே உலகின் நீளமான கடலடிச் சுரங்கமாகும். எனினும், கால்வாய் சுரங்கத்தின் கடலுக்கடியிலுள்ள சுரங்கப் பகுதி இதனை விட நீளமாகும். சுகாரு சந்திக்குக் கீழ் செல்லும் இச்சுரங்கம், ஒக்கைடோ, ஒன்சூ தீவுகளை இணைக்கிறது.





# உடைகளின் நிறமும் அதிர்ஷ்டமும்

வீடு கட்டும்போது ஒவ்வொரு அறைக்கும் ஒவ்வொரு வண்ணம் பரிந்துரைக்கப்படும். ஏனெனில், நாம் வசிக்கும் அறை நேர்மறை சக்திகளை ஈர்ப்பதாகவும், நமது மனநிலையை பாதிக்காததாகவும் இருக்கவேண்டும். அதற்கு அறையின் நிறம் மிகவும் முக்கியம். இதே நிலை நாம் அணியும் உடையின் நிறத்திற்கும் பொருந்தும். நாம் அணியும் உடையின் நிறம் நம் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**சிவப்பு**

சிவப்பு நிறம் உங்களை வலிமையாக உணரச்செய்வதுடன், மற்றவர்களின் கவனத்தையும் உங்களுக்கு பெற்றுத்தரும். மேலும், இது உங்கள் காதல் உணர்வை அதிகரிக்கும். காதலர்களைப் பார்க்கச்செல்லும் போது சிவப்பு நிற உடையணிந்து செல்லுங்கள். அதேசமயம் சிவப்பு நிறம் நம்முடைய சாப்பிடும் ஆசையை அதிகம் தூண்டும்.

**வெள்ளை**

வெள்ளை நிற உடையணிவது உங்கள் உடலை எப்பொழுதும் சூடாக வைத்திருக்க உதவும். மேலும், இது தூய்மை, எளிமை மற்றும் அமைதியைக் குறிப்பதாக இருக்கும். நீங்கள் அணிந்திருக்கும் மற்ற நிற உடையை அழகாகக் காட்ட வெள்ளை நிறத்தை அணியுங்கள். இது நீங்கள் அணியும் எந்த நிறத்துடனும் பொருத்தமாக இருக்கும்.

**பச்சை**

பச்சை நிறம் எப்பொழுதும் அமைதி மற்றும் மென்மையின் அடையாளமாகும். அதுமட்டுமின்றி, பசுமையை வெளிப்படுத்தும் நிறமாகும். பச்சை நிற உடையணிவது ஒருவரின் மனஅழுத்தத்தைக் குறைப்பதாக இருக்கும்.

**மஞ்சள்**

உங்களின் நாள் மிகவும் மோசமானதாக இருந்தால் அதனை சரிசெய்ய மஞ்சள் நிற ஆடையணிவது சிறந்த தேர்வாக இருக்கும். மஞ்சள் உத்வேகம் மற்றும் புத்திகூர்மையுடன் தொடர்புடையதாகும். எனவே, ஏதாவது முக்கியமான தேர்விற்கோ அல்லது நேர்முக தேர்விற்கோ செல்லும்போது மஞ்சள் நிற ஆடையணிவது சிறந்தது.

**நீலம்**

நீல நிறம் அமைதி மற்றும் வலிமையின் அடையாளமாக இருக்கிறது. அதிக மனச்சோர்வுடன் இருக்கும்போது நீல நிற உடையணிவது உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். மேலும், நீல நிற உடையணிவது உங்களின் கற்பனைத்திறனை அதிகரிக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

வேலை தொடர்பாக வெளியே செல்லும்போது நீல நிற உடை அணிவது நல்ல பலனை அளிக்கும்.

**இளஞ்சிவப்பு**

இளஞ்சிவப்பு நிறம் பெண்களுக்கு பிடித்த நிறம் என்று நாம் நன்கு அறிவோம். ஆனால், இது காதல் மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிறமாகவும் இருக்கிறது.

சுறுசுறுப்பாக இருக்க விரும்பும்போது இந்த நிற உடையை அணிய வேண்டாம். ஏனெனில், இது அமைதியை ஏற்படுத்தும் நிறமாக இருக்கிறது. காதலர்களுடன் வெளியே செல்லும்போது இந்த நிற உடையை அணியுங்கள்.

**செம்மஞ்சள்**

சிவப்பு நிறத்தை போலவே செம்மஞ்சள் நிறமும் ஆற்றல் மற்றும் கவன ஈர்ப்பின் அடையாளமாக இருக்கிறது. ஆனால், தீவிர சிவப்பு போல் அல்லாமல் செம்மஞ்சள் நிறம் மேலும் இனிமையான விளைவுகளை ஏற்படுத்தும்.

பொதுவாக அனைவருக்கும் ஏற்றதாக இருக்காது. ஒருவேளை உங்களுக்கு செம்மஞ்சள் பொருத்தமான நிறமாக இருந்தால் அதை அடிக்கடி அணியுங்கள். உங்களுக்கு நேர்மறை ஆற்றலை இது அதிகம் வழங்கும்.

**கறுப்பு**

பொதுவாக கறுப்பு என்பது அமங்கலமான நிறமாகக் கருதப்படுகிறது. அதேசமயம் பலருக்கும் பிடித்த நிறமாகவும் கறுப்புத்தான் இருக்கிறது. ஆனால், உண்மையில் கறுப்பு ஆற்றலின் நிறமாகும்.

நீங்கள் பதவி உயர்வுக்கோ அல்லது நேர்முகத் தேர்வுக்கோ செல்வதாக இருந்தால் கறுப்பு நிற உடையை தாராளமாக அணிந்து செல்லலாம். ஏனெனில், கறுப்பு நிறம் பொறுப்பு, அதிகாரம், தேடல் போன்றவற்றின் அடையாளமாக இருக்கிறது. மேலும், கறுப்பு நிற உடை உங்களுக்கு கவர்ச்சியான தோற்றத்தை கொடுக்கும். மேலும், இது கம்பீரத்தின் அடையாளமாகவும் இருக்கும்.

# சேனைக்கிழங்கு பொரியல்



கிழங்குகளில் நார்ச்சத்து அதிகமிருக்கும். அதில் பெரும்பாலானோருக்கு உருளைக்கிழங்கு தான் பிடிக்கும். அதேபோல் சேனைக்கிழங்கின் சுவைக்கும் பிரியர்கள் உள்ளனர். அதிலும் சேனைக்கிழங்கை பொரியல் செய்து சாப்பிட்டால், அதன் சுவையே அலாதியானது.

**தேவையான பொருட்கள்:**

சேனைக்கிழங்கு – 1 1/2 கப் (தோல் நீக்கி பொடியாக நறுக்கியது)
மசாலா தூள் – 1 1/2 தேக்கரண்டி
சோம்பு பொடி – 1/2 தேக்கரண்டி
மஞ்சள் தூள் – 1/4 தேக்கரண்டி
புளி – 1 சிறு நெல்லிக்காய் அளவு
உப்பு – தேவையான அளவு

**தாளிப்பதற்கு**

கடுகு – 3/4 தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு – 2 தேக்கரண்டி
கறிவேப்பிலை – சிறிது
எண்ணெய் – 2 மேசைக்கரண்டி

**செய்முறை:**

முதலில் புளியை சுடுநீரில் 30 நிமிடங்கள் ஊற வைத்து, சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி, அதில் உப்பு, மஞ்சள் தூள், புளி சேர்த்து, அத்துடன் சேனைக்கிழங்கை சேர்த்து அடுப்பில் வைத்து, சேனைக்கிழங்கு நன்கு வெந்ததும் அதனை இறக்கி, நீரை முற்றிலும் வடித்து தனியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை சேர்த்துத் தாளிக்க வேண்டும். பின் அதில் வேக வைத்துள்ள சேனைக்கிழங்கு, மசாலா தூள், சோம்பு பொடி மற்றும் சிறிது நீர் தெளித்து, நன்கு 2 நிமிடங்கள் கிளறிவிட வேண்டும். எப்போது பச்சை வாசனையானது போகிறதோ, அப்போது அதனை இறக்கினால், சேனைக்கிழங்கு பொரியல் ரெடி!

# காரிகை களம்



# பச்சையாக கேரட் உண்ணலாமா..?

கேரட்டை சமைத்து உண்பதை விட, பச்சையாக சாப்பிடும் போது அதில் பெரும்பான்மையான சத்துகள் முழுமையாக நம்மை வந்து சேரும்.

கேரட்டில் 'கரோட்டின்' என்கின்ற உயரிய சத்துள்ளது. இது நமது உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. மேலும், செரிமானத்தை தூண்டி நல்ல ஜீரண சக்தியையும் தருகின்றது.

கேரட்டில் புற்றுநோயை வரவிடாமல் செய்கின்ற நோய்த் தடுப்பு ஆற்றல் உள்ளது. தினமும் கேரட்டைத் தவறாமல் சாப்பிட்டு வரவேண்டும். இதனால் அதிலுள்ள விட்டமின் 'சி' யானது, எலும்புகளை வலுவாக்கும்.

கேரட்டை உணவுடன் அடிக்கடி சாப்பிடுவதன் மூலம் கண்கள் ஆரோக்கியமடையும். மாலைக்கண் நோயைத் தடுக்கும். நோய் தாக்கியிருந்தால் குணமாக்கும். கண்பார்வை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கேரட்டை உணவுடன் கொடுப்பதன் மூலம் தீர்வு கிடைக்கும்.

பற்களில் கறையுள்ளவர்கள் அடிக்கடி பச்சையாக கேரட்டை மென்று சாப்பிட்டால், பற்களின் கறைகள் போய்விடும்.

# முடி உதிர்தலை தடுக்கும் உணவுகள்

முடி உதிர்தல் எவரையும் நம்பிக்கையற்ற தன்மைக்கு மாற்றி விடக்கூடும். ஆனால், உணவை மாற்றியமைப்பதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். இழந்த ஊட்டச்சத்துகளை நிரப்புவதற்கும், முடி வளர்ச்சியை புதுப்பிப்பதற்கும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை உண்பதன் மூலம் தீர்வு காண முடியும். முடி உதிர்வதை எளிதில் நிறுத்தி, இயற்கையாகவே முடி நிலையை மேம்படுத்தக்கூடிய சில உணவுகள் பற்றி தெரிந்துகொள்வோம்.



**நட்ஸ்கள் மற்றும் விதைகள்**

உங்கள் உணவில் நட்ஸ் மற்றும் விதைகளைச் சேர்ப்பது உங்கள் முடியின் நிலையை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தும். நட்ஸ்கள் மற்றும் விதைகளின் ஊட்டச்சத்து முடி உதிர்தலைத் தடுக்க உதவுகிறது. நட்ஸ்கள் மற்றும் விட்டமின் 'ஈ' ஆகியவற்றில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் இருப்பது முடி வளர்ச்சியை அதிகரிக்க உதவுகிறது. பாதாம், அக்ரூட் பருப்புகள், பிரேசில் நட்ஸ்கள் மற்றும் சியா மற்றும் ஆளிவிதைகள் போன்றவற்றில் துத்தநாகம், செலினியம் ஆகியவை நிறைந்துள்ளன. இவை முடி வளர்ச்சியை அதிகரிக்க உதவுகின்றன.

**தயிர்**

ஒரு கிண்ணம் தயிரானது, வயிற்றுப் பிரச்சினைகளிலிருந்து உங்கள் தலைமுடியின் அமைப்பை மேம்படுத்துவது மற்றும் உங்கள் சருமத்திற்கு குறைபாடற்ற ஒளியைக் கொடுக்கும் வரை அனைத்தையும் சரி செய்ய முடியும். இதிலுள்ள பால் புரதம், ஆரோக்கியமான கொழுப்பு மற்றும் புரோபயாடிக் கூறுகளால் நன்மைகள் நிறைந்திருக்கும். தயிர் ஒரு கிண்ணம் உங்கள் குடலை ஆரோக்கியமாக்கும். புரதத்தின் இருப்பு முடியின் வளர்ச்சியை அதிகரிக்க உதவுகிறது. மேலும், தயிரிலிருக்கும் ஆரோக்கியமான பற்றீரியா, செரிமானம் மற்றும் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. இது உடலுள்ள ஊட்டச்சத்துகளை சிறப்பாக உறிஞ்சுவதை உறுதிசெய்கிறது. இது முடி வளர்ச்சிக்கு அவசியம்.

**பழங்கள் மற்றும் பெரி**

பழங்கள் மற்றும் பெரிகளில் ஆக்ஸிஜனேற்றிகள், விட்டமின் 'சி' மற்றும் தாதுக்களின் நன்மை ஏற்றப்படுகிறது. பழங்கள் இயற்கையாகவே முடி வளர்ச்சியை அதிகரிக்கும் மற்றும் மயிர்க்கால்களை வலுப்படுத்தும். பழங்கள் மற்றும் பெரிகளில் உள்ள விட்டமின் 'சி' இருப்பு உறிஞ்சி கொலாஜனை உற்பத்திசெய்ய உடலுக்கு உதவுகிறது. இது தலைமுடியை உருவாக்கி முடி உதிர்தலைத் தடுக்கும் ஒரு அத்தியாவசிய புரதமாகும். மேலும், பெரி மற்றும் பழங்களில் ஆக்ஸிஜனேற்றிகள் இருப்பது ஃப்ரீ ரேடிக்கல்களால் ஏற்படும் சேதத்திலிருந்து மயிர்க்கால்களைப் பாதுகாக்க உதவுகிறது.

# தையல் டிப்ஸ்

தையல் இயந்திரத்துக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை கண்டிப்பாக எண்ணெய் விட வேண்டும். எண்ணெய் விட்டவுடன் சிறிது நேரம் கழித்து ஒரு பழைய துணியை தைத்து விட்டு பிறகு புதிய துணியை தைக்கவேண்டும்.

புதிதாக தையல் பழகுபவர்கள் முதலில் பேப்பரை வைத்து தைத்து பழகவேண்டும். பிறகு கைக்குட்டைகளின் ஓரம் அடித்து பழகவேண்டும்.

பொத்தான், கொக்கி, கிழிந்ததை இணைத்து தைத்தல், புடவைகளுக்கு ஓரம் அடித்தல், ரெடிமேடில் வாங்கிய சுடிதார்களுக்கு அதன் மேல் இன்னொரு தையல் போடுவது போன்ற சிறு சிறு தையல் வேலைகளைக் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம்.

ஒரு சிறிய குஷனில் கொஞ்சம் ஊசிகளையும், குண்டூசிகளையும் குத்தி வைத்துக்கொண்டால் தைக்கும் போது எளிதாக எடுத்துக்கொள்ளலாம்.

பிளவுஸ் தைக்கத் தெரிந்தவர்கள் பிளவுஸ் வெட்டியவுடன் எல்லாவற்றையும் எடுத்து மடித்து ஒரு இறப்பர் பேண்ட் போட்டு வைக்கவும்.

பிளவுஸ் நிறத்துக்குத் தக்கபடி வாங்கிய பல வண்ண நூல்களை ஒரு டப்பாவில் போட்டு வைக்கவும். அல்லது ஒரு 'த்ரெட் ஸ்டாண்ட்' வாங்கி இந்த முறையில் வைத்துக் கொள்ளலாம். பிளவுஸ் தைப்பதற்கு முன்பு எடுக்க வசதியாக இருக்கும்.

அத்துடன் ஆறு பொபின்கள் வரை வாங்கி வைத்துக்கொள்ளவும். கொக்கி, வளையம் இரண்டையும் தனித்தனியாக ஒரு சிறிய டப்பாவில் போட்டு வைக்கவும்.



# தூறல்கள்

## பாசமொன்றே அர்ப்பணம்



அன்னையின் பாசம்
அதுக்கில்லையடி வேசம்
காரிருள் அவளது கேசம்
கண்டு ஆவேனே சந்தோசம்

அகராதியோ அவளது பாசை
அதைக் கேட்கவே பேராசை
புணரும் கண்களின் பேச்சை
உணர்ந்து ஆவேனே மூர்ச்சை

என் தாயே..!
உலகிலே நிறையுது தாசு
உனதன்பில் இல்லையே மாசு
நிகரில்லையே உனக்கு காசு
நினைவாய் நிதம் என்னுள் வீசு

**சஹீகா சாஜஹான்**
**மருதமுனை**

## அம்மா

முதல் சேவல் கூவுவதற்கு
முன்னமே கண் விழிப்பவள்

விடிவெள்ளி கீழ் வான்
விட்டு மறையும் முன்னே
அடுப்பங்கரையை சுத்தம் செய்து

மொட்டுகள் அவிழ்ந்து
மலராகும் முன்னே
முன்னிரவு முடியாமல்
போன பாத்திரங்களை கழுவி

மீதமிருக்கும் கொஞ்ச
நிலவொளியில் குளித்து
கூந்தலை அள்ளி முடிந்துகொண்டு

ஆதவனை வரவேற்க
அழகாய் கோலமிட்டு

நாள் தவறாமல் தினமும்
ஆலயம் செல்லும் அவளுக்கு

எந்தக் கடவுள்
உணர்த்துவானோ தெரியவில்லை

உயிர் கொடுத்த அன்னையை
முதியோர் இல்லத்திற்கு
அனுப்பிவிட்டு தன்னை
வணங்க வருவதில்
எந்தப் பயனுமில்லையென

**குலேந்திரன்**
**மயிலந்தனை**



## கொரோனாக் காலத்தில்



கொரோனாவை ஒழிப்பதற்கு
மாஸ்க் போடச்சொன்னால்
நாடியிலே அதைப்போட்டு
நல்லவர்கள்போல் நடிக்கிறார்கள்

பி.எச்.ஐ.மாரைக் கண்டால்
பாசாங்கு செய்கிறார்கள்
ஆமியைக் கண்டுவிட்டால்
பதறியடித்து ஓடுகிறார்கள்

மனைவியை ஏற்றிக்கொண்டு
வீதி வீதியாய் சுற்றுகிறார்கள்
கொரோனாவை மறந்து
கும்மாளம் அடிக்கிறார்கள்

கண்டபடி சுற்றித்திரிந்து
கடுப்பேத்துகின்றனர் ஆமிக்கு
பிரம்படி பட்டுங்கூட
ரோஷம் இன்னும் வரவில்லை

பி.சி.ஆர். எடுக்கவந்தால்
பின்கதவால் ஓடுகிறார்கள்

தடிமன் காய்ச்சலென்றால்
தயங்கி நிற்கிறார்கள்

பள்ளியும் மூடியாச்சு
படிப்பும் இல்லாமலாச்சு
பஞ்சமும் கூடிப்போச்சு
பசியும் நிரந்தமாச்சு

கொடிய விஷமாகி
கொன்று குவிக்கும்
கொரோனாவை ஒழிப்பதற்கு
கொஞ்சமும் அக்கறையில்லை

**கலாபூஷணம்**
**பி.எம்.எம்.ஏ.காதர்**

## ஆழமாக காதலித்தேன்

கல்லறையில் மூச்சடங்கி
நான் கிடந்தாலும் அதன் மேலே
பூண்டாய் முளைத்து பூக்களாய்
எப்போதும் சிரித்திருப்பேன்
உண்மையாய் உன்னைக் காதலித்த
பாவத்திற்காக

ஆறுதல் தேடி ஆலமர விழுதென
உனை எண்ணி வந்தேன்
நீயோ எனை அறுபட்ட
ஒற்றைச் செருப்பாய் அனாதையாய்
தவிக்கவும் விட்டாயே
என் மீது நீ கொண்ட காதலும் எங்கே
என் நெஞ்சிலே நீ சாய்ந்த
நினைவுகளும் எங்கே

வலியினால் துடித்து
ஓவென அலறுகிறேன்
வார்த்தைகள் வலுவிழந்து
மண்டியிட்டுக் கிடக்கிறேன்
வண்ணமுகில் கூட்டத்தில் வருவாயா
இல்லை மேனி தழுவும்
தென்றலின் மீதேறி வருவாயா

அன்னை கொடுத்த ஆழமறியா
காதலினை பெண்ணே நான்
உன்னிடத்தில் கண்டேன்
பெண்மையின் பேறுகால
வேதனையின் வலியினையும்
உன்னாலே நானும் கொண்டேன்

மடலில் சுரந்து வழிந்த
கண்ணீரை நானும்
துடைக்க முயன்றேன்
முடியவில்லை என்னால்
முப்பொழுதும் கண்ணீர் ஆறாக
பாய்கிறதே
ஆழமாக உன்னைக் காதலித்தேன்
என்ற ஒன்றிற்காக

**வன்னித்தமிழ் மறவன்**
**இந்திராபுரம், பளை**

## ஊரை நம்ப வைத்தவர்கள்



சமூகத்தின் அலங்கோலம்
சமநிலையில் சீர்குலைந்து
பொருளாதாரம் பொருட்படுத்தப்பட்டது
முதலாளித்துவத்தின் பதுக்கலில்

அந்தஸ்தின் அதிகாரம்
உயர்நிலையை அடையச் செய்து
வீதியோர தேநீர்க் கடையில்
கசக்கி எறியும் காகிதத்தில்
அரசியல் விளையாடி
நேரம் வீணடிக்கும் வினாடிகளில்
விளம்பரத்தின் ஈர்ப்புகள்

கழுவிக் கொண்டிருக்கும் கருத்துகளில்
புத்தாக்க சிந்தனை உருவாகாது
புதுப்புது பிரச்சினை தோன்றி
வரையறைக்குள் வட்டமிட்டவர்களின்
வாழ்நாளில் எந்தவொரு
மாற்றமும் ஏற்படவில்லை

இரு கட்சிகளில் உள்ளவர்களில்
ஒருவரைத் தெரிவுசெய்வதிலும்
பரம்பரையின் வாரிசுகளையும்
அனுதாபத்தை அனுசரித்தும்
வாழையடியாக தொடரும் வாலிபர்களும்
முதுகெலும்பு என்று கூறும் முதியோர்கள்
சமூக வலைத்தளத்திலும் பப்ஜியிலும்
எலும்புகளை
தேய்த்துக் கொண்டிருக்கிறார்கள்

சதி செய்யப்பட்டு கொண்டிருக்கும்
பள்ளிப் பருவங்களின் வழிகாட்டி
பல தரத்தில் சித்தியடைந்த மாணவன்
மானிடத்தின் மாணிக்கக் கல்லாக
மற்றவர்கள் அவர்கள் பிள்ளைகளை
கூழங்கல்லாக மாற்றிவிட்டு
எதிர்மறைக் கருத்துகளைக் கூறி
ஒப்பீடு செய்கிறார்கள்

யாரோ ஒருவன் போன பாதையை
எல்லோருக்கும் சரியானதாக
அமையும் என்று சொல்லி
அவனைப் பின்பற்ற சொல்வதில்
வளர்ந்து வரும் மாணவர்களின்
மதி மழுங்கடிக்கப்பட்டு
கொண்டிருக்கிறது

ஜெயித்தவன் என்பதற்கான
அடையாளத்தில்
இவர்களின் உள்ளங்கள்
அவனின் சிந்தனையில்
தீக்கரையாகின்றன
செய்யக்கூடாத செயல்கள் இடம்பெற்று
ஒவ்வொரு ஆன்மாவின்
தனித்துவத்தையும் தடுத்து நிறுத்தி
தகைமை வளரவில்லை

சமூகத்தின் உயர்நிலையை
அடையச் செய்து
நம்ப வைக்க
பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்
ஊரின் மகான்கள்

**-மபாஸ்-**

## அன்னையும் பிதாவும்

வாழ்க்கைப் பதிவேட்டில்
என்றைக்குமே அழிக்க முடியாத
முதல் அத்தியாயம்
அன்னையும் பிதாவும்

இரு துருவங்களின்
இன்ப ஒன்றுகூடலில்
கருவாகி உருவாகி
ஈரைந்து மாத
இருட்சிறைக்குள்



அடைபட்டு
அம்மா என்ற அலறலுடன்
சிசுவாகி
உலகைத் தரிசித்தபோது
பிரசவ வேதனையில்
அரை சவமாய்
அல்லாடிய போதும்
அன்னை பெறும் ஆனந்தம்
ஆஹா..!
இன்னதென்று எழுத முடியா
மகிழ்ச்சியின் சங்கமம்

உடலை வாட்டி
உதிரத்தைப் பாலாக்கி
மெய் சோராது
மேதினியில்
வளர்த்தெடுக்க
உதவும்
அன்னையும் ஓடி
யோடி
உழைத்துக் களைத்து
நாடி நரம்பாடி
ஆட்டம் குளோஸ் ஆகி
அல்லாடும்
தந்தை ஆகிய
இருவரும்
முதுமைக்குள்
முடங்கியபோது
முதியோர்
இல்லத்திலும்
குப்பைத்தொட்டிக்குள்ளும்,
அநாமதேய தெருச்
சந்து பொந்துகளுக்குள்ளும்
முகவரி இல்லாத அஞ்சல்களாக
முடங்க விட்டிருக்கும்
ஓ... முட்டாள் சமூகமே!

எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு
எனும் மேலான தத்துவத்தை
சேற்றுள் புதைத்தது ஏன்?
முன்னறி தெய்வங்கள்
முச்சந்திகளில் பெருமூச்சு விட
விண்ணுயர் மாளிகைக்குள்
ஏசி கெமராவுக்குள்
பஞ்சணை மெத்தைகளில்
பச்சைக்கிளிகளுடன்
உல்லாச சல்லாபம் புரியலாம்
என்ற உந்துதலா? இல்லை
சொர்க்கம் வேறெங்குமே இல்லை
அவர்கள் பாதத்தின் கீழ்தான்
தேடிப்பார் அப்போது புரியவரும்
அன்னையும் பிதாவும் இறைவன்
கொடுத்த வரம் என்று..!

**என்.எம்.அலிக்கான்**
**சாய்ந்தமருது**

## வெறும் வீம்பு



நெருப்பென்றறிந்தும் அது
சுடுமென்று தெரிந்தும்
முட்டி மோதி மல்லுக்கு நிற்கிறது
பாவம் அந்த விட்டில் பூச்சி

காற்றோடு கலந்து
கையசைத்து பிறர்வாழ
ஒளி ஈந்து நிற்கும்
நெருப்புடனே மல்லுக்கு நிற்கும்
விட்டில் பூச்சிதனை
வா பார்ப்போம் முடியுமென்றால்
வந்தென்னை மோதிவிடு
வீராப்பு கூறியது அந்நெருப்பு

பலப்பரீட்சை தொடங்கிற்று
மறுபடியும் மறுபடியும்
மோதுவதும் திரும்புவதும்
தேவையில்லாப் போட்டி ஒன்று
வீணே நடக்கிறது

சிலநேர மோதலின் பின்
விட்டில் பூச்சியதன்
இன்னுயிரும் பிரிகிறது
ஆணவத்தில் ஆழ்ந்திருந்த
நெருப்பும் அணைகிறது

யாருக்கு என்ன பயன்?
அமாவாசை இருள் வந்து
கௌவிக் கொள்கிறது
அப்பகுதி முழுவதையும்

**ஏ.ஆர்.அப்துல் சத்தார்**
**மருதமுனை**





# நரகத்தின் நுழைவாயில்

டானாகில் டிப்ரஷன் என்ற இடத்தில் அதிக அளவு பொட்டாசியம் உப்பு மற்றும் கந்தகம் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் காரணமாக, அதனைச் சுற்றியுள்ள நிலமானது சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் மற்றும் வெள்ளை ஆகிய நிறங்களாக மாறியுள்ளது. அத்தோடு மட்டுமல்ல, இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், டானாகில் டிப்ரஷன் கடல் மட்டத்திலிருந்து 125 மீற்றர் கீழே அமைந்துள்ளது என்பதுதான்.

**பூமியின் உள்ளேயிருந்து சூடான எரிமலை வெடிக்கிறது**

இந்த இடத்தில் மூன்று டெக்டோனிக் ப்ளேட்டுகள் உள்ளன. டெக்டோனிக் இயக்கம் காரணமாக, இத்தட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் 1 அல்லது 2 சென்டி மீற்றர் தொலைவில் நகர்கின்றன. தட்டுகள் விலகுவதால் இங்கு விரிசல் வருகிறது. இதன் காரணமாக, பூமியின் உள்ளேயிருந்து சூடான எரிமலை வெடிக்கிறது. சிறிது நேரம் கழித்து ஆழமான பள்ளம் தோன்றி, அதில் கடல் நீர் முழுமையாக நிரம்பி விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எரிமலை வெடிக்கும் நேரத்தில், வெப்பநிலை 125 டிகிரி C யை அடைகிறது.

இங்கு ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்த எச்சங்களைக் கண்டுபிடித்துள்ளனர். டானாகில் டிப்ரஷன் பகுதியில் பொதுவாக வெப்பநிலை 45 டிகிரி C என்ற அளவில் இருக்கும். ஆனால், பல சமயங்களில் 55 டிகிரி C யை எட்டும். அதே நேரத்தில், எரிமலை வெடிக்கும் நேரத்தில், இங்குள்ள வெப்பநிலை 125 C யை அடைகிறது.

**எப்போதும் வெப்பமான சூழ்நிலை**

இங்கு எப்போதும் காணப்படும் வெப்பமான சூழ்நிலையானது, விஞ்ஞானிகளுக்கு மற்ற கிரகங்கள் மற்றும் சந்திரனில், வாழ்க்கையின் தோற்றம் எவ்வாறு சாத்தியமாகும் என்பதை ஆராய்ந்து அறிய உதவும். எத்தியோப்பியாவில் அஃபர் முக்கோணத்தின் வடக்கு பகுதியில் டானாகில் டிப்ரஷன் அமைந்துள்ளது.

**நரகத்தின் நுழைவாயில்**

இக்காரணத்திற்காக, இந்த இடம் கேட்வே ஆஃப் ஹெல், அதாவது 'நரகத்தின் நுழைவாயில்' என்றும் அழைக்கப்படுகிறது





# ஒரு பிளேட் பிரியாணி 4 இலட்சம் ரூபா!

சாதாரண பிரியாணி என்றாலே நாம் சிலிர்த்துப்போய் விடுகிறோம். காரணம் அந்த உணவிற்கு மட்டும் அப்படியொரு தனி ருசி. இந்நிலையில் துபாயிலுள்ள ஒரு உணவகத்தில் பிரியாணியோடு சேர்த்து 23 கரட் தங்கத்தையும் உண்ணக் கொடுக்கிறார்கள். இப்படிக் கொடுக்கும் அந்த உணவிற்கு வெறும் 4 இலட்சம் ரூபா மட்டும்தான் விலை என்பதும் குறிப்பிடத்தக்கது.

துபாயில் பாம்பே போரோ எனும் பிரபல உணவகம் செயற்பட்டு வருகிறது. இந்த உணவகத்தின் ஓராண்டு நிறைவையொட்டி 23 கரட் தங்கத்தோடு சேர்த்து பிரியாணி சமைத்து வழங்கப்பட்டு வருகிறது. இதில் உண்ணக்கூடிய தங்கத்தைப் பயன்படுத்தியிருப்பதோடு, அலங்காரத்திற்கும் தங்கத்தைக் கொட்டி வைத்திருக்கிறார்கள். இதனால் பார்ப்பதற்கே அந்த பிரியாணி தங்கச் சுருளைப்போல் காட்சியளிக்கிறது.

இந்தியர்களால் நடத்தப்படும் அந்த உணவகத்தில் இந்த பிரியாணியோடு சேர்த்து பாரம்பரிய இந்திய உணவுகளையும் வழங்குகின்றனர். அதிலும் குறிப்பாக காஷ்மீரின் ஆட்டு கபாப், பழைய டெல்லி ஆட்டுக்கறி, ராஜ்புத் சிக்கன் கபாப், மொகாலி கோப்தாஸ் மற்றும் மலாய் சிக்கன் ஆகியவற்றையும் கொடுக்கின்றனர். 4 பேர் சாப்பிடக்கூடிய அளவில் இருக்கும் இந்த பிரியாணியின் விலை ரூ.4 இலட்சம் என்பதுதான் மலைக்க வைக்கிறது. மேலும், உலகிலேயே அதிக விலை கொண்ட பிரியாணி என்ற பெருமையையும் இது பெற்றுள்ளது.

# அதிக உயரத்தால் விடுவிக்கப்பட்ட கைதி

தலைவர்களின் பிறந்தநாளுக்கு நல்லெண்ண அடிப்படையில் கைதிகளை நம் நாட்டில் விடுதலை செய்யும் வழக்கம் உள்ளது. ஆனால், இங்கிலாந்தில் ஒரு கைதியை வைத்துச் சமாளிக்க முடியாமல் விடுதலை செய்திருக்கிறார்கள். சமாளிக்க முடியாத அளவுக்கு அந்தக் கைதி என்ன செய்தார் என்று கேட்கிறீர்களா? அவர் ஒன்றும் செய்யவில்லை. மிதமிஞ்சிய அவரது உயரத்தைத்தான் அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

நியூட்டன் அபோட் நகரைச் சேர்ந்தவர் 23 வயதான ஜூட் மெட்காப். இவர் கொலை மிரட்டல், திருட்டு போன்ற வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், 7அடி 2அங்குல உயரமுடைய அவருக்குரிய படுக்கை வசதி சிறையில் இல்லை. சீருடையும் அளவு போதவில்லை. கிளைன்ஃபெல்ட்டர் (Klinefelter) என்ற ஒருவிதமான வளர்ச்சிக் குறைபாடுதான் அவரின் இந்த அபரிமிதமான உயரத்திற்குக் காரணம் எனக் கண்டறிந்துள்ளனர். இந்த நோய்க்கூறு காரணமாக அவரை நீதிமன்றம் விடுதலை செய்தது.

# ரிப்பன் பிணைப்பு திருமணம்


கலிபோர்னியாவைச் சேர்ந்தவர்கள் பேட்ரிக் டெல்கடோவும், லாரன் ஜிமெனெஸும். திருமணம் செய்து கொள்ளாமலேயே கடந்த நான்கு ஆண்டுகளாக ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வந்தது இந்த ஜோடி. கடந்த 2019 ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்து கொள்வது என முடிவெடுத்து நிச்சயதார்த்தம் செய்துகொண்டனர். 2020ஆம் ஆண்டு தங்களது திருமணத்தை பிரம்மாண்டமாக நடத்தத் திட்டமிட்டனர்.

ஆனால், கொரோனா இவர்களது திட்டத்தை மாற்றியது. எனவே, மூன்று முறை அவர்களது திருமணம் தள்ளிப்போனது. எனவே, நவம்பர் மாத இறுதியில் இருவரும் திருமணம் செய்து கொள்வது என முடிவெடுத்தனர்.



சரியாக திருமணத்திற்கு மூன்று நாட்கள் இருந்தபோது, மணப்பெண் லாரனுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது. அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

இதனால், மீண்டும் திருமணம் தள்ளிப் போகும் சூழல் ஏற்பட்டது. அதனை விரும்பாத மணமக்கள், இம்முறை எப்படியும் திருமணத்தை நடத்தியே தீருவது என உறுதியாக இருந்தனர். அதன்படி, மணமகள் தனது அறை ஜன்னல் அருகே இருக்க, மணமகன் கீழே நின்றுகொண்டு திருமண பந்தத்திற்கான உறுதிமொழியை ஏற்றார். அப்போது இருவரும் நீளமான ஒரு ரிப்பனைக் கொண்டு தங்களது கைகளை இணைத்திருந்தனர். திருமணத்தின்போது இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்திருப்பது போன்ற உணர்வைப் பெற இப்படிச் செய்ததாகக் கூறியுள்ளனர்.




# மோனலிசா ஓவியத்தில் ஏலியன்ஸ் குறித்து இரகசிய குறியீடு



## ஆய்வாளர்களின் அதிர்ச்சித் தகவல்

லியோனார்டோ டா வின்சி வரைந்த புகழ்பெற்ற ஓவியம் மோனலிசா. பெண் ஒருவர் புன்னகைப்பது போன்ற இந்த ஓவியத்தில் மறைந்திருக்கும் இரகசியம் குறித்து பல்வேறு கருத்துகள் நீண்டநாட்களாகப் பரவியுள்ளன. இந்நிலையில், மோனலிசா ஓவியத்தில் வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதற்கான தகவலை டாவின்சி மறைத்துள்ளார் என்றும், அதற்கான சான்று மோனலிசா ஓவியத்தில் இருப்பதை கண்டறியலாம் என்றும், வேற்றுக்கிரகவாசிகள் குறித்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

புகழ்பெற்ற ஓவியத்தில் ஏலியன் துறவி ஒருவர் மறைந்துள்ளார் என வேற்றுக்கிரகவாசிகளுக்கான இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள வீடியோ ஒன்றில், வேற்றுக்கிரகவாசிகளின் மறைவு வாழ்க்கை முறை குறித்து இந்தக் குழுவினர் தெரிவித்துள்ளதுடன், அவர்களின் முக அமைப்புகள், தலையில் அணியும் தொப்பி, மேலங்கி மற்றும் கைகள் ஆகியவை குறித்தும் வெளியிட்டுள்ளனர்.

லியோனார்டோ டாவின்சி தனது பெரும்பாலான படைப்புகளில் இரகசிய குறியீடுகள் மற்றும் உணர்வதற்கு அரிய செய்திகளை ஒரு நோக்கத்துடனேயே மறைத்துள்ளார் என்றும் பெரும்பான்மையான மத வல்லுநர்கள் கூறுகின்றனர். இது உண்மையென்றால், மோனலிசா படம் உண்மையில் முக்கியமான வரலாற்று மற்றும் மத உண்மைகளை மறைக்கும் வகையில் ஓவியமாக்கப்பட்டிருக்கலாம்.

எனினும், அந்த வீடியோ, வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதற்கான சாத்தியங்கள் குறித்த நம்பக்கூடிய விளக்கங்கள் எதனையும் வழங்கவில்லை. அதனுடன் ஓவியத்திற்கு அதிக வண்ணங்களைக் கொடுத்து, அதனைப் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் மெருகேற்ற வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கிறது.

வேற்றுக்கிரக பறக்கும் தட்டுகளைக் குறித்த இணையத்தளம் ஒன்றினை நடத்திவரும் வேற்றுக்கிரகவாசி கருத்தியலாளர் ஸ்காட் சி வேரிங் கூறும்போது, டாவின்சி வேற்று உலக உயிரினங்களின் உறுப்பினர் எனக் கூறுகிறார். அவர் எழுதும்போது, லியோனார்டோ டாவின்சி ஒரு வேற்றுக்கிரகவாசியாக இருப்பதற்கோ, அல்லது அதில் பாதியாக இருப்பதற்கான வாய்ப்போ மிக அதிகமாகக் காணப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.


அதற்கான குறியீடுகளை அவர் வெளிப்படுத்துகிறார். அவர் மிக அதிக அறிவாற்றல் திறன் கொண்டவர். அசாதாரண படைப்பாற்றல் திறன் உடையவர். அவற்றைப் பயன்படுத்தி இந்த விடயங்களை அவர் செய்து முடித்துள்ளார். இதுபோன்ற பல்வேறு துறைகளிலும் இணைந்து பணியாற்றும் திறன் கொண்டவரான லியோனார்டோ போன்று இருப்பது வழக்கத்தில் இல்லாதது. ஜீனியஸ் ஆக இருப்பினும் அனைத்துத் துறைகளிலும் சிறந்து லியோனார்டோ போன்று இருப்பது அரிதானது.

அவரது படைப்புகளில், இரகசிய தகவல்கள் மற்றும் குறியீடுகளை மறைத்து வைப்பவர் என்பது தெரிந்ததே. அதனால், இந்த புதிய கண்டுபிடிப்பு, அவரது அசாதாரண திறமைகள் எங்கிருந்து வந்தன அல்லது அவை வேற்றுக்கிரகவாசிகளிடம் இருப்பது, என்பன போன்ற தெரியாத விடயத்தை அறிவதற்கான முக்கிய கருப்பொருளாக இருக்கிறது என்று அவர் கூறுகிறார். டாவின்சியின் ஓவியங்கள் மறைக்கப்பட்ட குறியீடுகள் மற்றும் தகவல்களை கொண்டிருக்கிறது என்ற ஊக அடிப்படையிலான செய்திகள் உள்ளன. ‘தி டாவின்சி கோடு’ என்ற புத்தகம் மற்றும் படம் இதனடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த 2010 ஆம் ஆண்டில், மோனலிசாவின் ஓவியத்தில் அவரது கண்களில் சிறிய எண்கள் மற்றும் எழுத்துகள் இருப்பது தெரியவந்துள்ளது என்றும், அது குறியீடுகளாகவும் இருக்கக்கூடும் என்றும் வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.




**தடுப்பூசி என்னும் வார்த்தையை உருவாக்கியவர் யார்?**



ஆ.கிரேஸ்லின் - நிட்டம்புவ

எட்வர்ட் அந்தோணி ஜென்னர்.

இவர் பெரியம்மை தடுப்பூசியைக் கண்டுபிடித்தார்.

**குடல் புண் குணமாக என்ன செய்யலாம்?**

தி.தமிழரசி - முல்லைத்தீவு

தினமும் ஒரு டம்ளர் திராட்சைப் பழச்சாறு குடித்துவர குடல் புண் குணமாகும்.

**உலகில் மிக இனிப்பானதும், கசப்பானதும் எது?**

அல்ஹான் - வத்தேகம

அனைவரிடமும் அன்புகொண்டவரது நாவில் இருந்து வரும் வார்த்தைதான் உலகில் மிக இனிப்பானது.

நயவஞ்சகன் ஒருவனது நாவில் இருந்து வரும் வார்த்தைதான் இவ்வுலகிலேயே மிகவும் கசப்பானது.

**தலைக்கணத்தோடு இருப்பவர்களுக்கு குறும்பன் கூறும் ஆலோசனை என்ன?**



ஜெயராஜ் - தெஹிவளை

தலைக்கணம் அதிகமானால் நாமேதான் அதை சுமக்கவேண்டும்.

**தெய்வங்களுக்கு வாழைப்பழம் படைப்பது ஏன்?**

ஸ்ரீ கிருபாநந்த சர்மா - மஸ்கெலியா

எல்லா இந்து தெய்வங்களுக்கும் தவறாமல் வாழைப்பழம் படைப்பதற்கு காரணம் உள்ளது. மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால், வாழைப்பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும் கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியைக் காட்டுகிறது. எனது இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு! என வேண்டவே கடவுளுக்கு வாழைப்பழம் படைக்கப்படுகிறது.

மேலும், வாழைமரத்திலிருந்து தான் வாழைக்கன்று வரும். பழம் கொட்டை என்பது கிடையாது. அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள். இந்து மக்களும் இந்த மரபினைப் பின்பற்றி வருகிறார்கள்.

## மாற்றம் ஒன்றே மாறாதது..!

அம்மியில் அரைத்த சட்னி ருசி அதிகம்
- மிக்ஸி வந்தது
ஆட்டு உரல் மாவு இட்லி ருசி அதிகம்
- கிரைண்டர் வந்தது.
உலையில் வைத்த சாதம் ருசி அதிகம்
- குக்கர் வந்தது
விறகு அடுப்பு சமையல் ருசி அதிகம்
- கேஸ் அடுப்பு வந்தது
வீட்டில் செய்த மசாலா ருசி அதிகம்
- மசாலா பொடி வந்தது
பானையில் ஊற்றி வைத்த நீர் ருசி அதிகம்
- பிரிட்ஜ் வந்தது
மண்ணில் விளையாட்டு மகிழ்ச்சி அதிகம்
- வீடியோ கேம் வந்தது
பாட்டி சொன்ன கதையில் உயிர் இருந்தது
- டி.வி. வந்தது
இயற்கையை நம்பியிருந்தால்
இன்பமாய் வாழ்ந்திருப்போம்
இயந்திரங்களை நம்பியதால்



இயந்திரமாகவே வாழ்கிறோம்.

முடிந்தவரை இயற்கையை சார்ந்து வாழ்வோம்.

மொத்தத்தில் இயற்கை போய் செயற்கை வந்தது.

1.சர்க்கரை நோய் வந்தது
2.இரத்தக்கொதிப்பு வந்தது
3. புற்றுநோய் வந்தது
4. மாரடைப்பு வந்தது
5. ஆஸ்த்துமா வந்தது
6. கொழுப்பு வந்தது
7. அல்சர் வந்தது

இவ்வுளவு வந்தும் நமக்கு புத்தி வந்ததா?

**உங்களுடைய கேள்விகளை குறும்பனிடம் கேளுங்கள்**
**whatsapp - 076 2728213**
**e-mail- kurumpan@yahoo.com**




# அடப் பாவிங்களா!

வங்கியில சரியான கூட்டம். லைன்ல நின்ன ஒருத்தன் எப்படியாவது முன்னாடி போயிரலாம்னு நைஸா முன்னாடி நகர்ந்தான்.

இதை பாத்த பின்னாடி நின்னவங்க, அவன பிடிச்சுட்டு வந்து பின்னாடி நிற்க வைக்கிறாங்க.

கொஞ்சநேரம் அமைதியா நின்னவன் மறுபடியும் நைஸா முன்னோக்கி போறான்.

இப்பவும் மக்கள் பிடிச்சிட்டு வந்து பின்னாடி நிற்க வைக்கிறாங்க. இப்படியே இவன் நாலஞ்சு முறை முன்னாடி போக மக்கள் பிடிச்சிட்டு பின்னாடி நிற்க வைக்கவும் நேரம் நகருது.

இதுல வெறுத்துப்போன அவன் கடைசில வந்து நின்னுகிட்டு கத்துறான்.

எல்லாரும் இன்றைக்கு முழுக்க லைன்ல நின்னே சாவுங்கடா. நான் வங்கிய திறக்கவே மாட்டேன்டா!



# படிப்பது எதற்காக?



நண்பர் ஒருவர் ஆபிரகாம் லிங்கனிடம், "படிப்பதால் பணம் கொட்டப்போவதில்லை. பின் ஏன் நீங்கள் எப்போதும் எதையாவது படித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு லிங்கன், "நான் பணம் சேர்ப்பதற்காக படிக்கவில்லை. பணம் வரும்போது எப்படி பண்போடு வாழவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவே படித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

# தமிழ்த்தேன்

தமிழுக்கு இனிமை என்றொரு பெயர் உண்டு. காரணம் ஏன் தெரியுமா?

தேன் கொண்டு வந்தவனை பார்த்து நேற்று ''ஏன் தேன் கொண்டுவரவில்லை'' என்று ஒருவர் கேட்கிறார். அதற்கு அவன் கூறிய இனிமை பொருந்திய பதில்..

ஐயா நீங்கள் கூறியதை நினைத் தேன் !
கொல்லிமலைக்கு நடந் தேன்!
பல இடங்களில் அலைந் தேன்!
ஓரிடத்தில் பார்த் தேன் !
உயரத்தில் பாறைத் தேன்!
எப்படி எடுப்பதென்று மலைத் தேன்!
கொம்பொன்று ஒடித் தேன்!
ஒரு கொடியை பிடித் தேன் !
ஏறிச்சென்று கலைத் தேன்!
பாத்திரத்தில் பிழிந் தேன்!
வீட்டுக்கு வந் தேன்!
கொண்டு வந்ததை வடித் தேன்!
கண்டு நான் மகிழ்ந் தேன்!
ஆசையால் சிறிது குடித் தேன் !
மீண்டும் சுவைத் தேன் !
உள்ளம் களித் தேன்!
உடல் களைத் தேன் !
உடனே படுத் தேன்!
கண் அயர்ந் தேன்!
அதனால் மறந் தேன் !!
காலையில் கண்விழித் தேன்!
அப்படியே எழுந் தேன் !
உங்களை நினைத் தேன்! தேனை எடுத் தேன்!
அங்கிருந்து விரைந் தேன் !
வேகமாக நடந் தேன்!
இவ்விடம் சேர்ந் தேன் !
தங்கள் வீட்டை அடைந் தேன் !
உங்களிடம் கொடுத் தேன் !
என் பணியை முடித் தேன்.!! என்றார்.

அதற்கு தேன் பெற்றவர், தேனினும் இனிமையாக உள்ளது உமது பதில். இதனால்தான் நம் முன்னோர்கள் தமிழை ''தமிழ்த் தேன்'' என்று உரைத்தனரோ என கூறி மகிழ்ந் தேன் – என்றார்.

# பேசும் தாவரங்கள்



## தென்கச்சி கோ. சுவாமிநாதன் சொன்ன கதை

ஓர் ஆபத்துலேயிருந்து தப்பிக்கணும்னா நாம என்ன செய்யுறோம்? உடனே ஓடிப்போறோம் அந்த இடத்துலேயிருந்து. மிருகங்களும் தப்பிக்க அப்படித்தான் செய்கின்றன. நமக்கு எல்லாம் கால் இருக்கு. அதனாலே சௌகரியமாப் போச்சு.

ஆனா, மரம், செடி, கொடிகள் இருக்கே. அதுக்கெல்லாம் ஓர் ஆபத்து வந்தா. உடனே அந்த இடத்துலேயிருந்து தப்பிச்சி ஓடிப்போயிட முடியுமா?

"இந்த இடத்திலே பெரிய மரம் இருந்துதே. எங்கே சார்?" ன்னு கேட்டா,

"நீங்க இன்றைக்கு அந்த மரத்தை வெட்ட வருவீங்கன்னு தெரியும். அதனாலே அது புறப்பட்டுப் புதுக்கோட்டை பக்கம் போயிட்டுது" என்றா சொல்லுவோம்? அது எப்படி முடியும்?

ஆனா, தாவரங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தா அதிலேயிருந்து தப்பிக்கறதுக்கு சில வேலைகளைச் செய்யறதாகக் கண்டுபிடிச்சிருக்காங்க.

தென்னாபிரிக்காவுலே பிரிட்டோரியான்னு ஓர் இடம். அங்கே வான்ஹோவர்..ன்னு ஒருத்தர். உயிரியல் ஆராய்ச்சியாளர். அவர் ஆராய்ச்சியெல்லாம் பண்ணி பார்த்துட்டு தாவரங்கள் ஒண்ணுக்கொண்ணு பேசிக்குது என்கிறார். பேசுது..ன்னு சொன்னவுடனே நீங்க,

"எந்த பாஷையிலே பேசிக்குது? இங்கிலீஷா? தமிழா?"ன்னு கேட்கக்கூடாது!

மொழி இல்லாமலேயே அதெல்லாம் செய்திகளைப் பரிமாறிக்குது.

இது ரொம்ப ஆச்சரியமான ஒரு விஷயம்தான்.

ஒரு சமயம் தென்னாபிரிக்காவுலே கடுமையான வறட்சி ஏற்பட்டுதாம். அது ரொம்ப தீவிரமாப் போயிட்டுதாம்.

மேயறதுக்குப் புல் கூட கிடைக்காத நிலைமை. அங்கேயிருந்த காட்டு மான்கள் எல்லாம் வேறே வழி இல்லாமே அக்கேஷிய இனத் தாவரத்தை தின்னவேண்டிய நிலைமை. அப்படி அதை சாப்பிட்ட மான்கள்லாம் கூட்டம் கூட்டமாக சாக ஆரம்பிச்சது.

"ஏன் இப்படி இதெல்லாம் செத்துப் போவுது?" என்று வான்ஹோவர் ஆராய்ச்சிப் பண்ணினார். அக்கேஷியத் தாவரத்துலே டானின்ங்கற நச்சுப் பொருள் உண்டு.

இருந்தாலும் கூட, விலங்குகளைக் கொல்லக்கூடிய அளவுக்கு சக்தி அதுக்குக் கிடையாது.

ஆனா, குறிப்பிட்ட அந்த சமயத்துலே இந்த விஷப்பொருள் அந்தத் தாவரங்கள்லே திடீர்ன்னு அதிகமா ஆயிட்டுதாம். அதனாலேதான் மான்கள் செத்துட்டுதுன்னு கண்டுபிடிச்சுட்டாங்க.

சரி, அந்தத் தாவரத்துலே திடீர்ன்னு விஷப்பொருள் அதிகமாப் போறதுக்குக் காரணம் என்ன? இதுதான் வான்ஹோவருக்கு. ஏற்பட்ட சந்தேகம்.

ஆராய்ச்சி பண்ணி அந்த சந்தேகத்துக்கு விடையைக் கண்டுபிடிச்சார். அது என்ன விஷயம்ன்னா. ஏதாவது ஒரு மிருகம் ஒரு அக்கேஷியத் தாவரத்தின் ஒரு பகுதியைக் கடிக்க ஆரம்பிக்குதுன்னு வச்சிக்குங்க. உடனே அந்தத் தாவரம், தாக்குதலை முறியடிக்க 'எத்திலீன்ங்கற வாயுப் பொருளை உற்பத்தி பண்ணுது.

இந்த வாயு உடனடியா சுற்றிலும் பரவுது. இருபது நிமிஷ நேரத்துக்குள்ளே 50 மீட்டர் சுற்றளவுக்கு அது பரவுதாம். உடனே மற்ற செடிகள்லாம்.

"எதிரி வருகிறான்! எச்சரிக்கையா இருக்கணும்!" என்கிறதை இதுலேயிருந்து புரிஞ்சிக்குதாம். புரிஞ்சிக்கிட்டு, உடனடியா தனக்குள்ளே இருக்கிற 'டானின்ங்கற நச்சு உற்பத்தியை அதிகரிச்சுடுது. விஷம் அதிகமாப் போயிடறதாலே அதைக் கடிக்கிற மிருகங்கள் செத்துப் போவுது.

ஆகக்கூடிய "எத்திலீன் வாயு ஏன் உற்பத்தியாகுதுன்னு பார்த்தா?"

"எதிரிகள்... ஜாக்கிரதை"ங்கற சேதியை மற்ற மரங்களுக்குத் தெரிவிக்கிறதுக்குத்தான்.

"ஷுகர் மேப்பிள்", அப்படின்னு ஒரு மரமாம். அதுவும் இதே மாதிரி பாணியிலே எதிரிகளை சமாளிக்குதாம்.

இதையெல்லாம் கேள்விப்படும் போது. நாம இனிமே மரங்கள் கிட்டேயும் ஜாக்கிரதையா பழகணும் போல இருக்கு.

ஒரு காட்டுலே திருட்டு மரம் வெட்டறதுக்காகப் போனான் ஒருத்தன். பகல் நேரத்துலேயே அவன் காட்டுக்குப் போயிடுவான். இருட்டுற வரைக்கும்.

தன்னைச் சுத்தி செடி கொடிகளை எடுத்து சுத்திக்கிட்டு ஒரு புதர் செடி மாதிரி ஒரு இடத்துலே அசையாமே உட்கார்ந்துக்குவான். பாக்கறவங்க ஏதோ ஒரு புதர் செடின்னுதான் நினைப்பாங்க. நல்லா இருட்டினதுக்கு அப்புறம் வெளியே வந்து தன் வேலையை ஆரம்பிப்பான். அதுமாதிரி இவன் ஒரு நாள் அங்கே போய் புதர்மாதிரி உட்கார்ந்திருந்தான்.

இருட்டினதுக்கு அப்புறம் மெதுவா வெளியே வர ஆரம்பிச்சான். அப்போ பக்கத்துலே இருந்த இன்னொரு புதர் செடி மெதுவா இவன் பக்கம் நகர ஆரம்பிச்சுது.

என்னது செடி நகர்ந்து வருது? இவன் அதைப் பார்த்ததும் பயந்துட்டான்.

"ஐயோ... என்னை மன்னிச்சுடு செடியே...! உனக்கு எல்லாம் உணர்வு உண்டுன்னு இன்று ஒரு தகவல்லே கேட்டிருக்கேன். இப்பதான் அதை நேர்லே பார்க்கிறேன். இனிமே காட்டுலே மரமே வெட்ட மாட்டேன். என்னை மன்னிச்சுடு!" என்று கத்தினான்.

இப்ப அந்த செடி பேசிச்சு!

"அது எப்படிடா மன்னிக்கமுடியும்? உன்னை பிடிக்கறதுக்காக மூணு நாளா அன்னம் – ஆகாரம் இல்லாமே இதுக்குள்ளே உட்கார்ந்திருக்கேன்" அப்படின்னு சொல்லிக்கிட்டே அதுக்குள்ளேயிருந்து எழுந்திரிச்சி வெளியே வந்தார் காட்டிலாகா அதிகாரி.












"புலவரே உங்கள் பாட்டில் கூர்மை இல்லை!"

"மன்னா.! உங்களை புகழ்ந்து பாடி பாடி வரிகள் எல்லாம் மொக்கையாக போய்விட்டது மன்னா!"



"தலை இருக்க வால் ஆடக்கூடாதா? என்ன சொல்கிறீர்கள் மந்திரியாரே?"

"உங்கள் உடலில் தலை இருக்க வேண்டுமெனில் உங்கள் வாள் ஆடக்கூடாது என்று எதிரி மிரட்டி ஓலை அனுப்பியுள்ளான் மன்னா!"

தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91, விஜேராம மாவத்தை, கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி: thamilandharbar@yahoo.com

சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து "தமிழன் தர்பார்" பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.



காரைக்கவி

# சீத்துவக்கேடு 148

சுருட்டைப் பத்தி ரெண்டு இழுவை இழுத்த அப்பு பங்கார் பொழுது கோடியுக்கை போட்டுது எண்டபடி கிணத்தடிக்குப் போய் கைகால் முகம் கழுவித் தோளில கிடந்த துவாயாலை துடைச்சுப் போட்டு வீட்டு வாசலிலை தொங்கின வீபூதிக் குட்டானிலை இருந்து வீபூதியை எடுத்து கிழக்கை பாத்துக் கொண்டு நிண்டு கொண்டு சிவசிவா எண்டு சொல்லிப் பூசினார்.

அப்பு வீபூதிக் குறியை இழுத்துப் போட்டு நிக்கேக்கை எலெக்சன் நேரத்தில தார் றோட்டில வெள்ளைப் பெயின்ரால எழுதினமாதிரி நல்ல துலக்கமா இருக்கும்.

வீபூதியைப் பூசினவர் நெருப்பெட்டியும் தேங்காயெண்ணெய்ப் போத்திலுமா படலையுக்கை இருக்கிற வைரவருக்கு போய் விளக்குக் கொளுத்திப் போட்டு தேவாரம் பாடிப் போட்டு வந்தார்.

முந்தி உப்பிடி கனபேர் தங்கட படலையுக்கை இல்லாட்டில் வளவுக்கை வேப்பமரத்துக்கு கீழை வைரவரை வைச்சு ஆதரிச்சவை.

மச்சம் சாப்பிடுகினமோ இல்லை, மரக்கறி சாப்பிடுகினமோ ஒவ்வொருநாளும் வைரவருக்கு விளக்கு கொளுத்துவினம். சிலர் கற்பூரம் கொளுத்துவினம்.

நல்ல நாள் பெருநாள் எண்டால் அவருக்குக் சுத்தபத்தமா இருந்து பொங்குவினம். வருசத்தில ஒருநாள் எப்பிடியும் மடை வைப்பினம்.

வைரவர் வழிபாடு எண்டது எங்கட வாழ்க்கையில ஓர் அங்கமா இருந்தது. வைரவருக்கு அடையாளமா சூலத்தை வைச்சு ஆக்கள் கும்பிட்டவை.

ஒவ்வொருநாளும் சூலத்தைக் குளிப்பாட்டி சுத்தவர தண்ணி தெளிக்கிறது எங்கட ஒரு நாளாந்தக் கடைமையாகவே இருந்தது.

உப்பிடி ஆக்கள் வீடுகளிலை வைச்சு வைரவரை கும்பிட்டதை விட வைரவருக்கு எண்டு கன குறிச்சிவழியை தனிக் கோயில்களும் இருந்தது.

சில கோயில்களிலை அலங்காரத் திருவிழாக்களும் நடந்தது.

வீட்டில ஆருக்கும் ஏதும் வருத்தம்





வைரவர் மடை

வாதை கஷ்டம் நஷ்டம் எண்டால் வைரவருக்கு நேத்தி வைச்சு, விளக்கு கொளுத்தி, கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைச்சு கும்பிட்டால் வந்த வருத்தம் கரைச்சல் எல்லாம் தங்கடை பாட்டில காணாமல் போடும்.

அதமாதிரி பெரிய கோயில்களிலையும் திருவிழா முடிஞ்ச பிறகு வரைவருக்கு பொங்கல், அபிஷேகம், பூசை அருச்சினை எண்டு ஒரே கொண்டாட்டமா இருக்கும்.

கோயிலிலை வைரவருக்கு ஆக்கள் நேத்திக்கடனுக்கு வடைமாலை சாத்திப் பூசையும் செய்விப்பினம்.

நாங்கள் பெடியள் உந்த வடைமாலையை கையாடுறதுக்காகவே வைரவரின்ரை வாசலிலை பூசை முடியும் வரையும் காத்திருந்து ஐயர் சண்டேசுவரருக்கு பூசை செய்யப் போக இஞ்சாலை வடைமாலையைத் தூக்கிக் கொண்டு ஓடிப் போவம்.

இப்பிடி வடைமாலையை கொண்டோடேக்கை ஆளாளுக்கு மாலையை இழுத்து வடையள் சில வேளை மண்ணில விழும்.

அப்பிடி விழுந்தாலும் கூட அவ்வையார் ஊதி ஊதி நாவல் பழத்தை சாப்பிட்டமாதிரி ஊதி ஊதி சாப்பிடுவம். அப்பிடியும் மண் போகேல்லை எண்டால் மண் கிடக்கிற பக்கத்தை பிச்சுப் போட்டு மற்றப் பக்கத்தை சாப்பிடுவம்.

நாங்கள் உப்பிடி வடைமாலையோட ஓட கோயில் வாசலிலை நிக்கிற சின்னன்களும் எங்களுக்குப் பின்னால குண்டியால நழுவுற காச்சட்டையை ஒரு கையால பிடிச்சுக்கொண்டு, ''அண்ணோய் அண்ணோய் எனக்கும் ஒண்டு தாங்கோ'' எண்டு ஓடி வருங்கள். பாக்கப் பாவமாயிருக்கும். அதால பாதி வடை எண்டாலும் குடுப்பம்.

நாங்கள் உந்த வடைமாலையை கழட்டிக்கொண்டு போக உபயகாரர் ஐயருக்கு நல்ல பேச்சுக் குடுப்பினம்.

உதால நாங்கள் வடைமாலையைக் கழட்டி கொண்டுபோகாம இருக்கிறதுக்கு ஐயற்றை பெடி இல்லாட்டில் ஐயரம்மா வைரைவரின்ரை வாசலிலை சென்றிமாதிரி நிப்பினம். அவை இல்லாட்டில் உபயகாரரின்ரை பெடி பெட்டை ஆரும் நிப்பினம்.


அப்பிடியும் சில நேரங்களிலை நாங்கள் வடைமாலையைக் கழட்டிக்கொண்டு போனதால ஐயர் சண்டேசுவரருக்குப் பூசை செய்யப் போகேக்கையை கையோட வடைமாலையை கழட்டிக்கொண்டு போகத் தொடங்கிப்போட்டார்.

பிறகு அதுவே பூசை முறையாகவும் மாறிப் போச்சு.

உதுக்குப் பிறகு எங்கட பெண்டுகள் சிலர் வைரவருக்கு வடைமாலை சாத்தினா சண்டேசுவரருக்குப் பூசை செய்யப் போகேக்கை வடைமாலையைக் கழட்டச் சொல்லி ஆகமத்தில சொல்லி இருக்காம் எண்டு கதைக்கத் தொடங்கிவிட்டினம்.

(தொடரும்)

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம் சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

**மேஷ ராசி அன்பர்களே!**

பணவரவுக்கு குறைவிருக்காது. அவ்வப்போது சிறுசிறு குழப்பங்களின் காரணமாக சற்று சோர்வாகக் காணப்படுவீர்கள். சகோதர வகையில் சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் செலவுகள் ஏற்படும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விடவும் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் மனதில் சோர்வும் அமைதிக்குறைவும் உண்டாகும். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்காது.

**ரிஷப ராசி அன்பர்களே!**

காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்பட்டாலும் விடாமுயற்சியுடன் முடித்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு நீங்கும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வழக்குகளில் பொறுமையும் வழக்கறிஞர்களின் ஆலோசனையும் அவசியம். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த பணஉதவி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்க, கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் உற்சாகமாக பணி செய்வார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக் கடனுதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். கணவருடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுன ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவில்லை. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கி சுமுக உறவு ஏற்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி இருக்கும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். பணவசதி திருப்தி தரும்.

**கடக ராசி அன்பர்களே!**

பணவரவு ஓரளவுக்கே இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். நெருங்கிய உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் சற்று இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். பிள்ளைகள் வகையில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். தந்தையுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது. வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் மனதில் சோர்வும் உடல் அசதியும் உண்டாகும். ஆனால், கணவரின் அன்பு ஆறுதலாக இருக்கும்.

**சிம்ம ராசி அன்பர்களே!**

நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். செலவுகளைச் சமாளிப்பதற்கேற்ப பணவரவும் இருக்கும் என்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். பிள்ளை அல்லது பெண்ணின் திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் மூலம் பண வரவுக்கு வாய்ப்புண்டு. வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். புதிதாக வியாபாரம் தொடங்க நினைப்பவர்கள், அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்க வேண்டி இருக்கும். நெருங்கிய தோழியர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

இந்த வாரம் நீங்கள் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு எவருக்கும் எந்த வாக்குறுதியும் தரவேண்டாம். பொருளாதார நிலை சுமாராகத்தான் இருக்கும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். சகோதரர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் தோன்றக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவுமான முயற்சிகளைத் தவிர்க்கவும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். புகுந்தவீட்டு உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**துலா ராசி அன்பர்களே!**

வருமானம் சுமாராகத்தான் இருக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். முக்கிய முடிவுகள் எடுக்கும்போது ஒருமுறைக்குப் பலமுறை ஆலோசித்து எடுப்பது நல்லது. வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளது. உறவினர்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். அரசாங்க அதிகாரிகளை அணுகும்போது பொறுமை அவசியம். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காதென்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்ற நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படக் கூடும். புகுந்தவீட்டு உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் உடனே சரியாகிவிடும். அரசாங்க வகையில் வீண் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்கவும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பழைய கடன்கள் விடயத்தில் முன்னெச்சரிக்கை தேவை. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆதாயமும் தருவதாக இருக்கும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்க வேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவம்மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். பெற்றோரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கணவன் - மனைவிக்கிடையே சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் உடனே சரியாகிவிடும். சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். சுபச்செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் அலைச்சல் ஏற்பட்டாலும் நல்லபடி முடிந்துவிடும். பிள்ளைகளால் சிறு சங்கடம் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தின் காரணமாக சிலருக்கு சிறு பயணம் செல்ல நேரிடும். மிகக் கவனத்துடன் சென்று வரவும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். உங்கள் பொறுப்புகளைக் குடும்பத்தினர் பகிர்ந்துகொள்வது மகிழ்ச்சி தரும்.

**மகர ராசி அன்பர்களே!**

பணவரவு இருந்தாலும் எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்ப விஷயமாக முக்கிய முடிவு எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். அவர் மூலம் பணவரவுக்கும் வாய்ப்புண்டு. வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான அளவுக்கு அதிகமாகவே பணம் கிடைப்பதால் சேமிக்கவும் முடியும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவு கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டாகும். நீண்ட நாளாக உங்களை வருத்திக்கொண்டிருந்த உடல் உபாதைகள் இனி குணமாகும். செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் ஏற்படும். உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பும் நன்றாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்னை இல்லாத வாரம். கணவருடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும். அவர் மூலம் பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீன ராசி அன்பர்களே!**

பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். மூன்றாவது நபரின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். தந்தையின் உடல் நலனில் கவனம் செலுத்தவேண்டும். சிலருக்குச் சகோதர வகையில் வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் குறைவாகத்தான் இருக்கும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்ப நிர்வாகத்தைக் கவனிக்கும் பெண்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். புகுந்தவீட்டு உறவினர்கள் கண்டிப்பாகப் பேசினாலும் பொறுமை காப்பது நல்லது.

## தமிழன் தொடர்கதை

# யார் அது?

**அத்தியாயம் -05**

**வன்னித் தமிழ் மறவன்**

சீனுவிடம் அண்ணனுடன் பேசிய செல்லைக் கொடுத்த கயல், நிச்சயதார்த்த மேடைக்குச் சென்று மேலிருந்தே அங்கிருந்த கூட்டத்தின் மத்தியில் ராமை தேடினாள்.

ஆனால், ராம் எங்கும் இல்லை என்று உணர்ந்து சீனு, ரமணா இருக்கும் இடத்தை திரும்பிப் பார்க்கவே சீனுவும் ரமணாவும் தங்கள் தலையைக் குனிந்தார்கள்.

அந்த நேரத்தில் கயலின் கண் கலங்கும் போதே கயலின் விரலில் மோதிரம் மாற்றப்பட்டுவிட்டது.

ஒரு வழியாக நிச்சயதார்த்தமும் சிறப்பாக முடியவே, திருமண நாளும் அடுத்த முகூர்த்தத்தில் முடிவுசெய்யப்பட்டது,

அடுத்த முகூர்த்தம் இன்னும் ஐந்து நாட்களில் இருக்கிறது. திருமணம் இன்னும் ஐந்து நாட்களில் என்று சீனுவுக்கு தெரியவரவே ஒரு நிமிடம் ஆடிப்போய்விட்டார்கள்.

ஐந்து நாட்களில் திருமணம் என்றால் தேவ் எப்படி திருமணத்திற்கு வருவான். அவனால் வர முடியாதே என்று சிந்தித்தவாறே ராமுக்கு கோல் பண்ணி நடந்ததைக் கூறினான் சீனு.

“சீனு ஓகே பரவாயில்லை. இதை எப்படி சமாளிச்சமோ அதேபோல் மேரேஜையும் சமாளிப்போம்.’’

“அது சரி, யார் கயல் கூட பேசியது. அவ அண்ணன்போல். அவ அப்படியே நம்பிட்டா.”

“இவ்வளவு காலம் கூடவே இருக்கிற எனக்கு அவன்போல் பேச வராதா என்ன? ஆனாலும் கயல் ஏதோ சந்தேகமா பேசியதுபோல்தான் இருந்தது.

கயல் அண்ணன் கிட்ட பேசுறதுபோல் பேசல. ஏன்னா நான் அவள் தேவ் கூட பேசும்போது பக்கத்தில நிண்ணு இருக்கேன். ஏதோ வித்தியாசமாவே இருந்தது.”

“சரி ராம். அது நடந்து முடிஞ்சுது. இப்போ நடக்கப்போவதை பார்ப்போம் விடு.”

“ஓகே டா எல்லாம் முடிய எல்லா வேலையும் முடிச்சுட்டு வாங்கடா. நான் தேவை பாத்துகிறேன்” என்று கூறி செல்லை வைத்தான் ராம்.

பின்பு கயல் வீட்டில் இருக்கும் அத்தனை வேலைகளையும் பார்த்துக்கொண்டார்கள். அப்போது தேவ் அம்மா சீனுவிடம் வந்து,

“சீனு ஏன்பா நீங்க எந்த பணமும் எங்கிட்ட வாங்கவே இல்லயே.”

“தேவை இல்லம்மா. தேவ் போகும்போதுஅவன் ஏரிஎம் கார்ட்டை எங்கிட்ட கொடுத்துட்டுத்தான் போனான். அவனே எல்லா செலவும் பாத்துக்கிட்டான்.”

“சரிப்பா நீங்களும் வந்து சாப்பிடுங்க.”

“சரிம்மா வாறோம்” என்று கூறிவிட்டு இருந்த வேலைகளை முடித்துவிட்டு சாப்பிடுவதற்கு சீனுவும் ரமணாவும் போனார்கள்.

அதேசமயம், வைத்தியசாலைக்கு வந்த ACP எடிஷ் நேராக வைத்திய அறைக்குச் சென்று தேவ் மேடர் கேஸ் பற்றி விசாரித்துவிட்டு வெளியே நின்ற ராமை அழைத்தார்.

உள்ளே சென்ற ராமைப் பார்த்து,

‘‘ஏன் அவனை கொலை செய்ய முயற்சித்தாய்?’’ என்று முறைத்தபடியே கேட்டதும் ஏதுமே புரியாமல் மலைத்துப்போய் நின்றான் ராம்.

“சார். அவன் என் உயிர் நண்பன். அவனுக்காக என் உயிரை கொடுப்பனே தவிர அவன் உயிரை எடுக்க கனவிலும் நினைக்க மாட்டேன்” என்றதும்,

எழுந்து ராம் அருகில் வந்த ACP எடிஷ் ராமின் தோளை தட்டி

“நண்பன் என்றால் இப்படி இருக்க வேணும்.



உன்னைப்பற்றி விசாரித்தேன். நண்பனுக்காக எவ்வளவு போராடுகிறாய் என்று. எனக்கு இப்படி ஒரு நல்ல நண்பன் இல்லையே என்று இன்று கவலைப்படுகிறேன். உன்னையும் தேவையும் பார்த்த பின், பொலிஸ் என்றால் கண்ணோடு சேர்த்து மேலதிகமாக சந்தேகக்கண் இருக்க வேண்டும். நான் உன்னை வேண்டுமென்றே அப்படி கேட்டேன். நீ அவனை கொலை செய்ய துரும்பளவும் நினைக்க மாட்டாய் என்று இன்று வைத்தியர் கூறியதை கேட்டே முடிவு செய்துவிட்டேன்,வேறு யார் சம்பவ இடத்தில் இருந்தது?”

“நான், தேவ், சீனு, ரமணா. நாங்கள் நான்கு பேருமே நண்பர்கள்தான் சார். சம்பவ இடத்தில் நாங்கள் நான்கு பேரும்தான் இருந்தோம். வேறு யாரும் இல்லை சார்.”

“இண்ணைக்கு ராமின் தங்கைக்கு நிச்சயதார்த்தம் சார். அவங்க ரெண்ணு பேரும் அங்கதான். இருக்கும் சின்ன சின்ன வேலைகளை செய்து தேவ் இடத்திலிருந்து அவங்கதான் பாத்துகிறாங்க.”

“ஓகே ராம். அவங்களுக்கு எப்போ வேலை எல்லாம் முடியும்?”

“மாலை எல்லாம் முடிஞ்சுடும் சார்”

‘‘ராம் உங்க செல்லை கொஞ்சம் கொடுங்க. சீனு, ரமணா அவங்க எண்ணைப் பார்க்கணும்’’ என்று ராமின் செல்லை வாங்கி அவர்கள் எண்ணைப் பார்த்த பின்,

“மாலை ஸ்டேசனுக்கு வாங்க மூணு பேரும். கொஞ்சம் தகவல் எடுக்கணும்.’’

‘‘நோ நோ நீங்க சொல்லுறத பாத்தா, மூணு பேரும் கொல பண்ண ட்ரை பண்ணி இருக்க வாய்ப்பு இல்ல. அப்போ இது யாரோ மூணாவது ஆளாத்தான் இருக்கணும், சோ ஸ்டேசன் வேணாம். இதை பேர்சனலா பார்ப்போம். ஓகே. மாலை ஒரு ஹோட்டல் நேம் சொல்லுறேன். மூணு பேரும் அங்கே வாங்க பேசிக்கலாம்.”

“ஓகே சார். கட்டாயம் அவங்க இரண்டு பேரையும் கூட்டிக்கிட்டே வாரேன்”என்று கூறியதும், ACP எடிஷ் வைத்தியசாலையை விட்டு வெளியேறினார்.

உடனே சீனுவிற்கு கோல் செய்த ராம்,

“சீனு டேய், இப்போதான் ACP எடிஷ் ஹொஸ்பிட்டல் வந்து என்கூட பேசினார். மாலை எல்லா வேலையும் முடிய, அவர் சொல்லும் ஹோட்டலுக்கு நாம மூணு பேரும் போகணும். நடந்ததை அவர்கிட்ட சொல்லணும். அப்போதான் இந்த சம்பவத்துக்கு யார் காரணம் என்று கண்டுபிடிக்கலாம்” என்றான்.

“சரிடா ராம். நாங்க ஆறு மணிபோல வாறோம். நீயும் வா. தேவை டாக்டர், நேர்ஸ் பாத்துப்பாங்க.”

“சரிடா. சார் எந்த ஹோட்டல் என்று கூறியதும் சொல்லுறேன். சீக்கிரமா வந்துடுங்கடா” என்று பேசி விட்டு செல்லை வைத்தார்கள் சீனுவும் ரமணாலும்.

அங்கே ஆயத்தமான உணவை உண்ட அவர்கள் கயலிடம் சென்று ஒரு கிப்ட் பொக்ஸ்ஐ கொடுத்து, ‘‘இது உன் அண்ணன் உன்னிடம் கொடுக்க சொன்ன கிப்ட்’’ என்றும்,

அடுத்த பொக்ஸ் ஐ கொடுத்து, ‘‘இது ராம் கொடுத்த கிப்ட்’’ என்றதும்

“எனக்கு இது வேண்டாம். அவரால் ஏன் வர முடியவில்லை. எவ்வளவோ எதிர்பார்த்தேன். பாசம் வைச்ச அண்ணணும் இல்ல. ராமும் இல்லை” என்று கண் கலங்கவே,

கயலை ரமணாவும் சீனுவும் சமாளித்து கிப்டை கொடுத்தார்கள்.

அடுத்த பொக்ஸ் ஐ கொடுத்து

“இது எங்கள் இருவரின் கிப்ட்” என்று கூறிவிட்டு,

“கயல் நாங்க புறப்படுறோம்மா. எல்லா வேலையும் முடிஞ்சு ஏதும் அவசரம் பிரச்சினை என்றால் கோல் பண்ணுங்க. உடனே வாறோம்.”

“ஒகே அண்ணா. பத்திரமா போய் வாங்க” என்று சொன்னதும், அப்படியே தேவ்வின் அம்மாவிடம் வந்து, போய் வருகிறோம் என்று கூறிவிட்டு புறப்பட்டார்கள் சீனுவும் ரமணாவும்...

**தொடரும்**

## சொல்ல மறந்த கதை-05
## 1825-1898
## (தென்னிந்தியாவில்)

*வழியனுப்ப முடியாம*
*வானம் அழுகுகிறதே....*
*வானத்தில பறக்கும் அந்த*
*கோட்டானும் குருவிகளும்...*
*இறக்கைகள பிச்சிக்கிட்டு...*
*கூவி கூவி கத்துதுவே....*

*தூத்துக்குடி கடக்கறையில்....*
*கறையொதுங்கி வந்திருக்கும்*
*மீன்கள போல் இங்க...*
*மணல் மேட்டில் ஒக்காந்து...*
*ஓலம் விடுகுதய்யா...*
*பொழைக்க போகும்..*
*ஏழ சனம்....*

*கையில் ஒரு காயம்பட்டா...*
*கத்தி ஏதும் கிழிச்சிப்புட்டா...*
*மண்ண கொஞ்சம் அள்ளி*
*வெச்சா...*
*பட்ட காயம் பறந்திடுமே.....*

*பாசமுள்ள மண்ண விட்டு...*
*பொறந்த இந்த நாட்டவிட்டு...*
*போகும் நெல வந்துருச்சே....*
*வேதனயும் சூழ்ந்துருச்சே....*

*கண்ணத்துல கைய வச்சி...*
*கப்பளொன்னு கவுந்தத போல்..*
*கப்பளுக்கு காத்திருக்கா...*
*வெகுளி மவ மூக்காயி...*

*அவ வவுத்தில்.வளரும்*
*புள்ள எட்டி எட்டி ஒதக்கிதுங்க...*
*தூராதேசம் வேணாமின்னு...*
*அந்த சீவன் சொல்லுதுவோ....*

*வருங்காலம் என்னாகுமுனு..*
*எண்ணி கொஞ்சம் பாக்கயில..*
*மூக்காய கேக்காம மூக்கு*
*வேர்குதுங்க....*

*சுருட்டு ஒன்ன பத்தவச்சி..*
*வெந்து போகும் நெஞ்ச*
*இப்போ..*
*பொக விட்டு ஆத்திக்கிறா...*
*அவ புருசே முடியாண்டி....*

*இவிங்கலோட சேந்து இங்க...*
*பயணவச்ச கூட்டத்துல..*
*ஒரு செலர சொல்லுகிறே.*
*ஒரு வாட்டி கேட்டுக்குங்க....*

*அருக்காணி அக்காமவ...*
*பாப்பாத்தி வந்துருக்கா...*
*அவளோட சேத்து புள்ள*
*ரெண்டும் கூடருக்கு.....*

*வெரகு பொறக்கிவர அவ*
*புருசே*
*ஒருநாள் காட்டுப்பக்கம்*
*போயிருந்தா.*
*போன பய*
*திரும்பவில்ல..பொணமாத்தா*
*திரும்பி வந்தா....*

*வாழ வழி இல்லயினு.*
*சீமக்கி போயி சரி*
*நாளு காசு பாக்கலானு*
*அவளும்*
*பயணவச்சா....*

*நொண்டி அண்ணே..கோபாலு..*
*அவர் வீட்டுக்காரி*
*செல்லத்தாயி....*
*பூசாரி முருகையா*
*அவரும் வந்துருக்கார்....*

*இவிங்கலோட சேந்து*
*இன்னும் நெரய சனம்...*
*சீம போகும் கப்பலுக்காய்..*
*ரொம்ப நேரம் காத்திருக்கு....*

*இப்ப கப்பல் வந்திடுமா*
*இன்னும் நேரம் ஆகிடுமா...*
*போய் சேறும் காலமெது...*
*கொல சாமி கொஞ்சம்*
*சொல்லு...*

**(சொல்ல மறந்த கதை இன்னும் சொல்லப்படும்)**

**தொடரும்...**

**எம்.ராமதாஸ்**
**இறம்பொடை**



## தமிழன் சிறுகதை



# கண்கெட்ட பின்

அவளால் சற்றும் கூட எழுந்திருக்க முடியவில்லை. அந்தளவுக்கு உடல் நிலை மோசமானதாக இருந்தது. சுயமாக எதுவுமே செய்ய முடியவில்லை. இரண்டு பிள்ளைகள் இருந்தபோதும் அவர்கள் அவளை கண்டுகொள்வதில்லை. கிடந்த கிடப்பில் அத்தியாவசிய கழிவுகள் வெளியாகி விடுவதால் அதனை சுத்தம் செய்யவென்று வேலைக்கு அமர்த்தி வைத்திருந்தவள் ஏனோதானோவென்று கழிவகற்றி விட்டு உரிய முறையில் கழுவி விட்டு போகாததால் நாற்றம் வீசிக்கொண்டேயிருந்தது. இதனால் அவளின் அருகில் செல்வதற்கு விரும்பாத பிள்ளைகள் அறைக்குள் மின் விசிறியை போட்டுக்கொண்டு இருந்துவிடுவார்கள்.

ஏதோ அவள் ஆசிரியையாக கடமையாற்றியதால் இப்போது ஓய்வூதியப் பணம் வந்துகொண்டிருந்தது. அதன் தயவால்தான் ஏதோ இங்காவது வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இல்லையென்றால் எங்கோ ஓர் அனாதை மடுவத்தில் ஒப்படைத்திருப்பார்கள். அந்தளவுக்கு அவர்களிடத்தில் ஈவிரக்கம் இல்லாமலிருந்தது.

அவளுக்கு இவைகளை நினைக்க கவலையாயிருந்தாலும் அதற்கு காரணமும் தான் என்று தன்னையே நொந்துகொண்டிருந்த அவளுக்குள் கடந்தகால நிகழ்வுகள் சற்று நிழலாடத் தொடங்கின.

அப்பொழுது அவளுடைய அம்மா மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தாள். அம்மாவுக்கு அவளும் இன்னொரு மகனும் இருந்தனர். உடனே வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்துப் பார்த்த வைத்தியர்கள் இவரை இங்கு வைக்க முடியாது. ஏனென்றால், அவளுக்கு மிகவும் வருத்தம் கூடியிருப்பதால் மாத்திரை மருந்துகளை தருகிறோம். நீங்கள் வீட்டுக்கு கொண்டுசென்று கவனித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட, வைத்தியர்களின் காலை பிடிக்காத குறையாக கெஞ்சிக் கேட்டு சில நாட்கள் வைத்தியசாலையிலேயே வைத்துக்கொண்டபோதும் நிலைமை இன்னும் மோசமடைய, கட்டாயப்படுத்தி வீட்டுக்கே கொண்டு செல்லுங்கள் என்று அனுப்பியே விட்டனர்.

இப்போது தாயை, மகன் வீட்டுக்கா மகள் வீட்டுக்கா கொண்டு செல்வதென்ற வாதம் தொடர ஓரளவுக்கு மனசாட்சியுள்ள மகன், ‘‘பரவாயில்லை. அம்மாவை நானே என் வீட்டுக்கு கொண்டுசெல்கிறேன்’’ என்று மகன் பொறுப்பெடுக்க, பண்புள்ள அவனுடைய மனைவியும் அதனை ஏற்றுக்கொண்டாள். அதன்படி அம்மா மகன் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டாள்.

மகனும் ஓரளவுக்கு நன்கு அம்மாவை பார்த்துக்கொண்டார். அவளான மகள் இடைக்கிடை வருவதும்

‘‘சீ.... என்ன நாற்றமிது... ஒழுங்கா கவனிப்பதில்லையா’’ என்று கேட்டபடி மூக்கை விரல்களால் பொத்திக்கொண்டு உள்ளே ஓடிவிடுவாள்.

இதனால் மகனும் மருமகளும் வேதனைப்பட்டதுடன் நோயில் கிடந்த அம்மாவும் கூட மிகவும் வருந்தினாள். அம்மாவுக்கு இறுதித்தறுவாய் அண்மித்தபோதும் தன்னுடைய மகளை பார்க்கவேண்டும் என்கின்ற ஆசை கொஞ்சமாவது வரவில்லை.

மகனையும் மருமகளையும் சைகையால் அருகில் அழைத்த அம்மா அவர்களின் கரங்களை பிடித்து நன்றி சொல்லிக்கொண்டாள். அதனை பார்த்துவிட்டு ஏதோ தோன்ற,

‘‘அம்மா அக்காவை வர சொல்லட்டா....?’’ என்றான் மகன்.

‘‘வேண்டாமப்பா’’ என்பதுபோல் சைகையால் சொன்னாள் அம்மா. அதற்குப் பிறகு இரண்டு நாட்களே அவளிருந்தாள். பின்னர் யாருக்கும் சிரமமில்லாமல் இந்த உலகைவிட்டு விடைபெற்றுச் சென்றாள்.

அதனைக் கேள்விபட்டு கோபத்துடன் வந்தவள்,

‘‘என்ன, அம்மா இழுத்திட்டு கெடந்தப்போ என்கிட்டே சொல்லியிருக்கக்கூடாதா. அம்மா என்னை பார்க்க எவ்வளவு ஆசைப்பட்டிருக்கும்’’ என்று கொதிக்க,

‘‘அம்மாகிட்டே கேட்டேன் உன்கிட்டே சொல்லி யனுப்பவா என்று. ஆனால், அதற்கம்மா வேண்டாம் என்று சொல்லி விட்டாள். அதுதான் நான் சொல்லி ҭனுப்பவில்லை’’ என்றான் மகன்.

அதனை கேட்டவளுக்கு சற்று அவமானமாக இருந்தபோதும் அதனை காட்டிக்கொள்ளாமல் சமாளித்துக் கொண்டாள் அவள்.

இப்போது அவளுக்கு அதே நிலைமை. அவளை இரண்டு பிள்ளைகளுமே பார்க்க பின்வாங்கினர். கனவனும் ஏற்கனவே இறந்து போனதால் அவளின் நிலைமை நோயைவிட பரிதாபமாக இருந்தது.

இந்த நிலைமைக்கு தன்னுடைய முன்மாதிரியே காரணம் என்பதை உணர்ந்தும்,

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு என்பதைபோல் அர்த்தமற்றுப் போய்விட்டது.

**புத்தளம் ஸாலிஹ் அஸீம்**



# இயக்குநரான அனுபவம் குறித்து அரவிந்த்சாமி

தமிழ் சினிமாவில் நடிகராக வலம் வந்த அரவிந்த் சாமி, தற்போது இயக்குனராக அவதாரம் எடுத்திருக்கிறார். சமீபத்தில் வெளியான 'நவரசா' ஆந்தாலஜி படத்தில் கோபத்தை மையப்படுத்தி உருவான ரௌத்திரம் பகுதியை அரவிந்த் சாமி இயக்கியிருந்தார்.

இயக்குனராக அறிமுகமானது குறித்து அரவிந்த் சாமி கூறும்போது, '90-களின் ஆரம்பத்தில் இருந்தே இயக்கத்தின் மீது எனக்கு அதிக ஆர்வம் இருந்து வந்தது. நவரசா குறித்து மணிரத்னம் என்னுடன் பேசியபோது நான் அதில் பங்கேற்க முடியுமா, எனக் கேட்டார். நான் அவரிடம் இயக்குனராகவா அல்லது நடிகராகவா எனக் கேள்வி எழுப்பினேன். அது உன்னுடைய தேர்வு தான் என்று கூறிவிட்டார். இப்படித்தான் இயக்குனராக எனது பயணம் ஆரம்பமாகியது.

இயக்குநராக நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். படைப்பை உருவாக்குவதில் எதைப் பற்றியும் எந்த சந்தேகமோ, தயக்கமோ, என்னிடம் சுத்தமாக இல்லை. பல ஆண்டுகளாக நான் பல திறமையான இயக்குனர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் பணிபுரிந்தது தான் அதற்கு காரணம். அவர்கள் தான் என் வழிகாட்டி.

ஆந்தாலஜியில் கோபத்தை நான் தான் தேர்ந்தெடுத்தேன். அதற்கு காரணம் வழக்கத்தை மீறி ஏதாவது செய்ய, கோபம் ஏற்றதாக இருக்குமென்று நினைத்தேன். ஒரு ஐடியா என்னுள் தோன்றியது. கோபம் கிடைத்தால், அதை முன்வைத்து ஒரு கதையை கூறலாம் என்று முடிவு செய்தேன். அது நிறைவுபெற்று, இப்போது எனது படைப்பிற்கு பாராட்டுக்கள் கிடைத்து வருவது, மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது' என்றார்.

# அனு இம்மானுவேலின் கவர்ச்சி அவதாரம்



மலையாள மொழியில் நிவின் பாலி நாயகனாக நடித்த ஆக்சன் ஹீரோ பிஜூவில் அனு இம்மானுவேல் முதன் முதலாக கதாநாயகியாக நடித்தார். தமிழில் 2017 ஆம் ஆண்டு விஷால் நடிப்பில் வெளிவந்த துப்பறிவாளன் படத்தில் நடித்திருந்தார். இதனை தொடர்ந்து இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம் என பல மொழிப் படங்களில் பிஸியாக நடித்து வருகிறார்.

சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளிவந்த நம்ம வீட்டு பிள்ளை படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். இந்த படத்தில் அவர் மாங்கனி என்ற கதாபாத்திரத்தில் குடும்ப பாங்கான ரோலில் நடித்திருந்தார். சமூக வலைத்தளத்தில் ஆக்டிவாக இருக்கும் இவர் அடிக்கடி புகைப்படங்களை வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் சமீபத்தில் கவர்ச்சியான புகைப்படம் ஒன்றை பதிவிட்டு இருக்கிறார்.

# பிஸ்தா



மெட்ரோ படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகர் சிரிஷ். மெட்ரோ படத்தில் அவரது நடிப்பு அனைவராலும் பாராட்டப்பட்டது. அடுத்ததாக சிரிஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் பிஸ்தா. இந்த படத்தில் சிரிஷ் ஜோடியாக மிருதுல்லா முரளி, சைத்தான் படத்தில் நடித்த அருந்ததி நாயர் ஆகியோர் நடித்துள்ளனர்.

கிராமப் பின்னணியில் காதல் கலந்த கொமடி படமாக உருவாகி இருக்கும் இந்த படத்தை எடிட்டர் ரமேஷ் பாரதி இயக்கியுள்ளார். செந்தில், சதீஷ், யோகி பாபு, சென்ராயன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு தரண்குமார் இசையமைத்துள்ளார். இது அவர் இசையமைக்கும் 25-வது படமாகும். விஜயன் முனுசாமி ஒளிப்பதிவு பணிகளை கவனிக்கிறார். சமீபத்தில் வெளியான் இப்படத்தின் டீசர் நல்ல வரவேற்பை பெற்றது.



# மாயன்

தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய 4 மொழிகளில், 'மாயன்' என்ற பிரமாண்டமான திகில் படம் உருவாகி இருக்கிறது. அவுஸ்திரேலிய ஆங்கில படத்திலும், மலேசிய தமிழ்ப் படத்திலும் நடித்த வினோத் கதாநாயகனாக நடிக்க, பிந்து மாதவி, பிரியங்கா மோகன் ஆகிய இருவரும் கதாநாயகிகளாக நடித்துள்ளனர்.

ஜான் விஜய், தினா, கஞ்சா கருப்பு, ஆடுகளம் நரேன், கே.கே.மேனன் ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார் ராஜேஷ் கண்ணா. பாக்ஸ் அண்ட் க்ரோ ஸ்டூடியோஸ் தயாரித்துள்ளது.

படத்தை பற்றி இயக்குனர் ராஜேஷ் கண்ணா கூறியதாவது: ''மாயன் என்றால் காலபைரவனின் பிள்ளை என்று அர்த்தம். உலகத்தில் உள்ள எல்லா உயிர்களையும் ஆக்குபவர்களும், அழிப்பவர்களும் மாயன்களே. அப்பேர் பட்ட மாயன்களுக்கும், நம் மூதாதையர் களுக்கும் புராண காலத்தில் ஒரு உறவு இருந்தது. இதுவே மாயன் படத்தின் கதைக்கரு'' என்கிறார்.

airtel 4G

ரீலோட் பிடியிலிருந்து விடுபடுங்கள்



AIRTEL FREEDOM
PACKS களுக்கு நீங்களும் மாறுங்கள்

ஒரு Reload
ANY TIME 24h 4G Data
Unlimited அழைப்பு நேரம்

| PRICE | VALIDITY | 4G DATA | AIRTEL CALLS | OTHER NETWORK MINUTES | EXCESS USAGE RATE |
|---|---|---|---|---|---|
| Rs. 999 | 30 DAYS | 2GB Per Day (60GB Per Month) | UNLIMITED | 300 | 50 CENTS TAX/MIN |
| Rs. 599 | | 1GB Per Day (30GB Per Month) | | 300 | |
| Rs. 399 | | 500MB Per Day (15GB Per Month) | | 200 | |
| Rs. 199 | | 1GB Per Month | | 100 | |

Work From Home மற்றும் Social Media தளங்களுக்கு செல்லலாம்

இந்த Packs மூலம் எந்தவொரு வலையமைப்பிற்குமான 50 உள்நாட்டு SMS களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 075 5 555555

www.airtel.lk

TRC/AIR/PRO/21/05

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7